சுதந்திரத்

தமிழ் இலக்கணமும்
உரை நடையாக்கமும்



தமிழ் வளர்ந்த மதுரை

பண்டித: எஸ். கேசவராமசாமி....
பண்டித: நா. லெட்சுமிநாரசிம்மன்....

T17549
R005K03
T.17549

ஆரும் பாரம்

இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன்
.... மதுரை .... சென்னை ....

SUDHANTHIRA
TAMIL GRAMMAR
&
COMPOSITION

FORM VI

[Prepared according to the Finalized Syllabus 1949]

Approved by the Text Book Committe, Madras vide
Con. List-Page 26, F. S. G. G. dated 4—5—1955

Pandit S. KESAVARAMASAMY
&
Pandit N. LAKSHMINARASIMHAN

E. M. GOPALAKRISHNA KONE

MADURAI :: TIRUNELVELY :: MADRAS

Rights Reserved] 1955 [Price Rs. 1—4—0

First Edition—1949
Reprinted—1951
„ —1954
„ —1955

நான்முகம்

சுதந்திரத் தமிழ் இலக்கணமும், உரைநடையாக்கமும் என்ற பெயர் கொண்ட இலக்கணநூல் வரிசையில் இது ஆறும் புத்தகமாகும். இது அரசியலார் அண்மையில் வெளியிட்ட புதிய இலக்கணப் பாடத் திட்டப்படி எழுதப் பெற்றது.

மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாத இலக்கணம், மாணவர்க்கு வெறுப்பை விளைப்பது இயல்பாக இருக்கிறது. அவ்வாறு வெறுப்பு விளையாதவாறு எளிய, இனிய நடையில் தெளிவாக இது எழுதப்பெற்றுள்ளது. இலக்கணப் பகுதி தகுந்த உதாரணங்களுடனும், முடிவில் பயிற்சி வினுக்களுடனும் அமைந்துள்ளது. மொழிப் பயிற்சி புதிய முறையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. கட்டுரைப் பகுதி பலவகைத் தலைப்புக்களும், தலைப்புக்களுக்குரிய விளக்கங்களும், மாதிரிக் கட்டுரைகளும் சேர்த்து மாணவரது இயற்கையறிவு மொழிப் பயிற்சியில் வளர்ச்சி பெறும் வழியில் ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது.

இதனைக் கண்ணுறும் தமிழாசிரியர்களும், தலைமையாசிரியர்களும் தங்கள் தங்கள் கலாசாலைகளில் பாடமாக வைத்து, எம்மை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
ஆசிரியர்கள்.

எக்ஸேல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:- 55

உள்ளுறை

இலக்கணம்

(பொது)

பொருள் பக்கம்

I எழுத்து :

(1) எழுத்தின் இடப் பிறப்பு ... 1

(2) இன வெழுத்துக்கள் ... ,,

(3) மொழிமுதல் எழுத்துக்கள் ... 2

(4) மொழியீற்றெழுத்துக்கள் ... 4

II சொல் :

(1) இயற்சொல் ... 6

(2) திரிசொல் ... ,,

(3) வடசொல் ... 7

(4) திசைச் சொல் ... 8

தான் தாம் எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள் ... 9

வேற்றுமை ... ,,

சாரியைகள் ... 13

விளியேற்காத பெயர்கள் ... ,,

உருபு மயக்கம் ... 14

(5) வினைச்சொல்

1 காலங்காட்டும் முறைகள்—இடைநிலை, பகுதி, விகுதி ... 15

2 தெரிநிலை குறிப்பு வினைகள் ... 17

3 பலவகை வினையெச்சங்களின் வாய்பாடுகள் ... 19

III பொது :

(1) செய்யுள் விகாரங்கள் ... 21

(2) சொல் முடிபு—பெயரும் வினையும் முடியும் முறை ... 22

IV புணர்ச்சி :

(1) குற்றியலுகரப் புணர்ச்சி ... 25

சிறப்பு விதிகள் ... 26

(2) தேன் என்ற சொல் புணரும் முறை ... 30
அகம் என்ற சொல் புணரும் முறை ... 31
(3) ணகர னகரங்கள் கெடுதல் ... 32
ல, ள வீற்றுப் புணர்ச்சி ... 33
(4) சாரியைகள் ... 40
(5) பல, சில எனும் இவை புணரும் முறை ... ,,

V யாப்பு:

(1) எதுகை, மோனைகளின் பொது இலக்கணம் ... 42
(2) அடிவகை ... 43
(3) இசைப்பாட்டு வகை ... ,,

VI அணியிலக்கணம்:

(1) தன்மை நவிற்சியணி ... 45
(2) உயர்வு நவிற்சியணி ... 46
(3) தற்குறிப் பேற்றவணி ... 47

மொழிப் பயிற்சி

I வாக்கியம்—பலவகைகள் ... 47
II வாக்கிய அமைப்பு ... 49
எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை ... 50
III ஓரே கருத்தைப் பல வுருவ வாக்கியங்களில் வெளியிடுதல் ... 51
IV பத்தியமைப்பு ... 52
V நடை ... 53
VI வழூஉச் சொற்களும் திருத்தமும் ... 56
VII விலக்குதற்குரிய இழி வழக்குகள் ... 57
VIII நிறுத்தக் குறிப்புப் பயிற்சிகள் ... 58
IX மரபு ... ,,
X உவமைகளும் பழமொழிகளும் வைத்தெழுதுதல் ... 58
XI உவமை உருவக மாற்றம் ... ,,
XII வல்லெழுத்து மிகும் இடங்களும் மிகா இடங்களும் ... 60
XIII இடம் விட்டெழுதுதலும் சேர்த்தெழுதுதலும் ... 62

XIV சொற்களை இடம் விட்டெழுதுதலும் சேர்த்தெழுதுதலும் ... 63

(சிறப்பு)

I எழுத்து:

(1) ஐகார, ஔகார, மகர, ஆய்தக்குறுக்கங்கள் ... 64
(2) பிறப்பு—எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு ... 65
(3) மெய்ம்மயக்கம் ... ,,

II சொல்:

(1) ஓரெழுத்தொரு மொழி ... 68
(2) இலக்கணை ... 69
(3) பெயர்ச் சொல் ... ,,
i விளிவேற்றுமையில் அமையும் விகாரங்கள் ... ,,
ii ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள் ... 72
(4) வினைச்சொல் ... 73
i ஐம்பால் வினைமுற்று ... ,,
ii சினைவினை முதல்வினை ... ,,
iii ஆக்கவினை ... 74
(5) இடைச்சொல்.
அந்தில், ஆங்கு, மா முன்னிலையசைச் சொற்கள் ,,

III பொது:

(1) இடைப் பிறவரல் ... 75
(2) வினா வகை ... ,,
(3) விடை வகை ... 76
(4) அடைமொழி ... 77
(5) பொருள் கோள் ... ,,

IV புணர்ச்சி:

(1) மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி ... 81
(2) வினா, சுட்டுக்களின் புணர்ச்சி ... 83
(3) செய்யுளுக்கேற்ற சிறப்பு விதிகள் சில ... 84
(4) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி ... 85

V யாப்பு:

(1) தளை வகைகள் ... 86
(2) எதுகை மோனை வகைகள் ... 90
(3) கட்டளைக் கலித்துறை, தாழிசைகளின் இலக்கணம் ... 92
(4) பாவினங்களின் பொது இலக்கணம் ... 95

VI அணி:

(1) பிறிது மொழிதல் ... 96
(2) கருத்துடை யடைமொழியணி ... 97

VII பொருளிலக்கணம்:

(1) அகப்பொருள்: முதல், கரு, உரிப்பொருள் இவை எனல் ... 98
(2) புறப்பொருள்: திணைகள் ... 100

உரைநடையாக்கம்

I ஐந்தாம் பாரக் கட்டுரை வகை:

i உரையாடல் ... 102
ii ஒரு சொற்பொழிவைப்பற்றிய மதிப்புரை ... 104
iii இலக்கியப் பாராட்டுக் கட்டுரை ... 106
iv தீர்மானங்களைத் தயாரித்தல் ... 107
v வரவேற்புரை ... 108

II ஆறும் பாரக் கட்டுரைப் பகுதி:

(1) நாடகம் ... 109
(2) மாணவர் பள்ளியாட்சி மன்ற நிகழ்ச்சி ... 113
(3) மாணவர் மன்றத்தின் ஆண்டறிக்கை ... 114
(4) வானொலிச் சொற்பொழிவு ... 116
(5) துணை விதிகள் வகுத்தல் ... 121
(6) தேர்தல் அறிக்கை ... „
(7) பழம் பாடப் பயிற்சி ... 122

சுதந்திரத்

தமிழ் இலக்கணம்

ஆறாம் பாரம்

—(:–:)—

(பொது)

I. எழுத்து

(1) எழுத்தின் இடப்பிறப்பு

எழுத்துக்கள் அளவால் வேறுபட்டிருப்பதன்றி ஒலிவகையாலும் வேறுபட்டிருக்கின்றன. அதற்கு அவை பிறக்கும் இடத்தால் வேறுபட்டிருப்பது காரணமாகும்.

உயிரெழுத்துக்கள் கழுத்திலும், மெய்யெழுத்துக்களில் வல்லினம் மார்பிலும், மெல்லினம் மூக்கிலும், இடையினம் உயிரெழுத்தைப் போலவே கழுத்திலும் பிறக்கின்றன. ஆய்தவெழுத்துத் தலையில் பிறக்கின்றது. இவ்வெழுத்துக்கள் பிறக்கும் இடவகையால் வேறுபடுவதன்றி, இவற்றை உச்சரிக்கும் முயற்சி வகையாலும் வேறுபடும்.

(2) இனவெழுத்துக்கள்

உச்சரிப்பு, வடிவம், பிறப்பிடம், ஒலிவகை, அளவு முதலியவற்றால் ஒருவாறு ஒத்திருக்கும் எழுத்துக்கள் இனவெழுத்துக்கள் எனப்படும்.

ஒவ்வொரு குற்றெழுத்திற்கும் அதனையடுத்து நிற்கும் நெட்டெழுத்து இனவெழுத்தாகும். ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனமாம்.

அ-ஆ, இ-ஈ-ஐ, உ-ஊ-ஔ, எ-ஏ, ஒ-ஓ.

மெய்யெழுத்துக்களில் ஒவ்வொரு வல்லெழுத்திற்கும் அதனை யடுத்து நிற்கும் மெல்லெழுத்து இனவெழுத்தாகும். இடையெழுத்தாறும் தனிப்பட்டவையாதலின் அவை ஓரினமாம்.

க்-ங், ச்-ஞ், ட்-ண், த்-ந், ப்-ம், ற்-ன், ய்-ர்-ல்-வ்-ழ்-ள்.

(சூ-ம்) தான முயற்சி யளவு பொருள் வடி(வு)
ஆனவொன் றாதியோர் புடையொப் பினமே.

(3) மொழி முதல் எழுத்துக்கள்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் மொழி முதல் எழுத்துக்கள் எனப்படும். உயிரெழுத்துக்களும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்னும் உயிர் மெய் வர்க்கத்தைச் சேர்ந்த வெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) அணி, ஆண்டு, இனிப்பு, ஈகை, உரல், ஊக்கம், எண், ஏரி, ஐயர், ஒன்று, ஓட்டம், ஔவியம் (ஔவியம் = பொறாமை.)

உயிர்மெய் வரிசையில் ககர வர்க்கத்தைச் சேர்ந்த பன்னிரு உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) கம்பு, காசு, கிளி, கீரை, குளம், கூடம், கெண்டை, கேணி, கைப்பு, கொக்கு, கோட்டை, கௌவுதல்.

சகர வர்க்கத்தைச் சேர்ந்த பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) சங்கு, சாப்பிடு, சிரங்கு, சீப்பு, சுக்கு, சூடு, செல், சேரி, சைலம், சொல், சோம்பல், சௌக்கியம் (சைலம்—மலை.)

தகர வர்க்கத்தைச் சேர்ந்த பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) தமிழ், தாண்டு, தினம், தீனி, துவர்ப்பு, தூங்கு, தெளிவு, தேன், தையல், தொங்கு, தோட்டம், தௌவை.
(தௌவை = தாய்.)

நகர வர்க்கத்தைச் சேர்ந்த பன்னிரண்டு உயிர்மெய் யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) நண்டு, நாக்கு, நிலம், நீர், நுங்கு, நூறு, நெல், நேற்று, நைதல், நொண்டி, நோக்கம், நௌவி (நைதல் = துன்புறுதல், நௌவி = மான்)

பகர வர்க்கத்தைச் சார்ந்த பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) பழம், பாடம், பிறகு, பீடம், புண், பூசை, பெண், பேசு, பையன், பொன், போக்கு, பௌவம். (பௌவம் = கடல்.)

மகர வர்க்கத்தைச் சார்ந்த பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்) மண், மான், மின்னல், மீன், முன்னால், மூடி, மென்மை, மேன்மை, மொச்சை, மோசம், மௌலி. (மௌலி = கிரீடம்.)

வகர வர்க்கத்தில், வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ என்னும் எட்டு உயிர்மெய் எழுத்துக்கள் மட்டும் மொழிக்கு முதலில் வரும். வு, வூ, வொ, வோ என்னும் நான்கு எழுத்துக்கள் வாரா.

(உ-ம்) வண்டி, வானம்பாடி, விரல், வீடு, வெள்கு, வேட்கை, வையகம், வௌவால்.

யகர வர்க்கத்தில், ய, யா, யு, யூ, யோ, யௌ என்னும் ஆறு உயிர்மெய் எழுத்துக்கள் மட்டும் மொழிக்கு முதலில் வரும். மற்ற ஆறும் மொழிக்கு முதலில் வாரா.

(உ-ம்) யவனர், யார், யுகம், யூகம், யோகம், யௌவனம்.

ஞகர வர்க்கத்தில், ஞ, ஞா, ஞெ, ஞொ என்னும் நான்கு உயிர்மெய் எழுத்துக்கள் மட்டும் மொழிக்கு முதலில் வரும். மற்ற எட்டு எழுத்துக்களும் வாரா.

(உ-ம்) ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல். (ஞெகிழி = நெருப்பு, ஞொள்கல் = இளைத்தல்.)

ஞிமிறு என்றொரு வார்த்தை யிருப்பதால் ஞி என்ற எழுத்தும் மொழிக்கு முதலில் வரும் என்பர் சிலர். (ஞிமிறு = வண்டு.) மிஞிறு என்ற சொல் போலியாக ஞிமிறு என்றானது. ஆகையால் அதனை மொழிக்கு முதலெழுத்தாகக் கொள்ளுதல் தவறு என்று மறுப்பதற்கு இடமுண்டு.

ங என்னும் உயிர் மெய்யெழுத்தையும் மொழி முதலெழுத்தாகக் கூறலாம். அவ்வெழுத்துத் தனித்து வாராது. ஆனால் தனக்கு முன்னால் அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களையும், எ, யா என்னும் வினாவெழுத்துக்களையும் கொண்டுவரும்.

(உ-ம்)	அ + ஙனம்	=	அங்ஙனம்	சுட்டு
	இ + ஙனம்	=	இங்ஙனம்	
	உ + ஙனம்	=	உங்ஙனம்	
	எ + ஙனம்	=	எங்ஙனம்	வினா
	யா + ஙனம்	=	யாங்ஙனம்	

(சூ-ம்) பன்னீ ருயிரும் க ச த ந ப ம வய
ஞஙவீ ரைந்துயிர் மெய்யும் மொழிமுதல்.

(4) மொழியீற்றெழுத்துக்கள்

சொல்லின் கடைசியில் நிற்கும் எழுத்துக்களுக்கு மொழியீற்றெழுத்துக்கள் என்று பெயர். அவை, உயிரெழுந்துக்கள் பன்னிரண்டும் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் மெய்யெழுத்துக்கள் பதினொன்றும், குற்றியலுகரம் ஒன்றும் ஆக, இருபத்து நான்கு எழுத்துக்களாம்.

(உ-ம்) உயிர் ஈறு:- பல, பலா மணி, தீ, கொடு, பூ, அரசே, சே, இலை, நொ, போ, வௌ (நொ = நோய், வௌ = திருடு)

எகரம் அளபெடையாக மொழிக்கு ஈற்றில் வருமேயன்றி மெய்யோடு சேர்ந்து வராது.

உயிரெழுத்துக்கள் ஒவ்வொன்றும் தனிச் சொல்லாய் வருமாதலின், ஒவ்வொன்றையும் மொழியீற்றெழுத்தாகவும், மொழி முதலெழுத்தாகவும் கொள்ளலாம்.

(உ-ம்)	அ	=	அந்த
	ஆ	=	பசு
	இ	=	இந்த
	உ	=	உந்த
	ஊ	=	தசை
	எ	=	எந்த
	ஏ	=	அம்பு
	ஐ	=	அழகு
	ஒ	=	ஒப்பாகு
	ஓ	=	மடைபடைக்கும் பலகை
	ஔ	=	பற்றுதல்

மெய்யீறு— உரிஞ், மண், வெரிந், பழம், தேன், வாய், பார், வேல், தெவ், தமிழ், கேள்.

(உரிஞ் = உரிஞ்சுதல், வெரிந் = முதுகு, தெவ் = பகைவன்.)
குற்றியலுகரம் = கரும்பு, அழகு, பந்து.

(சூ-ம்) ஆவி ஞணநம னயரல வழளமெய்
சாயு முகர நாலாறு மீறே.

பயிற்சி வினுக்கள்

1. உயிர், வலி, மெலி, இடை, ஆய்தம் என்ற இவ்வெழுத்துக்கள் பிறக்கும் இடம் யாவை?

2. இனவெழுத் தென்றால் என்ன?

3. உயிரெழுத்துக்களில் இனமாவன யாவை?

4. மெய்யெழுத்துக்களில் இனமாவன யாவை?

5. மொழி முதலெழுத்துக்கள் யாவை?

6. பன்னிரண்டுயிரோடும் மொழி முதலாகும் மெய்கள் யாவை?

7. வ், ய், ஞ், ங்—இம் மெய்கள் எத்தனை எத்தனை உயிரோடு மொழிக்கு முதலில் வரும்?

8. மொழி யிறுதி யெழுத்துக்கள் யாவை?

II சொல்

ஒரு எழுத்து, தனித்து நின்றுவது, பல எழுத்துக்கள் சேர்ந்து நின்றுவது பொருள் தருமானல் அது சொல் எனப்படும்.

(உ-ம்) மா, பூ, வா, போ, நீ — இவை ஓரெழுத்தொரு மொழிகள்.

படி, அணில், கழகம் மன்னவன் — இவை பல எழுத்துக்கள் சேர்ந்த மொழிகள்.

சொல், மொழி, வார்த்தை, பதம் என்பன ஒரே பொருளுள்ள சொற்கள்.

சொல்வகை

சொற்கள் பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என நான்கு வகைப்படும். ஏதேனும் ஒன்றின் பெயரைக் குறித்து நிற்குஞ் சொல் பெயர்ச் சொல்லாகும்.

(உ-ம்) கண்ணன் படிக்கிறுன், குயில் கூவுகிறது

ஒரு பொருளின் வினை நிகழ்ச்சியைக் குறித்து நிற்குஞ் சொல் **வினைச் சொல்** எனப்படும்.

(உ-ம்) கண்ணன் படிக்கிறான். குயில் கூவுகிறது.

பெரும்பாலும் தனித்து வாராமல் சொற்களின் உறுப்பாகச் சேர்ந்து நிற்குஞ் சொல் **இடைச் சொல்** எனப்படும்.

(இடைச் சொல்—பெயர்ச் சொல்லையாவது வினைச் சொல்லையாவது இடமாகக் கொண்டு வரும் சொல்.)

(உ-ம்) கந்தனும், வேலனும் வந்தனர்.
'உம்' என்பது இடைச் சொல்.

பெயர்ச் சொல்லையாவது, வினைச் சொல்லையாவது அடுத்து அதனதன் பண்பை விளக்க உரிமைபூண்டு நிற்கும் சொல் **உரிச் சொல்** எனப்படும். இது பெரும்பாலும் செய்யுளில் வரும்.

(உ-ம்) 1. சால நன்று = மிக நன்று
2. கடி நகர் = காவலையுடைய நகர்

பிற சொல் வகை

இயற் சொல், திரி சொல், வட சொல், திசைச் சொல் என நால் வகைச் சொற்கள் உள.

(1) இயற் சொல்

தமிழ் மொழிக்கே உரிய சொல்லாகிக் கற்றார்க்கும், கல்லாதவர்க்கும் பொருள் விளங்குந் தன்மை யுடையது **இயற் சொல்** எனப்படும்.

(உ-ம்) பொன் - மரம் - நடந்தான் - வந்தான்.

(சூ-ம்) செந்தமி ழாகித் திரியா தியார்க்கும்
தம் பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்.

(2) திரிசொல்

ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களாகவும், பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகவும் அரிதில் பொருள் காணுந் தன்மையனவாய் வருவன **திரி சொற்கள்** எனப்படும்.

(உ-ம்) கிள்ளை-தத்தை-சுகம் என்பவை கிளி என்னும் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்த் திரிசொற்கள்.

வாரணம் என்பது யானை, கோழி, சங்கு முதலிய பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்.

படர்ந்தான், ஏகினன், சென்றன் என்பன போனன் என்ற ஒரு பொருள் குறித்த பலவினைத் திரிசொல். வரைந்தான் என்பது நீக்கினன், கோண்டான், எழுதினன் முதலிய பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்.

சேறும், வருதும் இவற்றில் வரும் றும், தும் என்பன தன்மைப் பன்மை எதிர்காலம் என்ற ஒரு பொருள் குறித்த பல இடைத் திரிசொல்.

கோல் என்பது ஐயம், வின முதலிய பல பொருள் குறித்த ஓரிடைத் திரிசொல்.

சால, நனி, கூர், கழி-(மிகுதி) ஒரு பொருள் குறித்த பல உரித்திரி சொற்கள்.

கடி என்பது காவல், அச்சம், சிறப்பு, மணம் முதலிய பல பொருள் குறித்த ஓருரித் திரிசொல்.

(சூ-ம்) ஒருபோருள் குறித்த பலசோல் லாகியும்
பலபோருள் குறித்த ஒருசோல் லாகியும்
அரிதுணர் போருளன திரிசோல் லாகும்.

(3) வட சொல்

இந்திய நாடு முற்காலத்தில் இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள பகுதிக்குத் தென்னடு என்றும், வடக்கேயுள்ள பகுதிக்கு வடநாடு என்றும் பெயர். தென்னட்டினர் பேசிய மொழி தென் மொழி. வட நாட்டினர் பேசிய மொழி வட மொழி (சமஸ்கிருதம்). இரு வேறு மொழிகள் பேசும் மக்கள் கலந்து உறவாடும்பொழுது, ஒரு மொழிச்சொல், மற்றொரு மொழியோடு கலப்பது இயல்பு. அவ்வாறு தமிழ் மொழியில் கலந்துள்ள வட மொழிச் சொல். **வட சொல்** எனப்படும்.

(உ-ம்) கமலம், மலர்களில் பெரியது.
மகாத்மா காந்தி, மக்களில் சிறந்தவர்.

(வட சொற்கள் தற்சமம், தற்பவம் என இருவகைப்படும்.

தற் சமம்

தமிழ் மொழியில் கலந்துள்ள வட சொல், உச்சரிப்புக் கெடாமல் தமிழ் எழுத்துக்களாலே எழுதப்படுமாயின் அது **தற்சமம்** எனப்படும். (அதற்குச் சமமானது.)

(உ-ம்) வட மொழி உச்சரிப்பு தமிழ் உச்சரிப்பு

கமலம்	=	கமலம்
குங்குமம்	=	குங்குமம்
காரணம்	=	காரணம்

தற்பவம்

தமிழ் மொழியில் கலந்து வழங்கும் வடசொல், தமிழ் உச்சரிப்புக்கு இணங்கச் சிறிது மாற்றித் தமிழ் எழுத்துக்களால் எழுதப் படுமாயின், அது **தற்பவம்** எனப்படும். (அதிலிருந்து பிறந்தது.)

(உ-ம்) வட மொழி உச்சரிப்பு தமிழ் உச்சரிப்பு

பர்வதம்	=	பருவதம்
பத்மம்	=	பதுமம்
ராமன்	=	இராமன்
விஷம்	=	விடம்
புஜம்	=	புயம்
லக்ஷணம்	=	இலக்கணம்
லக்ஷியம்	=	இலக்கியம்

(சூ-ம்) பொதுவெழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்.

(4) திசைச் சொல்

வட மொழிச் சொற்கள் நீங்கலாக இந்துஸ்தானி, தெலுங்கு, சிங்களம், ஆங்கிலம் முதலிய வேறு மொழிச் சொற்களும் தமிழ் மொழியில் கலந்து வழங்கப்படுகின்றன. அவை **திசைச் சொற்கள்** எனப்படும்.

(உ-ம்) இந்துஸ்தானி	=	பசலி, இனும், வாரிஸ்.
ஆங்கிலம்	=	கார்டியன், மோட்டார், ரயில்.
சிங்களம்	=	அந்தோ
தெலுங்கு	=	செப்புதல்
கன்னடம்	=	சிக்குதல்

(சூ-ம்) செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தம்குறிப் பினவே திசைச்சொல் என்ப.

தான், தாம், எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள்

தான் என்னும் பெயர்ச்சொல் உயர்திணை, அஃறிணையாகிய இரு திணைகளுக்கும் பொதுவாக ஒருமை எண்ணில் வருதலின், அது **பொதுப் பெயர்** எனப்படும்.

(உ-ம்) கண்ணன் தான் கண்டதைச் சொன்னான்.
அவள் தான் இருந்த நிலையைச் சொன்னாள்.
சிங்கம் எப்பொழுதும் தான் கொன்றதையே புசிக்கும்.

தாம் என்னும் பெயர்ச்சொல் இரு திணைகளுக்கும் பொதுவாகப் பன்மை எண்ணில் வருதலின், அதுவும் பொதுப்பெயர் ஆகும்.

(உ-ம்) தாம் பாடும் பொழுது உடலசைவு இல்லாமல் பாடும் பழக்கம் சில பாடகரிடமே காணப்படுகிறது.

அவை தாமாக எங்கும் செல்வதில்லை.

எல்லாம் என்னும் பெயர்ச்சொல் தன்மை, முன்னிலை, படர்க்கையாகிய மூவிடங்களுக்கும் பொதுவாக வருதலின், அது இடப் பொதுப்பெயர் எனப்படும்.

(உ-ம்) நாங்கள் எல்லாம் பார்த்தோம் — தன்மை.
நீங்கள் எல்லாம் பார்த்தீர்கள் — முன்னிலை.
மனிதர் எல்லாம் உயர்ந்தவர் — படர்க்கை.

வேற்றுமை

1. முதல் வேற்றுமை

இது ஒரு வாக்கியத்தில் எழுவாயாக மட்டும் நிற்கும். **எழுவாய், கருத்தா, வினைமுதல், செயபவன்** என்பன ஒரு பொருட் சொற்கள். இவ்வேற்றுமை வினைமுற்றையாவது, பெயர்ச் சொல்லையாவது, வினாச் சொல்லையாவது பயனிலையாகப் பெற்று முடியும்.

(உ-ம்) இராமநாதன் வந்தான்.
எருது முட்டும். } வினைப் பயனிலை.

அவன் எனது தம்பி.
ஆதிரை ஒரு பெண். } பெயர்ப் பயனிலை.

இந்த நூலின் விலை என்ன ?
நீ யார் ? } வினாப் பயனிலை.

இம் முதல் வேற்றுமை கருத்தாப் பொருளை யுடையது.

(சூ-ம்) எழுவா யுருபு திரிபில் பெயரே
வினைபெயர் வினக்கொளல் அதன்பய னிலையே.

2. இரண்டாம் வேற்றுமை

இவ்வேற்றுமை செயப்படுபொருளில் மட்டும் வரும். இதன் பொருள் **ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை** எனப் பலவகைப்படும். இதன் உருபு ஐ என்பது.

(உ-ம்) வள்ளுவர் திருக்குறளை எழுதினார் — ஆக்கல்
காந்திஜி தீண்டாமையை ஒழித்தார் — அழித்தல்
நாடு சுதந்திரத்தைப் பெற்றது — அடைதல்
அரசர் முடியைத் துறந்தார் — நீத்தல்
செழியன் சிங்கத்தைப் போன்றவன் — ஒத்தல்
கம்பன் கல்வியை உடையவன் — உடைமை

(சூ-ம்) இரண்டா வதனுருபு ஐயே யதன்பொருள்
ஆக்க லழித்த லடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை யாதி யாகும்.

3. மூன்றும் வேற்றுமை

இவ்வேற்றுமை கருவிப் பொருளிலும், கருத்தாப் பொருளிலும், உடனிகழ்வுப் பொருளிலும் வரும். **ஆல், ஆன்**, ஒடு, ஓடு என்பன இதன் உருபுகளாகும்.

(உ-ம்) மரம் வாளால் வெட்டப்பட்டது — கருவி
மாணவரால் நாடகம் நடிக்கப்பட்டது — கருத்தா
அண்ணனோடு தம்பி வந்தான் — உடனிகழ்ச்சி

(சூ-ம்) மூன்று வதனருபு, ஆல், ஆன், ஓடு, ஒடு
கருவி கருத்தா உடனிகழ் வதன் பொருள்.

4. நான்காம் வேற்றுமை

இவ்வேற்றுமை கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய பொருள்களில் வரும். உருபு 'கு' என்பது.

(உ-ம்) பாரி கபிலருக்குப் பரிசில் கொடுத்தான் — கொடை
அறத்திற்குப் பகை அருளின்மை — பகை
கபிலருக்கு நண்பர் பரணர் — நேர்ச்சி
மன்னனுக்கு உரியது மகுடம் — தகுதி
சட்டைக்குத் துணி வாங்கினான் — அதுவாதல்
கூலிக்கு வேலை செய்தான் — பொருட்டு
ஜவகருக்குத் தங்கை விஜய லட்சுமி — முறை

(சூ-ம்) நான்கா வதற்குரு பாகும் குவ்வே
கோடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறை யாதியின் இதற்கிதெனல் பொருளே.

5. ஐந்தாம் வேற்றுமை

நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது, என்பன இவ்வேற்றுமைக் குரிய பொருள்களாம். இன், இல் என்பன இதன் உருபுகளாம்.

ஊரின் நீங்கினன் — நீக்கம்
காக்கையில் கரியது யானை — ஒப்பு
செல்வத்திற் சிறந்தது கல்வி — எல்லை
கல்வியில் பெரியவன் கம்பன் — ஏது

(சூ-ம்) ஐந்தா வதனுரு பின்னும் இல்லும்
நீங்கலொப் பெல்லை ஏதுப் பொருளே.

6. ஆறும் வேற்றுமை

இவ் வேற்றுமை கிழமைப்பொருளில் வரும். இது தற்கிழமை, பிறிதின்கிழமை என்று இரண்டு வகைப்படும். தொடர்புடையதும், ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்கக் கூடியதுமான தன்மையுடையது பிறிதின் கிழமை எனப்படும். பிரிக்க முடியாத நெருங்கிய தொடர்பையுடையது தற்கிழமை எனப்படும். தற்கிழமை, பண்பு உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின்கூட்டம், திரிபினாக்கம் எனப் பலவகைப்படும். பிறிதின்கிழமை—பொருள், இடம், காலம் என மூவகைப்படும். ஒருமைக்கு அது, ஆது என்பனவும், பன்மைக்கு அ என்பதும் உருபுகளாம்.

(உ-ம்) கண்ணனது கருணை —பண்புத் தற்கிழமை
யானையினது துதிக்கை —உறுப்புத் தற்கிழமை
நெல்லினது குவியல் —ஒன்றன் கூட்டத் தற்கிழமை
சேனையது தொகுதி —பலவினீட்டத் தற்கிழமை
நெல்லினது பொரி —திரிபினாக்கத் தற்கிழமை
கந்தனது புத்தகம் —பொருட்பிறிதின் கிழமை
பாரியது பறம்பு —இடப்பிறிதின் கிழமை
இராமனது பிறந்தநாள்—காலப் பிறிதின் கிழமை

(சூ-ம்) ஆறனொருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்புஉறுப்பு
ஒன்றன் கூட்டம் பலவி னீட்டம்
திரிபி னாக்கமாம் தற்கிழ மையும்.
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே.

7. ஏழாம் வேற்றுமை

இது இடப்பொருளில் வரும். ஒரு பெயர் தற்கிழமை, பிறிதின் கிழமையாகிய இரு கிழமைகளிலும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறில் ஒன்றைத் தனக்கு, இடமாகக் கொண்டு வருவது இடப்பொருள் எனப்படும். **கண், இல், உள், இடம்** முதலியன இதன் உருபுகளாம்.

(உ-ம்) i தற்கிழமை :

மாத்தின்கண் இலை இருக்கிறது. —பொருளிடத் தற்கிழமை
வங்காளத்தின்கண் கல்கத்தா இருக்கிறது.—இடமிடத் தற்கிழமை
வருடத்தின்கண் 12 மாதங்கள் உள. —காலமிடத் தற்கிழமை
பூவின்கண் மணமுண்டு. —சினையிடத் தற்கிழமை
கருப்பின்கண் அழகு உண்டு. —குணமிடத் தற்கிழமை
ஆட்டத்தின்கண் அபிநயமுளது. —தொழிலிடத் தற்கிழமை

(உ-ம்) ii பிறிதின் கிழமை :

மரத்தின்கண் காக்கை இருக்கிறது. (பொருளிடப் பிறிதின் கிழமை)
காட்டின்கண் புலி வசிக்கும். (இடமிடப் பிறிதின் கிழமை)
மாலையின்கண் மல்லிகை பூக்கும் (காலமிடப் பிறிதின் கிழமை)
கையின்கண் பணமிருக்கிறது. (சினையிடப் பிறிதின் கிழமை)
இளமையின்கண் செல்வம் கிடைத்தது. (குணமிடப் பிறிதின் கிழமை)
ஆட்டத்தின்கண் பாடப்படுவது பாட்டு. (தொழிலிடப் பிறிதின் கிழமை)

(சூ-ம்) ஏழ னுருபுகண் ணாதி யாகும்
பொருள்முத லாறு மோரிரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொரு ளென்ப.

8. எட்டாம் வேற்றுமை

இவ்வேற்றுமை, **விளித்தற்** பொருளில் வரும். (விளித்தல்—கூப்பிடுதல்) விளித்தல், **சேய்மை விளி, அண்மை விளி** என இரு வகைப்படும். தூரத்திலுள்ளவரை விளிப்பது **சேய்மை விளி** எனப்படும். சமீபத்தில் உள்ளவரை விளிப்பது **அண்மை விளி** எனப்படும்.

(உ-ம்) நண்ப, வருக! — அண்மை விளி
இராமா, ஓடிவா! — சேய்மை விளி
அன்னாய், வருக! — ஈறு திரிதல்
புலவரே, வருக! — ஈற்றில் ஏ மிகுதல்
நண்ப, வருக! — ஈறு குன்றல்
தம்பி, வா! — ஈறு இயல்பாதல்
பெரியீர், வருக! — ஈற்றயல் திரிதல்

(சூ-ம்) எட்டன் உருபே எய்துபெய ரீற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபு மாம்பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தானழைப் பதுவே.

பெயர் உருபேற்கும்போது வரும் சாரியைகள்

சாரியை

சொல்லின் உறுப்புக்கள் ஒன்றோடொன்று சேரும்பொழுது, அவற்றை இணைக்க வரும் தனிப்பட்ட உறுப்பு, சாரியை எனப் படும்.

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, இ, உ, ஐ, கு, ன் முதலியவை பொதுச் சாரியைகளாம்.

(உ-ம்)

அதற்கு	—அது	+அன்	+கு	= அன்	—சாரியை
இருபாற்கு	—இருபது	+ஆன்	+கு	= ஆன்	,,
பூவின்கண்	—பூ	+இன்	+கண்	= இன்	,,
அவற்றை	—அவ்	+அற்று	+ஐ	= அற்று	,,
மரத்தை	—மரம்	+அத்து	+ஐ	= அத்து	,,
இவர் தம்மை	—இவர்	+தம்	+ஐ	+ தம்	,,
எல்லார் நம்மையும்	—எல்லார்	+நம்	+ஐ+உம்	= நம்	,,
எல்லீர் நும்மையும்	—எல்லீர்	+நும்	+ஐ+உம்	= நும்	,,
அவனுக்கு	—அவன்	+உ	+கு	= உ	,,
கோனை	—கோ	+ன்	+ஐ	= ன்	,,

விளியேற்காத பெயர்கள்

நான் முதலிய தன்மைப் பெயர்களும், நீ முதலிய முன்னிலைப் பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும், எ, ஏ, யா என்னும் எழுத்துக்களை முதலா

கப் பெற்றுவரும் வினைப்பெயர்களும், நு என்னும் எழுத்தை முதலாகப் பெற்றுவரும் கிளைப் பெயர்களும் எட்டாம் வேற்றுமை ஏற்பதில்லை.

யான், யாம், யாங்கள், நாம், நாங்கள்	— தன்மைப் பெயர்கள்
நீ, நீர், எல்லீர், நீங்கள்	— முன்னிலைப் பெயர்கள்
தான், தாம், எல்லாம்	— பொதுப் பெயர்கள்
நுமன், நுமள், நுமர்	— கிளைப் பெயர்கள்

அவன், அவள், அவர், அது அவை
இவன், இவள், இவர், இது, இவை } சுட்டுப் பெயர்கள்
உவன், உவள், உவர், உது, உவை

எவன், எவள், எவர், எது, எவை,
ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை, } வினாப் பெயர்கள்
யாவன், யாவள், யாவர், யாது, யாவை,

(மேற் காட்டிய பெயர்கள் எட்டாம் வேற்றுமை ஏற்கா)

உருபு மயக்கம்

ஒரு வேற்றுமையில் சொல்ல வேண்டியதை வேறொரு வேற்றுமையுருபு கொடுத்துச் சொல்வது **உருபு மயக்கம்** எனப்படும். இதனை **வேற்றுமை மயக்கம்** என்றும் கூறுவர்.

எது எந்த வேற்றுமைப் பொருளைத் தருகின்றதோ, அந்த வேற்றுமையாகவே கொள்ளப்படும். இது பெரும்பாலும் செய்யுள் வழக்கில் வரும்.

(உ-ம்) 1. "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட் டவன்ஏக— இந்நகர்க்கே
வாழ்கின்றோம்—"

இங்கு, 'இந்நகரத்தின்கண் வாழ்கின்றோம்' என்று இடப் பொருள் தருவதால் இது இந்நகரின்கண் என்று ஏழாம் வேற்றுமை யுருபு பெற்றிருக்க வேண்டும். ஆனால் இந்நகர்க்கு என்று நான்காம் வேற்றுமையில் வந்துள்ளது. எனினும் இதை ஏழாம் வேற்றுமை யாகவே கொள்ளவேண்டும். இவ்வாறு வேற்றுமை உருபு மாறி வருவதே உருபு மயக்கமாகும்.

2. "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

(காலத்தினால்—காலத்தின்கண்)

3. "அவ்வித்து அழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்."

(தவ்வைபை—தவ்வைக்கு ; தவ்வை=மூதேவி)

4. "ணன வல்லினம் வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்கு"
(வேற்றுமைக்கு—வேற்றுமையின்கண்.)

(சூ-ம்) யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

வினைச் சொல்

(1) காலங்காட்டும் முறைகள்-இடைநிலை, பகுதி, விகுதி

வினைச் சொற்களில் பெரும்பாலும் இடைநிலைகளே காலம் காட்டும். சில வினைச் சொற்களில் விகுதிகளும், மிகச் சிறுபான்மை பகுதிகளும் காலம் காட்டும்.

இடைநிலை

த், ட், ற், இன் என்ற இடைநிலைகள் இறந்த காலம் காட்டும்.

(உ-ம்) படித்தான் — த்
உண்டான் — ட்
சென்றான் — ற்
ஓடினான் — இன்

(சூ-ம்) தடறவொற் றின்னே ஐம்பால் மூவிடத்(து)
இறந்த காலம் தருந்தொழில் இடைநிலை.

ஆநின்று, கின்று, கிறு என்பன நிகழ் காலம் காட்டும்.

(உ-ம்) நடவாநின்றான் — ஆநின்று
வருகின்றான் — கின்று
வருகிறான் — கிறு

(சூ-ம்) ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை இடைநிலை.

ப், வ் என்பன எதிர்காலம் காட்டும் இடைநிலைகளாம்.

(உ-ம்) உண்பான் — ப்
வருவான் — வ்

(சூ-ம்) பவ்வ மூவிடத் தைம்பால் எதிர் பொழு(து)
இசைவினை இடைநிலை யாம்இவை சிலவில.

விகுதி

று, றும், து, தும் என்ற விகுதிகள் இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் காட்டும். டு, டும் என்ற விகுதிகள் இறந்த காலத்தையும், கு, கும் என்ற விகுதிகள் எதிர் காலத்தையும், மின் என்ற ஏவற்பன்மை விகுதியும், வியங்கோள் வினைமுற்றில் இகர விகுதியும், மார் என்ற பலர்பால் படர்க்கை விகுதியும் எதிர் காலத்தையும், ப என்ற பலர்பாற் படர்க்கை விகுதி இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் உம் என்ற வினைமுற்று விகுதி நிகழ் காலத்தையும், எதிர் காலத்தையும், எதிர்மறை விகுதி மூன்று காலங்களையும் காட்டும்.

சென்று	— சென்றேன்
சென்றும்	— சென்றோம்
சேறு	— செல்வேன்
சேறும்	— செல்வோம்
வந்து	— வந்தேன்
வந்தும்	— வந்தோம்
வருது	— வருவேன்
வருதும்	— வருவோம்
உண்டு	— உண்டேன்
உண்டும்	— உண்டோம்
உண்கு	— உண்பேன்
உண்கும்	— உண்போம்
உண்மின்	— உண்பீர்
வாழி	— வாழ்வதாகுக
கொள்மார்	— கொள்வார்
கூறுப	— கூறினர், கூறுவார்
அவன் வரும்	— வருகிறான், வருவான்
அவை வாரா	— முக்காலமும்

(சூ-ம்) றவ்வொ டுகர வும்மைநிகழ் பல்லவும்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவும் கவ்வொ டெதிர்வும்மின் னேவல்
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தம்
செலவொடு வரவும் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே.

பகுதி

சில வினைச் சொற்களில் பகுதி இரட்டித்துக் காலம் காட்டுவதுண்டு.

(உ-ம்) புக்கான் — புகு — புக்கு
விட்டான் — விடு — விட்டு
பெற்றான் — பெறு — பெற்று

2. தெரிநிலை—குறிப்பு வினைகள்

வினைச் சொல் தெரிநிலை வினை, குறிப்பு வினை யென இரு வகைப்படும்.

தெரிநிலை வினை

காலமும், தொழிலும் வெளிப்படையாகத் தெரியும்படி நிற்கும் வினை தெரிநிலைவினை யெனப்படும். (தெரிநிலை— தெரியும்படி நிற்றல்) தெரிநிலை வினையிலிருந்து செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறையும் தெரிந்து கொள்ளலாம். இவற்றுள் செய்பவனும், செயலும், காலமும் வெளிப்படையாகத் தெரியும். விகுதி செய்பவனைக் காட்டும். பகுதி (செயல்) தொழிலைக் காட்டும். இடைநிலை காலத்தைக் காட்டும். கருவியையும், நிலத்தையும், செயப்படு பொருளையும் சந்தர்ப்பத்தை ஒட்டி அறிந்து கொள்ளவேண்டும். (செய் பொருள்—செயப்படு பொருள்).

"மீனாட்சி வீணை வாசித்தாள்" இங்கு வாசித்தாள் என்பதும் தெரிநிலை வினை. வாசி என்னும் பகுதி வாசித்தலாகிய தொழிலைக் காட்டுகிறது. ஆள் என்னும் விகுதி தொழிலைச் செய்கின்ற கருத்தா ஓர் பெண் எனக் காட்டுகிறது. த் என்னும் இடைநிலை இறந்த காலத்தைக் காட்டுகிறது. தொழில் நடந்த நிலம் (இடம்) சபா மண்டபம் என்பதையும், கருவியாக உதவியது வீணை என்பதையும், செய் பொருள் (வாசிக்கப்பட்டது) பாட்டு என்பதையும் குறிப்பால் உணரவேண்டும்.

செயப்படுபொருள் இல்லாத வினைச்சொல்லும் உண்டு. அதைச் செயப்படு பொருள் குன்றியவினை என்பர்.

"வேலன் நடந்தான்" இவ் வினையில் செயப்படு பொருள் அறியக் கூடாமையால் இது செயப்படு பொருள் குன்றிய வினை.

செயப்படு பொருளை அறியக்கூடிய வினையைச் **செயப்படு பொருள் குன்று வினை** என்பர்.

"தியாகராசன் உண்டான்" இங்குச் சோறு என்னும் தின்னப் பட்ட பொருள் அறியக்கிடப்பதால் இது செயப்படு பொருள் குன்று வினை.

(உ-ம்) **தெரிநிலை வினை**

செய்தான் படித்தாள் காட்டினார் தின்றது மிதித்தன	செயப்படு பொருள் குன்று வினை
ஓடினான் நின்றாள் விழுந்தார் பறந்தது கத்தின	செயப்படு பொருள் குன்றிய வினை

குறிப்பு வினை

தொழிலிலும், காலமும் வெளிப்படையாகத் தெரியாமல் செய்பவன் மட்டும் தெரியும்படி நிற்கும் வினைச்சொல் **குறிப்பு வினை** எனப்படும். அது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்று அறுவகைப் பெயர்களின் வழியாகப் பிறந்திருக்கும்.

"முத்துக்கருப்பன் **நல்லவன்**"—இதில் **நல்லவன்** என்பது பயனிலை. **அன்** விகுதி பெற்று **ஆண்** பாலைக் காட்டுகிறது. காலமும் செயலும் தெரியவில்லை. எனவே இது குறிப்பு வினை முற்று.

(உ-ம்) இவன் பொன்னன் இவன் குழையன்	பொருளடியாகப் பிறந்தகுறிப்பு வினை
இவன் இராமநாதபுரத்தான் இராசேசுவரன் பரமக்குடியான்	இடத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினை
இவன் கார்த்திகையான் முருகேசன் ஆதிரையான்	காலத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினை
இவன் மூக்கன் முனியாண்டி பல்லன்	சினையினடியாகப் பிறந்த குறிப்பு வினை

இவன் கருப்பன் அவன் வெள்ளையன்	குணத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினை
இவன் நடையன் இவன் சொல்லன்	தொழிலினடியாகப் பிறந்த குறிப்பு வினை

குறிப்பு:— தெரிநிலை வினை காலங்காட்டும். குறிப்பு வினை காலங் காட்டாது. தெரிநிலை வினைப்பகுதி ஏவல் வினையாயிருக்கும். குறிப்பு வினைப் பகுதி பெயர்ச் சொல்லாயிருக்கும்.

எவன், யார் என்ற வினாக்களும் குறிப்பு வினைமுற்றுக் களாம். (எவன் — என்னை, என்ன, என் எனத்திரியும்)

(உ-ம்)	வந்தது எவன்?	அவன் யார்?
	அது என்னை?	அவள் யார்?
	அவை என்ன?	அவர் யார்?
	அவை என்?	

நடந்த முருகன் பாடுகின்ற குயில்	தெரிநிலைப் பெயரெச்சம்
முருகன் நடந்து வந்தான் குயில் பாடக் கேட்டான்	தெரிநிலை வினையெச்சம்
முருகன் நல்லவன் குயில் கரியது	குறிப்பு வினைமுற்று
நல்ல பையன் கரிய குயில்	குறிப்புப் பெயரெச்சம்
மெல்லப் பாடினான் உணவு இன்றிக் கிடந்தான்	குறிப்பு வினையெச்சம்

3. பலவகை வினையெச்சங்களின் வாய்பாடுகள்

செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்பன வினையெச்ச வாய்பாடுகள்.

இவற்றுள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் இறந்த காலங் காட்டுவன.

(உ-ம்) விகுதி—வாய்பாடு

உ செய்து — தான் நடந்து வந்தான்
பு செய்பு — தான் உண்குபு போனான்
ஆ செய்யா — தான் காணா மகிழ்ந்தான்
ஊ செய்யூ — தான் காணூ மகிழ்ந்தான்
என செய்தென — தான் உண்டென மகிழ்ந்தான்
} இறந்த காலம்

செய என்னும் வாய்பாடு வினையெச்சம் நிகழ் காலங் காட்டும்.

(உ-ம்) அ—செய—உண்ண வந்தான் = நிகழ் காலம்

செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்னும் வாய்பாட்டு வினை யெச்சங்கள் எதிர்காலங் காட்டுவன.

(உ-ம்) விகுதி—வாய்பாடு

இன் — செயின் தான் உண்ணின் மகிழ்வான்
இய — செய்யிய தான் உண்ணிய வருவான்
இயர் — செய்யியர் தான் உண்ணியர் போவான்
வான் தான் கொல்வான் செல்வான்
பான் தான் உண்பான் வருவான்
பாக்கு தான் தருபாக்கு வருவான்
} எதிர் காலம்

(சூ-ம்) செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்(கு)இன வினையெச் சம்பிற
ஐந்தொன் றாறும்முக் காலமும் முறைதரும்.

பயிற்சி வினாக்கள்

1 சொல்லாவது யாது?
2 சொல்லின் வகைகள் யாவை?
3 பிற சொல் வகை யாவை?
4 திரிசொல் என்றால் என்ன?
5 வடசொல் தமிழில் வழங்கும் வகைகள் யாவை?
6 திசைச்சொல் என்றால் என்ன?
7 பொதுப்பெயர்கள் யாவை?
8 வேற்றுமைகளின் உருபும் பொருளும், கூறுக.
9 உருபு மயக்கம் என்றால் என்ன?
10 வினைச்சொல்லின் முக்கால முணர்த்தும் இடைநிலைகள் யாவை?

11 காலங்காட்டும் விகுதிகள் யாவை?
12 பகுதி காலம் காட்டுவதை விளக்குக.
13 தெரிநிலைவினை, குறிப்புவினை என்றால் என்ன?
14 வினையெச்சங்களின் வாய்பாடுகளைக் கூறுக.

III பொது

1. செய்யுள் விகாரங்கள் ஒன்பது

சொல்லின் வேறுபாடு விகாரம் எனப்படும். இது செய்யுளுக்கே உரியது. விகாரம் ஒன்பது வகைப்படும். அவை தலைக்குறை, இடைக்குறை, கடைக்குறை, வலித்தல்விகாரம், மெலித்தல் விகாரம், நீட்டல்விகாரம், குறுக்கல்விகாரம், விரித்தல்விகாரம், தொகுத்தல் விகாரம் என்பன.

1 தலைக்குறை

"வெண்மதி சாளரத்து ஆடியில் காட்டும்" (இங்குக் கண்ணாடி என்ற சொல், கண் என்னும் (தலை) முதல் எழுத்துக்கள் குறைந்து ஆடி என நின்றது.)

2 இடைக்குறை

இலை—(இல்லை என்னும் சொல் இடையிலுள்ள ல் குறைந்து, இலை என நின்றது.)

3 கடைக்குறை

இல்—(இல்லை என்னும் சொல்லின் கடைசியில் உள்ள லை குறைந்து, இல் என நின்றது.)

4 வலித்தல்

குரக்கினத்தரசு: (குரங்கு எனும் சொல், குரக்கு என்று வலித்தது. ங் என்னும் மெல்லின மெய், க் என்னும் வல்லின மெய் யாக மாறிற்று.)

5 மெலித்தல்

தண்டையின்கிளி (தட்டை என்ற சொல், தண்டை என்று மெலித்தது. ட் என்ற வல்லின மெய், ண் என்ற மெல்லின மெய்யாயிற்று.)

6 நீட்டல்

ஐந்தரு நீழலின் : (நிழல் என்ற சொல், நீழல் என்று நீண்டது. நி என்ற குறில், நீ என்ற நெடிலாயிற்று.)

7 குறுக்கல்

நன்றென்றேன் தியேன் : (தீயேன் என்ற சொல் தியேன் என்று குறுகியது. தீ என்ற நெடில் தி எனக்குறுகிற்று.)

8 விரித்தல்

இசை நிறை என ஆறு ஏகாரம்மே : (ஏகாரமே எனும் சொல், ஏகாரம்மே என்று விரிந்தது. ம் என்ற எழுத்துப் புதிதாகத் தோன்றியிருத்தல் காண்க.)

9 தொகுத்தல்

சேய்கேன : (செய்க + என = 'செய்கவென' எனும் சொல்லில் அகரம் தொகுத்தது.)

(சூ-ம்) வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுள் வேண்டுழி.

(சூ-ம்) ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே.

2. சொல் முடிபு—பெயரும் வினையும் முடியும் முறை

வேற்றுமை கொண்டு முடியும் சொல்

எல்லைப் பொருளில் வருகின்ற ஐந்தாம் வேற்றுமையும், ஆறும் வேற்றுமையும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும். இரண்டு, மூன்று, ஐந்து, எட்டாம் வேற்றுமைகள் வினை கொண்டு முடியும். முதல் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமைகள் பெயரையும், வினையையும் கொண்டு முடியும்.

உ-ம்

மதுரையின் வடக்கு — எல்லைப் பொருள் பெயர் கொண்டது.
நமது நாடு — ஆறும் வேற்றுமைபெயர் கொண்டது.
நாட்டை ஆண்டான் — இரண்டாம் வேற்றுமை வினை கொண்டது.

வாளால் வெட்டினன் — மூன்றும் வேற்றுமை வினை கொண்டது
ஊரின் நீங்கினன் — ஐந்தாம் வேற்றுமை வினை கொண்டது
தம்பி வா — எட்டாம் வேற்றுமை வினை கொண்டது

கண்ணன் இவன் கண்ணன் வந்தான்	முதல் வேற்றுமை பெயரையும் வினையையும் கொண்டது
பிணிக்கு மருந்து ஏழைக்குக் கொடுத்தான்	நான்காம் வேற்றுமை பெயரையும் வினையையும் கொண்டது
மணியின் கண் ஒளி மணியின் கண் இருந்தான்	ஏழாம் வேற்றுமை பெயரையும் வினையையும் கொண்டது

பெயர்ச்சொல் நிலை நான்கு வகைப்படும். அவை:

1. வேற்றுமை யுருபேற்று வினைப் பயனிலையாயினும் பெயர்ப் பயனிலையாயினும் கொள்வது.
2. வேற்றுமை யுருபேலாது எழுவாய்க்குப் பயனிலையாக வருவது.
3. வினைமுற்றுக்குப் பயனிலையாக வருவது.
4. பெயரை விசேடித்து நிற்பது.

முற்றுவினை பெயர்கொண்டு முடிவது

வினைமுற்றானது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறுவகைப் பெயர்களையும் கொண்டு முடியும்.

தெரிநிலை வினைமுற்று

(உ-ம்) செய்தான் அவன் — பொருட் பெயர்
குளிர்ந்தது நிலம் — இடப் பெயர்
வந்தது கார் — காலப் பெயர்
குவிந்தது கை — சினைப் பெயர்
சிறந்தது நன்மை — குணப் பெயர்
ஒழிந்தது பிறப்பு — தொழிற் பெயர்

குறிப்பு வினைமுற்று

நல்லன் அவன் — பொருட் பெயர்
நல்லது நிலம் — இடப் பெயர்

நல்லது கார்	— காலப் பெயர்
நல்லது கை	— சினைப் பெயர்
நல்லது அன்பு	— குணப் பெயர்
நல்லது கல்வி	— தொழிற் பெயர்

எழுவாய்க்குப் பயனிலையாக வருவதும், பெயர்ப் பயனிலை கொள்வதும், வினையெச்சப் பொருள் தந்து வினை கொள்வதும் தெரிநிலை வினைமுற்றுச் சொற்களின் நிலைகளாம். எழுவாய்க்குப் பயனிலையாக வருவதும், பெயர்ப் பயனிலை கொள்வதும், வினையெச்சப் பொருள் தந்து வினை கொள்வதும், பெயரெச்சப் பொருள் தந்து பெயர் கொள்வதும் குறிப்பு வினைமுற்றுச் சொற்களின் நிலைகளாம்.

எச்சங்களின் முடிவு

பெயரெச்சம் அறுவகைப் பெயர்களையும் கொண்டு முடியும்.

(உ-ம்) தெரிநிலைப் பெயரெச்சம்	குறிப்புப் பெயரெச்சம்
படித்த மனிதர்	நல்ல மனிதர்
பிறந்த நாடு	நல்ல நாடு
பிறந்த நாள்	நல்ல நாள்
வழங்கிய கை	நல்ல கை
நிறைந்த பெருமை	உள்ள பெருமை
கற்ற கல்வி	உள்ள கல்வி

வினையெச்சம் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகிய இவற்றைக் கொண்டு முடியும்.

தெரிநிலை வினையெச்சம்

(உ-ம்) படித்து வந்தான் — முற்றுக் கொண்டது
படித்து வந்த — பெயரெச்சம் கொண்டது
படித்துப் போய் — வினையெச்சம் கொண்டது
படித்து வருதல் — தொழிற் பெயர் கொண்டது
படித்து வந்தவன் — வினையாலணையும் பெயர் கொண்டது

குறிப்பு வினையெச்சம்

மெல்ல வந்தான்	—வினைமுற்றுக் கொண்டது	
மெல்ல வந்த	—பெயரெச்சம்	,,
மெல்ல வந்து	—வினையெச்சம்	,,
மெல்ல வருதல்	—தொழிற் பெயர்	,,
மெல்ல வந்தவன்	—வினையாலணையும் பெயர்	,,

பயிற்சி வினாக்கள்

1 செய்யுள் விகாரங்கள் யாவை?

2 புணர்ச்சி விகாரத்துக்கும், செய்யுள் விகாரத்துக்கும் உள்ள வேறுபாடென்ன?

3 என்னென்ன வேற்றுமை எவ்வெச் சொற்களைக்கொண்டு முடியும்?

4 வினைமுற்றுக்கள் எச்சொற்களைக் கொண்டு முடியும்?

5 பெயரெச்சம் எவற்றைக் கொண்டு முடியும்?

6 வினையெச்சம் எவற்றைக் கொண்டு முடியும்?

IV புணர்ச்சி

(1) குற்றியலுகரப் புணர்ச்சி

பொதுவிதி

நிலைமொழி யிறுதியில் நிற்கும் குற்றியலுகரம் வருமொழி முதலில் உயிர்வருமாயின் தான் ஏறிநின்ற மெய்யைவிட்டு ஓடும். யகரம் வருமாயின் இகரமாகத் திரியும். முற்றியலுகரமும் சில இடங்களில் இவ்விரு விதிகளையும் பெறும்.

(உ-ம்) நாடு + ஆண்டான் = நாடாண்டான்.
நாடு + யாது = நாடியாது
அறிவு + ஆற்றல் = அறிவாற்றல்
அறிவு + யாது = அறிவியாது

(சூ-ம்) உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றும் அற் றேரோவழி.

சிறப்பு விதிகள்

வன்றொடர்க் குற்றியலுகரம் ஒழிந்த ஐந்து குற்றியலுகரவீற்றின் முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாம்.

(உ-ம்) நாகு	+ கடிது	=	நாகு கடிது
ஏகு	+ கால்	=	ஏகு கால்
எஃகு	+ சிறிது	=	எஃகு சிறிது
அஃகு	+ பிணி	=	அஃகு பிணி
வரகு	+ தீது	=	வரகு தீது
பெருகு	+ தனம்	=	பெருகு தனம்
குரங்கு	+ பெரிது	=	குரங்கு பெரிது
ஓங்கு	+ புகழ்	=	ஓங்கு புகழ்
தெள்கு	+ கொடிது	=	தெள்கு கொடிது
எய்து	+ பொருள்	=	எய்து பொருள்

(சூ-ம்) வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி.

ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற அங்கு இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, யாண்டு என்னும் மென்றொடர்க் குற்றியலுகரவீற்றுச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்) அங்கு	+ கண்டான்	=	அங்குக் கண்டான்
இங்கு	+ பெற்றார்	=	இங்குப் பெற்றார்
எங்கு	+ சென்றான்	=	எங்குச் சென்றான்
ஆங்கு	+ கண்டாள்	=	ஆங்குக் கண்டாள்
ஈங்கு	+ பெற்றார்	=	ஈங்குப் பெற்றார்
யாங்கு	+ சென்றாள்	=	யாங்குச் சென்றாள்
யாண்டு	+ கொண்டான்	=	யாண்டுக் கொண்டான்

ஏழாம் வேற்றுமைக் காலப்பொருள் உணரநின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் மென்றொடர்க் குற்றுகர வீற்றுச் சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்) அன்று	+ கண்டான்	=	அன்று கண்டான்
இன்று	+ சென்றான்	=	இன்று சென்றான்
என்று	+ சென்றான்	=	என்று சென்றான்
பண்டு	+ சொன்னான்	=	பண்டு சொன்னான்
முந்து	+ கூறினான்	=	முந்து கூறினான்

இடைத்தொடர், ஆய்தத்தொடர், இடையொற்று மிகாத நெடிற்றொடர், இடையொற்று மிகாத உயிர்த் தொடர்க்குற்றிய லுகரங்களின் முன்வரும் வல்லினம் வேற்றுமையில் மிகாது இயல்பாகும்.

(உ-ம்) தெள்கு + கால் = தெள்கு கால்
எஃகு + கடுமை = எஃகு கடுமை
நாகு + தீமை = நாகு தீமை
வரகு + கதிர் = வரகு கதிர்

(சூ-ம்) இடைத்தொடர் ஆய்தத் தொடர் ஒற்றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை.

ட், ற் என்ற வல்லொற்றுக்களின்மேல் ஏறிவரும் நெடிற்றொடர்க் குற்றியலுகரமும், உயிர்த் தொடர்க் குற்றியலுகரமும் வருமொழியோடு புணரும்பொழுது, வேற்றுமையில் பெரும்பாலும் அம் மெய்கள் இரட்டும்.

(உ-ம்) நாடு + பற்று = நாட்டுப்பற்று
ஆறு + பெருக்கு = ஆற்றுப்பெருக்கு
முருடு + கால் = முருட்டுக்கால்
கயிறு + கட்டில் = கயிற்றுக்கட்டில்

(சூ-ம்) நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே

மென்றொடர்க் குற்றியலுகர மொழியுள் சிலமொழிகள் வேற்றுமையில் வன்றொடராகத் திரியும்.

(உ-ம்) மருந்து + பை = மருத்துப்பை
இரும்பு + பாதை = இருப்புப்பாதை
கன்று + ஆ = கற்றா
கரும்பு + வில் = கருப்புவில்

(சூ-ம்) மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்மினம் வன்றொட ராகா மன்னே.

மென்றொடர் வன்றொடராகத் திரிதலும், திரியாதும், ஐகாரச் சாரியை பெற்று வருதலும் உண்டு.

(உ-ம்) பண்டு + காலம் = பண்டைக்காலம்
இன்று + நாள் + இற்றைநாள்

ஒன்று + ஐ = ஒற்றை
இரண்டு + ஐ = இரட்டை
ஓராண்டு + ஐ = ஓராட்டை
ஈராண்டு + ஐ = ஈராட்டை

(சூ-ம்) ஐயீற் றுடைக்குற் றுகரமும் உளவே.

வடக்கு, கிழக்கு, குணக்கு, குடக்கு, என்ற திசைப் பெயர்களோடு திசைப் பெயர்களும், பிற பெயர்களும் புணரும் பொழுது நிலைமொழியீற்று உயிர் மெய்யும், அதனை யடுத்து நின்ற ககர வொற்றும் கெடும். கிழக்கு என்பதன் முதல் நீண்டும் வரும்.

(உ-ம்) வடக்கு + மேற்கு = வடமேற்கு
வடக்கு + திசை = வடதிசை
கிழக்கு + கடல் = கீழ்கடல்
குணக்கு + கடல் = குணகடல்
குடக்கு + மலை = குடமலை

தெற்கு, மேற்கு என்ற திசைப் பெயர்கள், திசைப் பெயர்களுடனும், பிற பெயர்களுடனும் புணரும் பொழுது, ஈற்றுயிர் மெய்கெட்டு அதன்மேல் நின்ற றகரம் னகரமாகவும், லகரமாகவும் திரிந்து வரும்.

(உ-ம்) தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
மேற்கு + கடல் = மேல்கடல்
தெற்கு + குமரி = தென்குமரி
மேற்கு + நாடு = மேனாடு

(சூ-ம்) திசையொடு திசையும் பிறவும் சேரின்
நிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்
றகரம் னலவாத் திரிதலும் ஆம் பிற.

'தெங்கு' என்னும் சொல் 'காய்' என்ற சொல்லோடு புணரும் பொழுது ஈற்றுயிர்மெய்கெட்டு முதல் நீளும்.

(உ-ம்) தெங்கு + காய் = தேங்காய்

(சூ-ம்) தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடும் காய்வரின்.

ஒன்று முதல் எட்டு வரையுள்ள எண்ணுப் பெயர்கள் பிற எண்ணுப் பெயர்களுடனும், பிறபெயர்களுடனும் புணரும்பொழுது, ஒன்று இரண்டு என்ற எண்களின் முதல் நீண்டும், மூன்று, ஆறு, ஏழு என்ற எண்களின் முதல் குறுகியும், ஒன்று, இரண்டு, மூன்று,

நான்கு, ஐந்து, எட்டு என்ற எண்களின் ஈற்றுயிர் மெய்கெட்டும், ஏழு என்ற எண்ணின் ஈற்றுயிர் மட்டும் கெட்டும் வரும்.

(உ-ம்)

ஒன்று	+	ஆயிரம்	=	ஓராயிரம்	முதல் நீண்டது
இரண்டு	+	ஆயிரம்	=	ஈராயிரம்	
ஒன்று	+	யானை	=	ஓர்யானை	
இரண்டு	+	யானை	=	ஈர்யானை	
மூன்று	+	மூன்று	=	மும்மூன்று	முதல் குறுகியது
மூன்று	+	தமிழ்	=	முத்தமிழ்	
ஆறு	+	நான்கு	=	அறுநான்கு	
ஆறு	+	சுவை	=	அறுசுவை	
ஏழு	+	மூன்று	=	எழுமூன்று	
ஏழு	+	புவி	=	எழுபுவி	
ஒன்று	+	பொருள்	=	ஓர்பொருள்	ஈற்றுயிர் மெய் கெட்டது
இரண்டு	+	இரண்டு	=	ஈரிரண்டு	
மூன்று	+	மலை	=	மும்மலை	
நான்கு	+	கடல்	=	நாற்கடல்	
ஐந்து	+	திணை	=	ஐந்திணை	
எட்டு	+	குணம்	=	எண்குணம்	
ஏழு	+	கடல்	=	ஏழ்கடல்	ஈற்றுயிர் மட்டும் கெட்டது

(சூ-ம்) எண்ணிறை யளவும் பிறவும் எய்தின்
ஒன்று முதலெட் டீறு மெண்ணுள்
முதலீ ரெண்முதல் நீளும் மூன்றுஆறு
ஏழு குறுகும் ஆறு ஏழல் லவற்றின்
ஈற்றுயிர் மெய்யும் ஏழன் உயிரும்
ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்.

ஒன்று என்ற எண்ணின் இடையிலுள்ள னகரம் ரகரமாவதோடு உகரம் பெற்றும் வரும். இரண்டு என்ற எண்ணின் இடையிலுள்ள ணகரமும், அதனையடுத்துநின்ற ரகரவொற்றில் ஏறிய அகரவுயிரும் கெட்டு உகரச் சாரியை பெறும். மூன்று என்ற எண்ணிலுள்ள னகரம் கெட்டு வந்த மெய்ம்மிகும். நான்கு என்ற எண்ணிலுள்ள னகரம் லகரமாகவும், றகரமாகவும் திரியும். ஐந்து என்ற எண்ணிலுள்ள ஒற்று வந்த மெய்யாகத் திரிந்தும், வந்த வல்லினத்திற்கு இனமாகத் திரிந்தும், கெட்டும் வரும்.

எட்டு என்ற எண்ணிலுள்ள டகரவொற்று ணகரவொற்றாகத் திரியும்.

(உ-ம்) ஒன்று + பொருள் = ஒருபொருள்
ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
இரண்டு + பத்து = இருபது
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
மூன்று + தமிழ் = முத்தமிழ்
மூன்று + மலை = மும்மலை
மூன்று + வட்டி = முவ்வட்டி
நான்கு + ஆயிரம் = நாலாயிரம்
நான்கு + கடல் = நாற்கடல்
ஐந்து + மூன்று = ஐம்மூன்று
ஐந்து + பத்து = ஐம்பது
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
எட்டு + பத்து = எண்பது
எட்டு + நாள் = எண்ணாள்
எட்டு + வகை = எண்வகை
எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்

(2) 'தேன்' என்ற சொல் புணரும் முறை

தேன் என்ற சொல் பிற சொற்களோடு புணரும் பொழுது இயல்பாயும், வருமொழியில் மெல்லினம் வருமாயின் இறுதினகரம் கெடும், வல்லினம் வரின் இறுதிகெட்டு வந்த வல்லினமாவது, இனமெல்லெழுத்தாவது மிக்கும் வரும்.

(உ-ம்) தேன் + கடிது = தேன்கடிது }
தேன் + மொழி = தேன்மொழி } இயல்பானது
தேன் + யாது = தேன் யாது }
தேன் + மொழி = தே மொழி—ஈறு கெட்டது.
தேன் + குடம் = தேக்குடம், தேங்குடம் — ஈறு போய் வலிமெலி மிக்கது.

(சூ-ம்) தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி யழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி.

'அகம்' என்ற சொல் புணரும் முறை

அகம் என்ற சொல்லின் முன் கை, செவி என்ற சொற்கள் வரின் நிலைமொழி யிடையிலுள்ள உயிர்மெய் கெட்டுப் புணரும்.

(உ-ம்) அகம் + கை = அங்கை
அகம் + செவி = அஞ்செவி

(சூ-ம்) அகமுனர்ச் செவிகை வரின்இடை யனகெடும்.

(3) ணகர னகர ஈறு, ளகர லகர ஈறு

ணகர னகர ஈறு

நிலை மொழியிறுதியில் நிற்கும் ணகர னகர ஈறுகள் வேற்றுமையில் வல்லினம் வரின், டகர றகரங்களாகத் திரியும். மெல்லினமும், இடையினமும் வரின் இயல்பாம். அல்வழியில் மூவின மெய்வரினும் இயல்பாம்.

வேற்றுமை

(உ-ம்)

மண்	+	குடம்	=	மட்குடம்
பொன்	+	குடம்	=	பொற்குடம்
மண்	+	மாட்சி	=	மண்மாட்சி
பொன்	+	மாட்சி	=	பொன்மாட்சி
மண்	+	வட்டில்	=	மண்வட்டில்
பொன்	+	வட்டில்	=	பொன்வட்டில்

அல்வழி

மண்	+	கடிது	=	மண்கடிது
பொன்	+	கடிது	=	பொன்கடிது
மண்	+	மாண்டது	=	மண்மாண்டது
பொன்	+	மாண்டது	=	பொன்மாண்டது
மண்	+	வலிது	=	மண்வலிது
பொன்	+	வலிது	=	பொன் வலிது

(சூ-ம்) ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக் (கு) அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.

ணகர னகரங்கள் கெடுதல்

மண், பொன் என்பன போன்று ஒற்றைக் குற்றெழுத்தைத் தொடர்ந்து வராத நிலைமொழியின் இறுதியிலுள்ள ண், ன் என்னும் மெய்யெழுத்துக்கள், வருமொழியின் முதலிலுள்ள நகரம் மாறுபட்ட பிறகு கெடும்.

(உ-ம்)

தூண் + நெரிந்தது தூண் + ணெரிந்தது தூணெரிந்தது	அல்வழியில் திரிந்தபின் ணகரம் கெட்டது.	ணகரக் கேடு
பூண் + நூல் பூண் + ணூல் பூணூல்	,,	ணகரக் கேடு
தூண் + நீளம் தூண் + ணீளம் தூணீளம்	வேற்றுமையில் நகரம் திரிந்தபின் ணகரம்கெட்டது.	ணகரக் கேடு
அரண் + நீங்கினன் அரண் + ணீங்கினன் அரணீங்கினன்	,,	ணகரக் கேடு
வேலன் + நெடியன் வேலன் + னெடியன் வேலனெடியன்	அல்வழியில் நகரம் திரிந்தபின் னகரம் கெட்டது.	னகரக் கேடு
அரசன் + நல்லவன் அரசன் + னல்லவன் அரசனல்லவன்	,,	னகரக் கேடு
சேரன் + நாடு சேரன் + னாடு சேரனாடு	வேற்றுமையில் நகரம் திரிந்தபின் னகரம் கெட்டது	னகரக் கேடு
மான் + நோக்கி மான் + னோக்கி மானோக்கி	,,	னகரக் கேடு

(சூ-ம்) குறில் அணை(வு)இல்லா ணனக்கள் வந்த
நகரம் திரிந்துழி நண்ணும் கேடே.

ல, ள விற்றுப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதியில் ல் அல்லது ள் என்னும் மெய்யெழுத்து வந்திருந்து, வருமொழியின் முதலில் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும். அல்வழிப் புணர்ச்சியில் திரிதலும் இயல்பும் ஆகும்.

(உ-ம்)

கல் + சட்டி	= கற்சட்டி		வேற்றுமையில் வல்லினம் வரத் திரிந்தது.
வில் + குதை	= விற்குதை		
பல் + காவி	= பற்காவி		
முள் + செடி	= முட்செடி		வேற்றுமையில் வல்லினம் வரத் திரிந்தது.
கள் + குடம்	= கட்குடம்		
வாள் + போர்	= வாட்போர்		
விரல் + சிறிது	= விரற்சிறிது	விரல் சிறிது	அல்வழியில் திரிதலும், இயல்புமாம்.
நூல் + பெரிது	= நூற்பெரிது	நூல்பெரிது	
வாள் + சிறிது	= வாட்சிறிது	வாள் சிறிது	
முள் + குறிது	= முட்குறிது	முள் குறிது	

நிலை மொழியின் இறுதியில் ல் அல்லது ள் என்னு மெய்யெழுத்து வந்திருந்து, வருமொழியின் முதலில் மெல்லினம் வந்தால் வேற்றுமை, அல்வழி ஆகிய இரண்டு புணர்ச்சிகளிலும், லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும்.

(உ-ம்)

சொல் + மாலை	= சொன்மாலை	வேற்றுமையில் ல், ன் ஆகத் திரிந்தது.
கல் + மலை	= கன் மலை	
நூல் + முரிந்தது	= நூன் முரிந்தது	அல்வழியில் திரிந்தது.
கல் + ஞெரிந்தது	= கன் ஞெரிந்தது	
முள் + மிதித்தான்	= முண் மிதித்கான்	வேற்றுமையில் ள், ண் ஆகத் திரிந்தது.
வாள் + முறித்தான்	= வாண் முறித்தான்	

முள் + ஞெரிந்தது	= முண் ஞெரிந்தது	}	அல்வழியில் திரிந்தது.
வாள் + மோதினது	= வாண் மோதினது		

நிலைமொழியின் இறுதியில் ல் அல்லது ள் என்னும் மெய்யெழுத்திருந்து, வருமொழியின் முதலில் இடையினம் வந்தால், வேற்றுமை, அல்வழியாக இருவகைப் புணர்ச்சியிலும் இயல்பாகும்.

(உ-ம்)

கல் + வீடு	= கல் வீடு	}	வேற்றுமையில் இடையினம்வர ல் இயல்பாயிற்று.
கல் + வீசினான்	= கல் வீசினான்		
கல் + விழுந்தது	— கல் விழுந்தது	}	அல்வழியில் இடையினம் வர, ல் இயல்பாயிற்று.
செல் + வாக்கு	— செல்வாக்கு		
முள் + வெட்டினான்	— முள் வெட்டினான்	}	வேற்றுமையில் இடையினம் வர,ள் இயல்பாயிற்று.
வாள் + வீசினான்	— வாள் வீசினான்		
முள் + விழுந்தது	— முள் விழுந்தது	}	அவ்வழியில் இடையினம் வர, ள் இயல்பாயிற்று.
வாள் + வேறு	— வாள் வேறு		

(சூ-ப்) ல.ளவேற் றுமையில் ற,டவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாம்;மெலி
மேவின் ன ணவும்; இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப.

லகர ளகரங்கள் தமுன் கெடுதல்

கல், முள் என்பனபோன்ற ஒற்றைக் குற்றெழுத்தைத் தொடர்ந்து வராத நிலைமொழியின் இறுதியிலுள்ள ல், ள் என்னும் மெய்யெழுத்துக்கள், அல்வழிப்புணர்ச்சியில், வருமொழியின் முதலில் வந்த தகரம் திரிந்தபின் (ல், ள்) கெடும்.

(உ-ம்)	ஈரல் + தேரிந்தது ஈரல் + றேரிந்தது ஈரறேரிந்தது	}	அல்வழியில் தகரம் திரிந்தபின் ல் கெட்டது.
	தோன்றல் + தீயன் தோன்றறீயன்	}	,,
	அவர்கள் + தாம் அவர்கடாம்	}	அல்வழியில் தகரம் திரிந்தபின் ள் கெட்டது.

வேள் + தீயன் வேடீயன்	}	அல்வழியில் தகரம் திரிந்தபின் ள் கெட்டது.

லகர ளகரங்கள் ந முன் கெடுதல்

கல், முள் என்பன போன்ற ஒற்றைக் குற்றெழுத்தைத் தொடர்ந்து வாராத நிலைமொழியின் இறுதியிலுள்ள ல், ள் என்னும் மெய்யெழுத்துக்கள், வேற்றுமை, அல்வழியாகிய இருவகைப் புணர்ச்சியிலும் நகரம் திரிந்தபின் (ல், ள்) கெடும்.

(உ-ம்)	விரல் + நீளம் விரல் + னீளம் விரனீளம்	}	வேற்றுமையில் நகரம் திரிந்தபின் ல் கெட்டது
	அறுகால் + நண்டு அறுகால் + னண்டு அறுகானண்டு	}	,,
	விரல் + நைந்தது விரல் + னைந்தது விரனைந்தது	}	அல்வழியில் நகரம் திரிந்தபின் ல் கெட்டது
	பா(ல்) + நாறும் பாணுறும்	}	,,
	அவள் + நாமம் அவள் + ணாமம் அவணாமம்	}	வேற்றுமையில் நகரம் திரிந்தபின் ள் கெட்டது
	தோ(ள்) + நலம் தோணலம்	}	,,
	மகள் + நல்லள் மகள் + ணல்லள் மகணல்லள்	}	அல்வழியில் நகரந் திரிந்தபின் ள் கெட்டது
	குற(ள்) + நன்று குறணன்று	}	,,

(சூ-ம்) குறில்செறி யா ல, ள அல்வழி வந்த
தகரந் திரிந்தபின் கேடும்; ஈரிடத்தும்
வருநத் திரிந்தபின் மாய்வும், வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன உள்பிற.

வருமொழித் திரிபு

னகரத்திற்குப் பின் தகரம்

நிலைமொழியின் இறுதியில் ன் என்னும் மெய்யெழுத்து வந்திருந்து, வருமொழியின் முதலில் தகரம் வந்தால், அல்வழிப் புணர்ச்சியில் வருமொழியின் முதலிலுள்ள தகரம் றகரமாக மாறும்.

(உ-ம்) பொன் + தெரிந்தது பொன்றெரிந்தது
பொன் + தீது பொன்றீது
} அவ்வழியில் தகரம் றகரமாகத் திரிந்தது.

நிலைமொழியின் இறுதியில் ன் என்னும் மெய்யெழுத்திருக்க, வருமொழியின் முதலில் தகரம் வந்தால், வேற்றுமைப் புணர்ச்சியில் தகரம் றகரமாகத் திரியும். பிறகு, 'ண, ன வல்லினம் வரட் டறவும்' என்ற சூத்திரத்தின்படி, நிலைமொழியின் இறுதியில் உள்ள ன் என்ற மெய்யும் றகரமாகத் திரியும்.

(உ-ம்) பொன் + தாலி
பொன் + றாலி
பொற்றாலி
} வேற்றுமையில் வருமொழியும், நிலைமொழியும் திரிந்தன.

பொன் + தீமை
பொன் + றீமை
பொற்றீமை
} ,,

லகரத்திற்குப் பின் தகரம்

நிலைமொழியின் இறுதியில் ல் என்னும் மெய்யெழுத்திருக்க, வருமொழியின் முதலில் தகரம் வந்தால், வேற்றுமை அல்வழி யாகிய இருவகைப் புணர்ச்சியிலும் வருமொழியின் முதலிலுள்ள தகரம் றகரமாகத் திரியும்; பிறகு 'ல, ள வேற்றுமையில் றடவும்' என்ற சூத்திரப்படி, நிலைமொழியின் ஈற்றிலுள்ள லகரமும் றகரமாகத் திரியும்.

(உ-ம்) கல் + தூண்
கல் + றூண்
கற்றூண்
} வேற்றுமையில் நிலைமொழியும், வருமொழியும் திரிந்தன.

கல் + தீமை
கல் + றீமை
கற்றீமை
} ,,

ணகரத்திற்குப் பின் தகரம்

நிலைமொழியின் இறுதியில் ண் என்னும் மெய்யெழுத்திருக்க, வருமொழியின் முதலில் தகரம் வந்தால், அல்வழிப் புணர்ச்சியில் வருமொழியின் முதலிலுள்ள தகரம் டகரமாகத் திரியும்.

(உ-ம்) கண் + தெரிந்தது = கண்டெரிந்தது } அல்வழியில் தகரம்
மண் + தெரியும் = மண்டெரியும் } டகரமாகத் திரிந்தது.

நிலைமொழியின் இறுதியில் ண் என்னும் மெய்யெழுத்திருக்க, வருமொழியின் முதலில் தகரம் வந்தால், வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழியின் முதலில் வந்த தகரம் டகரமாகத் திரியும். பின்பு 'ண ன வல்லினம் வர' என்ற சூத்திரத்தின் படி, நிலைமொழியின் இறுதியிலுள்ள ணகரமும் டகரமாகத் திரியும்.

(உ-ம்) கண் + தழல்
கண் + டழல்
கட்டழல் } வேற்றுமையில் நிலைமொழியும் வருமொழியும் திரிந்தன.

மண் + தீமை
மண் + டீமை
மட்டீமை } ,,

ளகரத்திற்குப் பின் தகரம்

நிலைமொழியின் கடைசியில் ள் என்னும் மெய்யெழுத்திருக்க, வருமொழியின் முதலில் தகரம் வந்தால் வேற்றுமை, அல்வழியாகிய இருவகைப் புணர்ச்சியிலும் தகரம் டகரமாகத் திரியும். பின்பு வருமொழியின் முதலிலுள்ள ளகரமும் 'ல ள வேற்றுமையில் றடவும்' என்ற சூத்திரப்படி டகரமாகத் திரியும்.

(உ-ம்) முள் + தைத்தது
முள் + டைத்தது
முட்டைத்தது } அல்வழியில் நிலைமொழியும் வருமொழியும் திரிந்தன.

முள் + தீமை
முள் + டீமை
முட்டீமை } வேற்றுமையில் நிலைமொழியும் வருமொழியும் திரிந்தன.

னகரத்திற்குப் பின் நகரம்

நிலைமொழியின் இறுதியில் ன் என்னும் மெய்யெழுத்திருந்து, வருமொழியின் முதலில் நகரம் வந்தால் வேற்றுமை, அல்வழியாகிய இருவகைப் புணர்ச்சியிலும் நகரம் னகரமாகத் திரியும்.

(உ-ம்) பொன் + நகை
பொன் + னகை
பொன்னகை
} வேற்றுமையில் நகரம் னகரமாகத் திரிந்தது.

முன் + நிலை
முன் + னிலை
முன்னிலை
} அல்வழியில் நகரம் னகரமாகத் திரிந்தது.

லகரத்திற்குப் பின் நகரம்

நிலைமொழியின் இறுதியில், ல் என்னும் மெய்யெழுத்திருந்து, வருமொழியின் முதலில் நகரம் வந்தால் வேற்றுமை, அல்வழியாகிய இருவகைப் புணர்ச்சியிலும் நகரம் னகரமாக மாறும். பிறகு "மெலிமேவின்ணனவும்" என்றபடி நிலைமொழியின் இறுதியிலுள்ள லகரமும் னகரமாகத் திரியும்.

(உ-ம்) கல் + நெஞ்சு
கல் + னெஞ்சு
கன்னெஞ்சு
} வேற்றுமையில் நிலைமொழியும், வருமொழியும் திரிந்தன.

வில் + நாண்
வில் + னாண்
வின்னாண்
} ,,

கல் + நெரிந்தது
கல் + னெரிந்தது
கன்னெரிந்தது
} அல்வழியில் நிலைமொழியும், வருமொழியும் திரிந்தன.

வில் + நீண்டது
வில் + னீண்டது
வின்னீண்டது
} ,,

ணகரத்தின் பின் நகரம்

நிலைமொழியின் இறுதியில் ண் என்னும் மெய்யெழுத்திருந்து, வருமொழியின் முதலில் நகரம் வந்தால் வேற்றுமை,

அல்வழியாகிய இருவகைப் புணர்ச்சியிலும் நகரம் ணகரமாகத் திரியும்.

(உ-ம்)	விண் + நாடு விண் + ணாடு விண்ணாடு	}	வேற்றுமையில் வருமொழி நகரம் ணகரமாகத் திரிந்தது.
	கண் + நீர் கண் + ணீர் கண்ணீர்	}	,,
	கண் + நீண்டது கண் + ணீண்டது கண்ணீண்டது	}	அல்வழியில் வருமொழி நகரம் ணகரமாகத் திரிந்தது.
	உண் + நீர் உண் + ணீர் உண்ணீர்	}	,,

ளகரத்திற்குப்பின் நகரம்

நிலைமொழியின் இறுதியில், ள் என்னும் மெய்யெழுத்திருந்து, வருமொழியின் முதலில் நகரம் வந்தால் வேற்றுமை, அல்வழி ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும், வருமொழியின் முதலிலுள்ள நகரம் ணகரமாகத் திரியும். பின்பு நிலைமொழியின் இறுதியிலுள்ள ளகரமும் "மெலிமேவின்ணனவும்" என்றபடி ணகரமாகத் திரியும்.

(உ-ம்)	எள் + நெய் எள் + ணெய் எண்ணெய்	}	வேற்றுமையில் ஈரிடத்தும் திரிந்தன.
	முள் + நுனி முள் + ணுனி முண்ணுனி	}	,,
	முள் + நேரிந்தது முள் + ணேரிந்தது முண்ணேரிந்தது	}	அல்வழியில் ஈரிடத்திலும் திரிந்தன,
	பிள் + நாக்கு பிள் + ணாக்கு பிண்ணாக்கு	}	,,

ன, லவுக்குப் பின்னால் த ற வாகும்.
ண, ளவுக்குப் பின்னால் த ட வாகும்.
ன, லவுக்குப் பின்னால் ந னவாகும்.
ண, ளவுக்குப் பின்னால் ந ணவாகும்.

(சூ-ம்) னலமுன் றனவும், ணளமுன் டணவும்
ஆகும் த, நக்கள் ஆயுங் காலே.

(4) சாரியைகள்

பதத்துடன் விகுதியும், பிற பதங்களும், வேற்றுமையுருபுகளும் புணருமிடத்து அ, அத்து, அம், அன், இன், அற்று முதலிய பல சாரியைகளைப் பெற்றுவரும்.

(உ-ம்) நடந்தது — நட — பகுதி
த் — சந்தி
த் — இடைநிலை
அ — சாரியை
து — விகுதி

மரம் + ஐ	= மரத்தை	— அத்து	— சாரியை
மன்று + அம்	= மன்றம்	— அம்	,,
ஒன்று + கூட்டம்	= ஒன்றன் கூட்டம்	— அன்	,,
வண்டு + கால்	= வண்டின் கால்	— இன்	,,
பல + ஐ	= பலவற்றை	— அற்று	,,

(5) பல, சில எனும் இவை புணரும் முறை

பல, சில என்ற இச்சொற்கள் தம் முன் தாமேவரின், இயல்பாயும், மிக்கும், நிலைமொழி யிறுதியில் நின்ற அகரம் கெட லகரம் றகரமாகியும் புணரும். அச்சொற்களின் முன் பிற சொற்கள் வரின் நிலைமொழி யிறுதியில் நின்ற அகரம் கெட்டும், கெடாமலும் புணரும்.

(உ-ம்)	பல + பல	= பல பல	இயல்பாயின.
	சில + சில	= சில சில	
	பல + பல	= பலப்பல	மிக்கன.
	சில + சில	= சிலச்சில	
	பல + பல	= பற்பல	அகரம் கெட்டு றகரமாயின.
	சில + சில	= சிற்சில	

பல	+	கலை	=	பலகலை	—பல்கலை
சில	+	கலை	=	சிலகலை	—சில்கலை
பல	+	மொழி	=	பலமொழி	—பன்மொழி
சில	+	மொழி	=	சிலமொழி	—சின்மொழி
பல	+	வளை	=	பலவளை	—பல்வளை
சில	+	வளை	=	சிலவளை	—சில்வளை

(சூ-ம்) பலசில வெனும் இவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகர மேக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலும் உளபிற.

பயிற்சி வினாக்கள்

1. முற்றிய லுகரம் உயிர்வரின் எவ்வாறு புணரும்?
2. குற்றியலுகரம் யகரம் வரின் என்ன ஆகும்?
3. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் எவ்வாறு புணரும்?
4. மென்றொடர்க் குற்றியலுகரம் மிக்கும், மிகாதும் வரும் இடங்கள் யாவை?
5. இடைமொற்றிரட்டும் குற்றியலுகரங்கள் யாவை?
6. திசைப் பெயர்கள் எவ்வாறு புணரும்?
7. எண்ணுப் பெயர்கள் அடையும் விகாரங்கள் யாவை?
8. ணகர ளகர ஈறு வல்லினமெய்களுடன் எவ்வாறு புணரும்?
9. குறிலணைவில்லா ணகர னகரங்கள் எவ்வாறாகும்?
10. லகர ளகரவீறு வல்லின மெல்லினங்களோடு புணரும் பொழுது எவ்வாறு திரியும்?
11. சாரியைகள் எப்பொழுது வரும்?
12. தேன், அகம் என்ற சொற்கள் புணரும்பொழுது அடையும் விகாரங்கள் யாவை?
13. பல, சில என்ற சொற்கள் தம்மொடும், பிற சொற்களுடனும் புணரும் விதம் என்ன?

V யாப்பு

(1) எதுகை மோனைகளின் பொது இலக்கணம்

எதுகை

அடி தோறும் முதலெழுத்து அளவால் ஒத்து நிற்க, இரண்டாமெழுத்து முதலிய எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது **எதுகை** எனப்படும்.

(உ-ம்) துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

முத்தமிழ்த் துறையின் முறைபோகிய
உத்தமக் கவிகட் கொன்றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

மோனை

ஓரடியின் பல சீர்களிலாவது, பல அடிகளிலாவது முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை எனப்படும். உயிரெழுத்துக்களில் அ, ஆ, ஐ, ஔ — இ, ஈ, எ, ஏ — உ, ஊ, ஒ, ஓ, இவை ஒன்றற்கொன்று மோனை எழுத்துக்களாம். மெய்களில் ஞ, ந — ச, த — ம, வ இவை ஒன்றற்கொன்று மோனையாம். பிறவற்றிற்கு அவ்வவ் வெழுத்துக்களே மோனையாம். ஓரடியின் சீர்களில் எல்லாம் மோனை வந்தால் **முற்று மோனை** எனப்படும். சிறுபான்மை இனவெழுத்தும் மோனையாம்.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்(து)
உண்ணின்(று) உடற்றும் பசி.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இரண்டாம் செய்யுளின் முதல் வரியில் முற்றுமோனை வந்திருப்பது காண்க.

(2) அடிவகை

தளைகள் ஒன்றும், பலவும் அடுத்து, வரிவரியாக அமைவது அடி எனப்படும். இரு சீரான் வருவது குறளடி. முச்சீரான் வருவது சிந்தடி. நாற்சீரான் வருவது அளவடி என்றும், நேரடி என்றும் சொல்லப்படும். ஐந்து சீர்களால் வருவது நெடிலடி. ஐந்தின் மேற்பட்ட சீர்களால் வருவது கழிநெடிலடி எனப்படும்.

(உ-ம்)

குறளடி

பேரறி வன்னன்
சாரவி ருந்த
ஊரினு மில்லென்
றூரவி கழ்ந்தே.

சிந்தடி

சாந்த ணைதிய தாழ்மொழி
காய்ந்த வேலிரு காதினும்
போந்த போன்று புகுந்திட
மாந்த ராகுல மன்னினர்.

அளவடி

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

நெடிலடி

வாரி தோன்றிய அமுதென வண்புகழ் வாய்ந்த
பார தப்பெரு நாட்டிடைக் காலடிப் பதியின்
மாரி யாயுயர் மறையவன் சிவகுரு மகவாய்
ஆரி யாம்பையின் அழகிய அகவயிற் றடைந்தான்.

கழிநெடிலடி

ஆழிசூழ் உலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பினன் வேந்த னென்றாள்.

(3) இசைப் பாட்டு வகை

கண்ணி

இசையுடன் பாடப்படும் வகையில் தாளத்துடன் ஒத்தியங் கப் பாடப்படுவது இசைப் பாட்டாகும். அது பலவகைப்படும்,

நான்கு சீர்களைக் கொண்ட அடிகள் இரண்டிரண்டாய் வருவது கண்ணி எனப்படும்.

(உ-ம்) எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

கும்மி

பெண்கள் கூடிப் பாடுவதற்கேற்றவாறு பாடப்படுவது கும்மிப் பாட்டாகும்.

(உ-ம்) செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

இம்மாதிரியான பாடல்களைக் கும்மியாகப் பாடலாம்.

கீர்த்தனை

பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற உறுப்புக்களுடன் பாடப்படும் பாடல் கீர்த்தனை எனப்படும்.

(உ-ம்) ராகம்—கல்யாணி தாளம்—ஆதி

பல்லவி

சந்ததம் வாழ்த்திடுவோம்—வெண்
தாமரை மேலமர் நாமகள் தேவியை—(சந்ததம்)

அநுபல்லவி

சுந்தரமாகிய விந்தை வடிவுடைய
சிந்தா தேவியை எந்த நிலையினிலும்—(சந்ததம்)

சரணம்

பூவிலும் நாவலர் நாவிலும் ஆங்கவர்
பாவிலும் உள்ளன்பு மேவிய நன்மனக்
கோவிலிலும் இன்கலை யாவிலுமே நடம்
ஆடுமருள் வடிவாகிய தேவியை—(சந்ததம்)

vi அணியிலக்கணம்

1. செய்யுளை அழகுபடுத்துவது அணி யெனப்படும்.

1. சொல்லணி

2. சொற்களை அழகுபெறத் தொடுப்பது சொல்லணியாம். மடக்கு, சித்திரக்கவி முதலியன சொல்லணியின் பாற்படும்.

3. மடக்கு: சொன்ன வார்த்தைகளையே திருப்பித் திருப்பிப் பொருள் வேறுபடுமாறு அமைப்பது மடக்கு எனப்படும்.

(உ-ம்) கொடிய விஞ்சிவட் டாரைக் குனித்தடும்.
கொடிய விஞ்சிவட் டாரைக் குனித்தடும்.

(இதன் பொருள்: 1. கோட்டை மதில் மேலுள்ள கொடிகள் மேகத்தை வளைத்து அடிக்கும். 2. கோட்டை மதில் மேலுள்ள ஆயுதங்கள் பகைவரை வளைத்தடிக்கும்.)

கரியா னனத்தான் கருது புகழ்பூண்ட
கரியா னனத்தான் கழல்.

மாமகிழ்மா றன்புகழாம் வண்டமிழ்வே தம்விரித்த
மாமகிழ்மா றன்தாள் மலர்.

2. பொருளணி

4. பொருள் அமையும் அழகைக் கூறுவது பொருளணியாம். அது தன்மை நவிற்சியணி, உவமையணி, உருவக அணி முதலாகப் பல வகைப்படும்.

(1) தன்மை நவிற்சியணி

5. பொருள், குணம், தொழில் முதலியவற்றுள் ஒன்றின் தன்மையை உள்ளபடி சிறப்பித்துக் கூறுவது தன்மை நவிற்சியணி எனப்படும்.

(தன்மை = இயல்பை, நவிற்சி = சொல்லுதல்)

(உ-ம்) நீலமணி மிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன்-தோலுடையான்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க் கிறை.

(இக்கவியில் சுர்சாலே எம்மானுடைய தன்மைகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. நீலமணிமிடறு, நீண்ட சடைமுடி, நூலணிந்த மார்பு, நெற்றிக்கண், யானைத்தோல், மான், மறி, மழு முதலியவற்றைக் கொண்டிருப்பது அவனுடைய தன்மை. இவ்வாறு ஒன்றின் தன்மையைக் கூறுவதே **தன்மை நவிற்சியணி** யாம்.)

முல்லையங் கோதை நல்லார் முகமதி வெயர்வு தோன்ற
வல்லிநுண் மருங்கு ஞேவ வால்வளை வாய்விட் டார்ப்ப
மெல்விரற் காந்தள் சேப்ப வெண்டயிர் கடையும் ஓதை
கொல்புலி முழக்க மென்ன வயின்றொறும் குளிறு மாதோ.

தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார்.

2. உயர்வு நவிற்சியணி

6. எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயத்தை உள்ளபடி சொல்லாமல், கேட்போர் அதிசயிக்கும்படி மிகவும் உயர்த்திச் சொல்வது **உயர்வு நவிற்சியணி** எனப்படும்.

(உ-ம்) மேனி வந்தொளிர் மாடத்தின் விழுத்தக நிரைத்த
பானி லாமணித் தசும்பினில் தண்கதிர் பரப்ப
கான றும் புனல் நிறைதலும் கதிரவன் தடந்தேர்
மானினங் குடித்(து)அயர்வுயிர்த்(து) உம்பரின் வாவும்.

(உயர்ந்த மாடிகளின் மேல் சந்திரகாந்தக் கல்லால் செய்து வைக்கப்பட்டுள்ள குடத்தின் நீரைச் சூரியனுடைய குதிரைகள் குடித்துக் களைதீரும். எனக் கூறப்பட்டிருத்தலால் மாடிகள் மிகவும் உயர்ந்தன வென்பது தெரிகிறது. இங்ஙனம் நம்பக் கூடாதவாறு மிகவும் உயர்வுபடுத்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி யாகும்.)

குமுத னிட்ட குலவரை கூத்தரின்
திமித மிட்டுத் திரியும் திரைக்கடல்
துமித மூர்புக வானவர் துள்ளினார்
அமுதம் இன்னும் எழுமெனும் ஆசையால்.

(குமுதன் கடலில் மலையைத் தூக்கிப்போட, நீர்த்திவலைகள் தேவலோகத்திலும் போய்ச் சிதறின. அது கண்ட தேவர்கள்

யாரோ கடலைக் கடைகின்றனர். நமக்கு அமுதம் கிடைக்கும் என்று ஆசையால் ஆரவாரித்தனராம். இங்குக் குமுதன் போட்ட மலையின் பெருமை உயர்த்திக் கூறப்பட்டிருத்தல் காண்க.)

(3) தற்குறிப்பேற்றவணி

7. இயற்கையாக நடக்கும் ஒரு செயலின்மேல் தனது கருத்தையேற்றிக் கற்பனையாகக் கூறுவது **தற்குறிப்பேற்றவணி** எனப்படும்.

தன் குறிப்பு = (புலவன்) தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது.
"காகமும் இவளைக் கா! கா! வெனக் கரைந்தது."

(காகம் கா; கா; என்று கத்துவது இயற்கை. ஆனால் "இவளைக் காப்பாற்று; காப்பாற்று!" எனக் கத்தினது என்று பொருள் படும்படி புலவர் தன் கருத்தை யேற்றிக் கூறியிருக்கிறார். இது தற்குறிப்பேற்றம்.)

மறுவி கந்தவெண் மதியென வயங்கிய பித்தி
செறியு மாடங்கள் வெண்கதிர் பரப்பிடு செவ்வி
நறவு யர்த்தபைந் துணர்மலி கற்பக நாட்டை
வெறுவி தாமென வெண்ணகை புரிவது போலும்

(வெண்ணிறமான மாடங்கள் கற்பக நாட்டை நோக்கிச் சிரிப்பதுபோல் தோன்றின என்று, கவி தன் குறிப்பை ஏற்றியிருக்கிறார்.)

எண்ட ருங்கடை சென்ற யாம மியம்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கல் மார்பன் மயங்கி விம்மிய வாறெலாம்
கண்டு நெஞ்சு கலங்கி அஞ்சிறை யான காமர் துணைக்கரம்
கொண்டு தம்வயி றெற்றி எற்றி விளிப்ப போன்றன கோழியே.

(கோழி சிறகடித்துக்கொண்டது, தசரதன் படும் துன்பத்தைக் காணச் சகியாமல் தனது சிறகுகளாகிய கைகளால் மார்பில் அடித்துக்கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.)

மொழிப் பயிற்சி

1. வாக்கியம் பல வகைகள்

வாக்கியங்கள் தனிவாக்கியம், தொடர்வாக்கியம், கலவை வாக்கியம் என மூவகைப்படும்.

(உ-ம்) மயர்தகன் புட்பக லோகத்தை அடைந்தான்.
(தனிவாக்கியம்)

துயில் நீங்கி எழுந்த சேடன் புதல்வி, சுற்றிலும் உற்று நோக்கினாள்; சேடியரெவரும் தென்பட்டிலர். (தொடர்வாக்கியம்)

வானில் கார் மேகங்கள் குழுமிப் பெருங்காற்று வீசத் தொடங்கிற்று. (கலவைவாக்கியம்)

இவையேயன்றிச் **செய்வினைவாக்கியம், செயப்பாட்டுவினை வாக்கியம், நேர்கூற்றுவாக்கியம், அயற்கூற்றுவாக்கியம், உடன்பாட்டு வாக்கியம், எதிர்மறைவாக்கியம், தன்வினைவாக்கியம், பிறவினை வாக்கியம், வினாவாக்கியம், வியப்புவாக்கியம், ஏவல்வாக்கியம்,** எனப் பலவகைப்படும்.

(உ-ம்) 1. உதயணன் யானையை அடக்கினான். (செய்வினை வாக்கியம்)

2. யானை உதயணனால் அடக்கப்பட்டது. (செயப்பாட்டுவினைவாக்கியம்)

3. "திருக்குறட் செய்யுட்கள் அனைத்தையும் மனப்பாடமாகப் படிக்கவேண்டும்" என்று ஆசிரியர் கூறினார். (நேர்கூற்றுவாக்கியம்)

4. நாகேந்திரன் தனக்கு ஒரு திருக்குறட் புத்தகம் வாங்கிக் கொடுக்கும்படி தியாகராசனைக் கேட்டான். (அயற்கூற்று வாக்கியம்)

5. வீரபத்திரன் திருக்குறள் வாங்கிக் கொடுக்கவில்லை. (எதிர்மறைவாக்கியம்)

6. அங்குச்சாமி திருக்குறள் வாங்கிக்கொடுத்தான். (உடன்பாட்டுவாக்கியம்)

7. தியாகராசன் சிலப்பதிகாரம் தந்தான். (தன்வினை வாக்கியம்)

8. பிரதாபன் மணிமேகலையைத் தருவித்தான். (பிறவினைவாக்கியம்)

9. தம்பீ! நீ உணவருந்தினாயா? (வினாவாக்கியம்)

10. மயில் எவ்வளவு அழகாயிருக்கிறது! (வியப்பு வாக்கியம்)

11. குழந்தாய்! நீ பள்ளிக்கூடத்திற்குப் போ. (ஏவல் வாக்கியம்)

II வாக்கிய அமைப்பு

வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை கடைசியிலும், செயப்படுபொருள் இடையிலும் வரும். சில இடங்களில் இம் முறை மாறிவருதலும் உண்டு.

குறிப்பு:— "குயவன் குடத்தைச் செய்தான்"— இவ்வாக்கியத்தில், எழுவாய் முதலிலும், செயப்படுபொருள் இடையிலும் வந்திருக்கின்றன. "சீதையைக் கண்டான் அநுமான்" — இந்த வாக்கியத்தில் மேற்காட்டிய முறை மாறிவிட்டது. சில வாக்கியங்களில் செயப்படு பொருள் இராது. சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நிற்கும். அவ்வாறு மறைந்து நிற்கும் எழுவாய் தோன்றா எழுவாய் எனப்படும்.

குறிப்பு:— "பாடத்தைப் படி" — இவ்வாக்கியம் நீ பாடத்தைப் படி. என்றிருக்க வேண்டும். ஆனால் நீ என்னும் எழுவாய் மறைந்து விட்டது. எனவே நீ என்பது தோன்றா எழுவாயெனப் பட்டது. (வெளிப்படையாகத் தெரியாத எழுவாய்)

(உ-ம்) விரைந்து வருவேன் — நான் தோன்றா எழுவாய்
அந்தப் புத்தகத்தை எடு — நீ " "

அடை மொழி

வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களோடு வேறு சிலசொற்களும் சேர்ந்து நிற்பதுண்டு. அச் சொற்கள், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களோடு தொடர்புடையனவாய் இருத்தல்வேண்டும். பெயர்ச் சொல்லுக்கு முன்னால் பெயரெச்சமும், வினைச்சொல்லுக்கு முன்னால் வினையெச்சமும் இருக்க வேண்டும்.

குறிப்பு:— திறமையுள்ள குயவன் அழகான குடங்களை விரைவில் செய்வான்—இவ்வாக்கியத்தில் அடைமொழிகள் இருக்கின்றன.

குயவன்	— எழுவாய்
செய்வான்	— பயனிலை
குடங்களை	— செயப்படுபொருள்
திறமையுள்ள	— எழுவாய்க்கு அடைமொழி (திறமையுள்ள)
அழகான	— செயப்படு பொருளுக்கு அடைமொழி (அழகான)
விரைவில்	— பயனிலைக்கு அடைமொழி (விரைவில்)

(உ-ம்) பெரியவரான காந்தி நெடுநாள் விரும்பிய சுதந்திரத்தைப் பெரும் போராடி வாங்கினார்.
நல்ல மனிதர்கள் மக்களை அன்பாக நடத்துவார்கள்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை

பெயர்ச் சொல் முடிவு

வாக்கியத்தில் உள்ள எழுவாய் அதே வாக்கியத்திலுள்ள வினைமுற்றையாவது, வினாச் சொல்லையாவது, பெயர்ச்சொல்லையாவது கொண்டு முடிய வேண்டும்.

"முருகன் வந்தான்" — இவ்வாக்கியத்தில் எழுவாயாகிய **முருகன்** என்னும் பெயர்ச்சொல், **வந்தான்** என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்திருக்கிறது.

(உ-ம்) பாரி முல்லைக்குப் பொற்றேர் அளித்தான்.
கோவலன் கண்ணகியை மணந்தான்.

முருகன் **யார்**? — இவ்வாக்கியத்தில் முருகன் என்னும் பெயர்ச்சொல் **யார்** என்னும் வினாச்சொல்லைக் கொண்டு முடிந்திருக்கிறது.

(உ-ம்) உன் பெயர் என்ன?
நீ இங்கு வந்த காரணம் யாது?

'இவன் **முருகன்**' — இவ்வாக்கியத்தில் **இவன்** என்னும் பெயர்ச்சொல் **முருகன்** என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்திருக்கிறது.

(உ-ம்) இது நல்ல குதிரை.
பாலின் நிறம் வெள்ளை.

எழுவாய் செய்த தொழிலின் பயனை ஏற்று நிற்பது செயப்படுபொருள் எனப்படும்.

இரண்டாம் வேற்றுமையே செயப்படுபொருளாக இருக்கும். அது, வாக்கியத்தில் பயனிலையைத் தழுவி நிற்க வேண்டும்.

(உ-ம்) முத்துராமலிங்கம் இந்தப் பிரதியை எழுதினான் — இதில், பிரதியை என்னும் இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல் செயப்படுபொருளாகும். இது, எழுதினான் என்ற பயனிலையைத் தழுவி நிற்கிறது.

வாக்கியத்திலுள்ள வினைமுற்று, எழுவாயைத் தழுவிநிற்கும். பயனிலையாகிய வினைமுற்று எழுவாய்க்கு ஒத்த திணை, பால், எண் இடங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ-ம்) பிரதாபன் பாடுகிறான்.
குயில் கூவிற்று.

பெயரெச்சம், பெயர்ச் சொல்லைக் கொண்டே முடியும்.

(உ-ம்) வந்த பையன்.
வளர்ந்த மரம்.

வினையெச்சம், வினைமுற்றையாவது, மற்றொரு வினையெச்சத்தையாவது, பெயரெச்சத்தையாவது கொண்டுமுடியும்.

(உ-ம்) எழுதிக் கொடுத்தான். வினைமுற்றைக் கொண்டு முடிந்தது.

எழுதிக் கொடுத்துப் பணம் வாங்கினான். (இதில், எழுதி என்ற வினையெச்சம் கொடுத்து என்ற வினையெச்சத்தைத் தழுவிறது.)

எழுதிக் கொடுத்த கதை. (வினையெச்சம் பெயரெச்சத்தைத் தழுவிற்று.

III ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்

ஒரு வாக்கியத்தைக் கருத்து வேறுபாடின்றிப் பல உருவ வாக்கியங்களாக மாற்றி அமைக்கலாம்.

(உ-ம்) அதியமான் ஔவையாருக்குப் பரிசு கொடுத்தான்.
(இது செய்வினை வாக்கியம்)

அதியமானால் ஔவையாருக்குப் பரிசு கொடுக்கப்பட்டது.
(இது செயப்பாட்டுவினை வாக்கியம்)

ஔவையாருக்குப் பரிசு கொடுத்தான் அதியமான்.
(இதில் எழுவாய் இறுதியில் நிற்கிறது.)

அதியமான் பரிசு கொடுக்க ஔவையார் அதனை வாங்கினார்.
(இது கலவை வாக்கியம். முதற் பயனிலை யெச்சமாகி யிருக்கிறது.)

அதியமானிடம் ஔவையார் பரிசு வாங்கினார்.
(இதில் எழுவாய் மாறி இருக்கிறது.)

ஔவையாரால் அதியமானிடமிருந்து பரிசு வாங்கப்பட்டது.
(செயப்பாட்டுவினை வாக்கியம்)

இனித் தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாகவும், கலவைவாக்கியமாகவும் கருத்து வேறுபாடின்றி மாற்றியமைக்கலாம்.

நேர்கூற்றை அயற்கூற்ருகவும், அயற்கூற்றை நேர்கூற்ருகவும் மாற்றியமைக்கலாம். இவை முன்னர் விளக்கப்பட்டுள்ளன.

IV பத்தியமைப்பு

ஒரு மனிதனுக்குத் தலை, கழுத்து, மார்பு, கை, கால் எனப் பல உறுப்புக்களிருப்பன போல, ஒரு கட்டுரையிலும் ஓரே விஷயத்தைப்பற்றிய பல சிறு உட் பிரிவுகள் அமைந்திருக்கும். அவ்வுட் பிரிவுகள் ஒவ்வொன்றும் தனித்தனியே விளக்கிக் கூறப்பட்டிருக்கும். இவ்வாறு பல உட் பிரிவுகளோடு கூடிய கட்டுரையின் ஒரு உட் பிரிவை மட்டும் விளக்கிக்கூறும் வாக்கியங்களின் தொகுதியே **பத்தி** (பாரா) எனப்படும். வாக்கியம் முடிவானதொரு கருத்தை வெளியிடும். பத்தி, கட்டுரையின் முடிவானதொரு அம்சத்தை வெளியிடுகின்ற வாக்கியத் தொகுதியாயிருக்கும். இத்தகைய பத்திகள் பல சேர்ந்து கட்டுரையாகும்.

ஒரு பத்தியில் ஓரே விஷயம் விளக்கப்பட்டிருத்தல் வேண்டும். அடுத்த பத்தியில் அதனோடு தொடர்புடைய மற்றொரு விஷயம் விளக்கப்படல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பத்தியிலும் தொடர்புடைய வெவ்வேறு விஷயங்கள் கூறப்படல் வேண்டும். அன்றி, ஓரே பாராவில் தொடர்பற்ற பல விஷயங்களைக் கூறுவது கூடாது. படிப்போருக்கும் விஷயம் விளங்காது.

(உ-ம்) "கோவலன் காவிரிப்பூம் பட்டினத்து வணிகன். அவன் கண்ணகியை மணந்தான். மதுரையில் ஒரு தட்டானுல் உயிரிழந்தான். மாதவி கோவலனுடன் இன்புற்றிருந்தாள். கண்ணகியுங் கோவலனும் மதுரைக்குப் போகும் வழியில் கவுந்தியடிகளைச் சந்தித்தனர்."

இந்தப் பத்தியில் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன. அதனுல் கதைப்போக்கு விளங்கவில்லை; இவ்வாறு பத்தியமைப்பது குற்றமாகும்.

ஒரு கட்டுரையில் கூறப்படவேண்டிய பல விஷயங்களை, ஒன்றுக்கொன்று பொருத்தமுடையனவாக வரிசைப் படுத்திக் கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் வரிசைக்கிரமம் தவருமல் ஒவ்வொரு பத்தியாகக் கூறவேண்டும். பத்திகள் வைப்பு மாறித்

தொடர்பின்றி யமைந்திருந்தால், கட்டுரையில் கூறப்படும் விஷயங்களும் தொடர்பின்றிச் சிதைந்து, படிப்போர்க்கு எளிதில் விளங்கா.

(உ-ம்) "கோவலன் காவிரிப்பூம் பட்டினத்து வணிகன்; கல்வி கேள்விகளில் சிறந்தவன்; பெருந் தனவந்தன். அவன் கண்ணகியை மணந்து இன்புற்று வாழ்ந்திருந்தான்.

கவுந்தியடிகள் கோவலனுக்கும், கண்ணகிக்கும் துணையாகச் சென்றார். மூவரும் பல காத தூரம் நடந்து மதுரையை அடைந்தார்கள். அங்கே மாதரி என்னும் ஆயர்குல மங்கையினிடம் கோவலனையும், கண்ணகியையும் அடைக்கலமாக ஒப்புவித்து, அவர்களுக்கு வேண்டிய உதவி புரியும்படி, கவுந்தியடிகள் மாதரிக்குக் கட்டளையிட்டார்.

அக்காலையில் காவிரிப்பூம் பட்டினத்தில் மாதவி என்றோர் கணிகை யிருந்தாள். அவள் ஆடல் பாடல்களில் சிறந்தவள். கோவலன் மாதவியின் அழகில் மயங்கி, அவளைக் காதலியாகப் பெற்று, அவள் வீட்டையே தனது இருப்பிடமாக்கிக்கொண்டான். இருவர்க்கும் ஓர் பெண் மகவு பிறந்தது. அதன் பெயர் மணிமேகலை".

மேற் காட்டப்பட்ட பத்திகள் முறை மாறிக் கிடக்கின்றன. கதைப் போக்கு எளிதில் புலப்படவில்லை. இறுதிப் பத்தி இடையிலிருந்தால் கதை ஒழுங்குற விளங்கும்.

V நடை

கற்றவனொருவன் தன் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களைப் பிறர் சந்தேகமின்றிப் படித்துத் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சுருக்கமாகவும், தெளிவாகவும், பொருத்தமான வார்த்தைகளால் அழகுறத் தொகுத்துத் தெரிவிப்பது நடை எனப்படும்.

தட்டுத் தடங்கலின்றி வாசிக்கத் தக்கதாய் அமைந்திருப்பது, எளிதில் பொருளுணர்த்துவதில் செவிக்கு இனிமை பயப்பது முதலியவை உரைநடையின் முக்கியமான இலக்கணங்களாகும். அரிய விஷயங்கள் பொதிந்த கட்டுரைகளை வாசிக்கும்பொழுது, கற்போருக்குச் சலிப்புத் தோன்றுவது இயற்கை. பாலை மட்டும் அருந்தினால் விரைவில் தெவிட்டிவிடும்; இடையிடையே பழமும் சேர்த்துக்கொண்டால் தெவிட்டலின்றி உட்கொள்ளலாம். அதுபோலக் கருத்துக்கள் நிறைந்த கட்டுரை அழகிய நடையில் அமைந்திருந்

மாயின், கற்போருக்கு அதனைத் தெவிட்டுதலின்றி வாசித்தறிய முடியும். எனவே, நடையழகு மிகவும் கவனிக்கத்தக்க தொன்றாகும்.

நல்ல நடை எழுத விரும்புவோர் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பின் வருமாறு:-

சொல்ல விரும்பிய விஷயத்தை மிகச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். அவசியமற்ற வார்த்தைகளைச் சேர்த்து வழ வழ என்று வரைதல் கூடாது.

(உ-ம்) இக்காலத்திலுள்ளதைப் போலப் போக்கு வரவிற்குரிய மோட்டார், இரயில், வாகஊர்தி முதலிய தலைசிறந்த வசதிகள் சரியாக இருக்கப் பெறாதிருந்த மிகப் பழைய முற்காலத்தில் தபால் அனுப்புவது, பொதுமக்கள் யாவருக்கும் ஒரு படித்தாகக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் எளிதிற கை கூடுவதாக இருந்திருக்க முடியாத தொரு விஷயமாகும்.

இவ்வாக்கியம் அனாவசியமாக நீட்சிபெற்றிருக்கிறது. இதனை, "போக்கு வரவுக்குரிய வசதிகள் இல்லாத முற்காலத்தில் தபால் அனுப்புவது எளிதன்று" என்று மிகச் சுருக்கமாக அமைக்கலாம். பொருளும் தெளிவாக விளங்கும்.

சொல்லப்பட்ட விஷயத்தின் பொருள் கற்போருக்குத் தெளிவாக விளங்குதல் வேண்டும். விளக்கமற்ற சொற்களால் சுற்றிச் சுற்றிக் கூறுவது நல்ல நடையாகாது.

(உ-ம்) "கரிக்குருவிக் குபதேசித்தருளிய கருணாகரமூர்த்தியின் கடைக்கண் பார்வையால்—" இதனைக "கடவுளருளால்" என்று தெளிவுபடக் கூறுவது நல்லது.

ஒரு கருத்தைத் திருப்பித் திருப்பிப் பலவிடங்களில் சொல்லுவதும், ஒரே சொல்லைப் பல விடஙகளில் வருமாறு அமைப்பதும் நடையழகைக் குறைத்து விடும்.

(உ-ம்) "கந்தன் இராமனைத் தேடி இராமனுடைய வீட்டில் போனான், இராமனுடைய வீட்டில் இராமன் இல்லை. ஆகையால் கந்தன் இராமனைக் காண முடியாததால் கந்தன் தன் வீட்டிறகுத் திரும்பிப போனான்,

இவ்வாக்கியத்தில் கந்தன், இராமன், வீடு, போனான் என்னும் வார்த்தைகள் பல இடங்களில் உபயோகப்பட்டுள்ளன. காணவில்லை என்ற கருத்தும் திருப்பிக் கூறப்பட்டுள்ளது. இதனை "கந்தன் இராமனது வீட்டிறகுப் போனான், அங்கு அவன்

இல்லை; ஆகையால் திரும்பி வந்தான்" என்று கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கிடமின்றி எழுதலாம்.

முதலிற் சொன்ன கருத்திற்கு நேர்மாறாகப் பின்னாற் சொல்வது பெருங் குற்றமாகும்.

(உ-ம்) "வேலன் சிறந்த அறிவாளி; உண்மைக்கு உறைவிடம்; ஒழுக்கத்திற்கு பிறப்பிடம். ஒரு நாள் அவனுக்கு நீர்வேட்கை அதிகமாக இருந்தமையின் அனுமதியின்றி அயலானுடைய தோட்டத்தில் புகுந்து இளநீர் திருடி அருந்தினான்."

இவ்வாக்கியத்தில் நேர்மாறான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறெழுதுவது குற்ற முடைத்து.

வாக்கியத்தில் பொருள், சந்தேகத்திற்கு இடமின்றி அமைந்திருத்தல் வேண்டும்.

(உ-ம்) "இராமனும், சோமனும் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். ஆனால் அவன் கல்வியில் கருத்துள்ளவன்" இவ்வாக்கியத்தில் கருத்துள்ளவன் யாரென்று நிச்சயமாகத் தெரியவில்லை.

"இராமன் கல்வியில் கருத்துள்ளவன்" என்றிருப்பின் சந்தேகத்திற்கு இடமிருக்காது.

கடினமான சொற்களைப் புகுத்திக் கற்றோர்க்கன்றி மற்றோர்க்கு விளங்கக்கூடாதவாறு எழுதுவதும் நல்ல நடையாகாது. கூடுமானவரையில் அனைவரும் அறிந்துகொள்ளுமாறு எளிய நடையில் எழுதுவது நல்லது.

(உ-ம்) "நீவிர் யாவிர்? ஈண்டுப் போந்த வாறென்? சமுறமின் கடிதில? வாளாமை மேற்கொள்வதென்னோ" இதனை, "நீர் யார்? இங்கு வந்த காரணமென்ன? சீக்கிரம் சொல்லும். ஏன் பேசாதிருக்கிறீர்" என்று எழுதுவது எளிய நடையாகும்.

தொடக்கத்தில் கடுஞ் சொற்களைச் சேர்த்து எடுத்தலாகவும், பின் செல்லச் செல்ல நடைமுறைச் சொற்களை இணைத்துப் படுத்தலாகவும் வாக்கியங்களை அமைப்பது சென்று தேய்ந்திறுதல் என்னும் குற்றத்திற்கிடமாகும்.

(உ-ம்) "உலகிற்கே யொரு கண்ணென மிளிரும் உயர் பேரொளியுறு செஞ்ஞாயிற்றினை, இரண்டு கைகளையும் சேர்த்துக் கொண்டு கும்பிட்டான்" இவ் வாக்கியம் முன் எடுத்துப் பின் படுத்துள்ளது.

இதனை, "கரங்குவித்து வணங்கினன்" என்று முடிப்பது நல்லது.

மேற்கூறிய குற்றங்களுக்கு இடமின்றி எளிய நடையில், தெளிவாகப் பொருள் விளங்கும்படி, ஆங்காங்கு மோனைகளையும், எதுகைகளையும் இணைத்து, ஆற்றொழுக்குப் போலத் தட்டாது வாசிக்கக் கூடியவாறு வாக்கியங்களை அமைப்பது நல்ல நடையாகும்.

VI வழூஉச் சொற்களும் திருத்தமும்

வழு	திருத்தம்
சிலவு	— செலவு
சேதி	— செய்தி
எண்ணை	— எண்ணெய்
வெண்ணை	— வெண்ணெய்
மானம்	— வானம்
காக்ஷி	— காட்சி
மாக்ஷி	— மாட்சி
கடாய்	— கடா
வீட்டிருந்தார்	— வீற்றிருந்தார்
ஓத்த மாட்டு வண்டி	— ஒற்றை மாட்டு வண்டி
இலிமிச்சம் பழம்	— எலுமிச்சம் பழம்
போட்டினான்	— போற்றினான்
வெட்டி	— வெற்றி (சயம்)
சுவற்றில்	— சுவரில்
அதர்க்கு	— அதற்கு
நூக்குறான்	— நூற்கிறான்
பாக்கிறான்	— பார்க்கிறான்
கார்த்தல்	— காத்தல்
கோர்வை	— கோவை
பயிர்ச்சி	— பயிற்சி
காச்சல்	— காய்ச்சல்
வேத்தூர்	— வேற்றூர்
வயறு	— வயிறு

வழு		திருத்தம்
பயிறு	—	பயறு
சாட்டினுன்	—	சாற்றினுன் (சொன்னுன்)
தாவடம்	—	தாழ்வடம்
தோத்தான்	—	தோற்ருன்
ஆத்துக்கு	—	அகத்துக்கு
கன்னுக்குட்டி	—	கன்றுக்குட்டி
வந்துட்டது	—	வந்துவிட்டது
குளுர்	—	குளிர்
போருன்	—	போகிருன்
போறேள்	—	போகிறீர்கள்
செய்தேள்	—	செய்தீர்கள்
செஞ்சான்	—	செய்தான்
சொன்னுங்க	—	சொன்னுர்கள்
சொன்னு	—	சொன்னுர்கள்

VII விலக்குதற்குரிய இழி வழக்குகள்

இழி சொல்		இலக்கணச் சொல்
கார்த்தாலே	—	காலே
அண்ணக்கயறு	—	அரைநாண் கயிறு
ஆம்படயான்	—	அகமுடையான்
ஏங்கிறேன்	—	ஏன் என்கிறேன்
போய்க்கிட்டு	—	போய்க்கொண்டு
திரிஞ்சான்	—	திரிந்தான்
ஓண்டினுன்	—	ஒன்றினுன்
வைச்சிட்டான்	—	வைத்து விட்டான்
கொடுத்துட்டேன்	—	கொடுத்து விட்டேன்
வாயப்பயம்	—	வாழைப்பழம்
செய்யணும்	—	செய்ய வேண்டும்
வாணும்	—	வேண்டாம்
காப்பாத்தனும்	—	காப்பாற்ற வேண்டும்
இரிங்க	—	இருங்கள்

VIII நிறுத்தக் குறிப்புப் பயிற்சிகள்

கீழ்வரும் வாக்கியங்களில் தக்க குறியீடுகளைத் தக்க இடங்களில் அமைக்க:

1. உதயணனுடைய நண்பர்களும் வீரர்களும் அவனைச் சிறை மீட்கும் எண்ணத்தோடு மாறுவேடம் பூண்டு வேறு பேர்களுடன் உச்சயினி நகரத்தில் வேலைபார்த்து வருதலையும் நகர்ப்புறத்தே பன்னூற்றுவர் வேண்டும்போது உதவிபுரியக் காத்திருத்தலையும் இவர்கட்குத் தலைமைபூண்டு எண்ணியதை எண்ணியவாறே நிறை வேற்ற யூகி தருணம் பார்த்திருத்தலையும் வயந்தகனது வாய்மொழி யால் வத்தவன் அறிந்தான்

2. சிலர் உணவு தேடி உததியில் உழக்குஞ் சுறுமீன்களைப் போன்று இன்னல் விளைக்கும் துன்னலர் எவரேனும் உளரோ இருப்பின் எதிர்ப்போம் எற்றுவோம் வெட்டுவோம் வீழ்த்து வோம் ஓடுமின் ஒழிமின் என்றும் செறுநரை விலக்கிச் சீறித் திரிந்த னர்

3. வன்பிடியே நினது குலத்தினிடமாகக் கொண்ட அன்பால் நான் அடைந்த சிறைத் துன்பத்தை முன்னர் நளகிரி போக்கிற்று பின்னர்த் தத்தையால் விளைந்த துன்பத்தையும் போக்குவது நினது கடமையே எனக் கூறி வத்தவன் அத்தியைத் தூண்டினன்

4. உத்தம வாசவதத்தை உம்மை மிகவும் நேசிக்கின்றாள் அவ்வுணர்ச்சியை மறைக்குந் திறமறியாது தவிக்கின்றாள் உண் ணாள் ஒரு பிடி உறங்காள் ஒரு நொடி எண்ணாள் ஒரு வழி இயம் பாள் ஒரு மொழி தோழியைப் பழிப்பாள் துணையை வெறுப்பாள் யாழினை எடுப்பாள் இசை மெலத்தொடுப்பாள் விரல்கள் நடுங்கும் வேற்றிசை பயிலும் அறியாது இசைப்பாள் அனைவருஞ் சிரிப்பார் திடுக்கிட்டெழுவாள் செயலற்று விழுவாள் பாங்கியர் சென்று பதைப்புடன் எடுத்தால் ஏங்குதலின்றி எதுவுங் கூறாள் அவள் துயரம் அளவிடற்கரிது ஐயனே நீர் அவளை மணஞ்செய்து கொள்ளு தற்கான முயற்சிகளை விரைவிற் செய்யக்கடவீர்

XI மரபுத் தொடர்கள்

குதிரைக்குட்டி, ஆட்டுக்குட்டி, புலிக்குட்டி, மான்கன்று, பசுங்கன்று, ஆட்டுப்புழுக்கை, எருமைச் சாணம் என்பன போன்ற மரபுச் சொற்றொடர்களை மாறுபாடின்றி வாக்கியத்தில் அமைக்க வேண்டும். குதிரைக்கன்று, பசுக்குட்டி, எருமைப் புழுக்கை என்று மாற்றி யமைப்பது குற்றமாகும்.

(உ-ம்) குதிரைக்குட்டி அழகா யிராது.
மான் கன்று துள்ளி விளையாடும்.

உப்பளம், ஊர்மன்று, பூமரம், நெய்க்குடம், தோய்தயிர், கார்த்திகை விளக்கு முதலானவையும் மரபுத் தொடர்களே.

உவமைகளையும் பழமொழிகளையும் அமைத்தல்

ஒரு கருத்தைத் தெரிவிக்கும் பொழுது, தகுந்த உவமைகளை எடுத்துக்காட்டினால் எளிதில் பொருள் விளங்கும். ஆதலின், உவமைகளையும் வாக்கியத்தில் பொருத்தி எழுதலாம். தக்க பழமொழிகளையும் ஊடே எடுத்துக்காட்டலாம்.

(உ-ம்) மனம் குரங்கைப் போன்றது.
உடுக்கை இழந்தவன் கைபோல, உற்றவிடத்தில் உதவி செய்பவரே உத்தம நண்பர்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது போல அவன் முகக்குறியே உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்திற்று.

"பாத்திர மறிந்து பிச்சையிடு" என்ற பழமொழிக் கிணங்க, நாம் தகுதி யறிந்து தருமஞ் செய்தல் வேண்டும்.

XI உவமை உருவக மாற்றம்

இரு வேறு பொருள்களின் ஒப்புவமையை எடுத்துக் காட்டுவது **உவமையணி** எனப்படும். உபமானம், உபமேயம், பொதுத் தன்மை, உவம உருபு என்னும் நான்கும் உவமை யணியின் உறுப்புக்களாம்.

போல, புரைய, ஒப்ப, இயைய, ஏய்ப்ப, அன்ன முதலியன உவம வுருபுகள். உவமையுணியில் உவம வுருபு வெளிப்படையாக இருக்கும்.

(உ-ம்) சிங்கம் யானைக் கூட்டத்தை அழித்ததுபோலப் பிரதாபன் பகைவீரரை அழித்தான்.

உபமானத்தையும், உபமேயத்தையும் பண்புத்தொகை நிலைத்தொடரைப் போல ஒன்று படுத்தி, உபமானத்தின் தன்மையை உபமேயத்தின் மேல் ஏற்றிக் கூறுவது **உருவக அணி** எனப்படும். பொதுவாக உருவக அணி உவமையணியைப் போன்றதே. ஆனால், உருவகத்தில் உவம வுருபு இராது. அதற்குப் பதிலாக **ஆகிய** என்னும் உருவக வுருபு நிற்கும்.

உவமையணியில், உபமான உபமேயங்களின் தன்மை, தனித் தனியாகக் கூறப்பட்டிருக்கும். உருவக அணியில் உபமேயத்தின் தன்மை உபமானத்தின்மேல் ஏற்றிக் கூறப்பட்டிருக்கும்.

XII வல்லினம் மிகுமிடங்களும் மிகாவிடங்களும்

மிகுமிடங்கள்

அல்வழிப் புணர்ச்சியில், பண்புத்தொகையிலும், உவமத் தொகையிலும் நிலைமொழியின் ஈற்றில் ய், ர், ழ் என்னும் மெய்யெழுத்துக்களிலொன்று இருக்க, வருமொழியின் முதலில் வல்லினம் வந்தால் அவ்வல்லினம் மிகும்.

(உ-ம்) மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி (பண்பு)
கார் + பருவம் = கார்ப்பருவம் ,,
தமிழ் + தெய்வம் = தமிழ்த்தெய்வம்
வேய் + தோள் = வேய்த்தோள் (உவமைத் தொகை)
கார் + குழல் = கார்க்குழல் ,,
காழ் + தோள் = காழ்த்தோள் (காழ் = வயிரம்)

வேற்றுமைப் புணர்ச்சியில் ய், ர், ழ் என்னும் மெய்யெழுத்துக்களுக்குப் பின் வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்) நாய் + கால் = நாய்க்கால்
தேர் + தட்டு = தேர்த்தட்டு
தமிழ் + செய்யுள் = தமிழ்ச்செய்யுள்

யகர ஈற்று வினையெச்சத்திற்குப்பின் வரும் வல்லினம் மிகும்.

(உ-ம்) போய் + சொன்னான் = போய்ச்சொன்னான்

மிகாத இடங்கள்

அல்வழிப் புணர்ச்சியில், எழுவாய்த் தொடர், உம்மைத் தொகை. வினைத்தொகைகளில் வரும் ய், ர், ழ் என்னும் மெய்யெழுத்துக்களுக்குப் பின், வல்லினம் மிகாது.

(உ-ம்) தாய் பெரியவள்
வேர் சிறிது
தமிழ் சிறந்தது } எழுவாய்த் தொடர்

பேய் பிசாசு
நீர் கானல்
இகழ் புகழ் } உம்மைத் தொகை

செய் கடன்
தேர் பொருள்
வீழ் புனல்
} வினைத் தொகை

ரகர ஈற்று வினை யெச்சத்தின் பின் வல்லினம் மிகாது.

(உ-ம்) உண்ணியர் போவான்.

கீழ் என்னும் சொல்லுக்குப் பின், வல்லினம் வந்தால் மிகுதலும் இயல்புமாகும்.

(உ-ம்) கீழ் சாதி — கீழ்ச்சாதி
கீழ் குலம் — கீழ்க்குலம் } மிகல்

கீழ் சாதி — கீழ் சாதி
கீழ் குலம் — கீழ் குலம் } இயல்பு

புணர்ச்சியில் இயல்பாதல்

அ என்று முடிகின்ற செய்யிய என்னும் வினையெச்சத்திற்கும், பலவகைப் பெயரெச்சங்களுக்கும், வினைமுற்றிற்கும் ஆறும் வேற்றுமை யுருபிற்கும், அஃறிணைப் பன்மைப் பெயர்க்கும், அம்ம என்னும் இடைச்சொல்லுக்கும பின்னால் வருமொழியின் முதலில் உள்ள வல்லெழுத்து மிகாது.

(உ-ம்) செய்யிய என்னும் வினையெச்சம்

உண்ணிய + கொடுத்தான் — உண்ணிய கொடுத்தான்.
சொல்லிய + செய்தான் — சொல்லிய செய்தான்.

பெயரெச்சம்

படித்த + பையன் = படித்த பையன்
பாடிய + குயில் = பாடிய குயில்
பெரிய + குதிரை = பெரிய குதிரை

வினைமுற்று

வந்தன + குதிரை = வந்தன குதிரை
விழுந்தன + பழங்கள் = விழுந்தன பழங்கள்
பெரியன + பழங்கள் = பெரியன பழங்கள்

ஆறும் வேற்றுமை யுருபு

தன + கைகள் — தன கைகள்
தன + கால்கள் — தன கால்கள்
இராமனுடைய + கை — இராமனுடைய கை

அஃறிணைப் பன்மைப் பெயர்

சில + சென்றன — சில சென்றன
பல + பந்துகள் — பல பந்துகள்

அம்ம என்னும் இடைச் சொல்

அம்ம + தம்பி — அம்ம! தம்பி
அம்ம + கடவுளே — அம்ம! கடவுளே.

(சூ-ம்) செய்யிய என்னும்வினை யெச்சம், பல்வகைப்
பெயரின் எச்சம், முற்று, ஆறன் உருபே,
அஃறிணைப் பன்மை, அம்மமுன் இயல்பே.

XIII இடம் விட்டெழுதுதலும் சேர்த்து எழுதுதலும்

பத்திகளைத் தனித்தனியாகப் பிரித்து எழுதவேண்டும். முதற் பத்திக்கும், இரண்டாவது பத்திக்கும் இடையில் சிறிது இடைவெளி இருந்தால்தான் இரண்டும் வெவ்வேறு பத்திகள் என்பது தெரியும். ஒரு பத்தியை எழுதத் தொடங்கும்பொழுது, இடப் புறத்தில் சிறிது இடம்விட்டு, முதல் வரியை இடையில் தொடங்கி எழுத வேண்டும்.

பத்தியிலுள்ள வாக்கியங்களுக்கிடையில் சிறிது வெளியிருக்க வேண்டும். முற்றுப்புள்ளி வைத்திருந்தாலும் அதற்கடுத்துச் சிறிது இடைவெளி யிருந்தால்தான் அடுத்து வருவது வேறு வாக்கியம் என்பது எளிதிற் புலப்படும்.

இனி முக்காற் புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, முதலிய குறியீடுகளுக்கும் பின் சிறிதளவு இடைவெளி இருக்கவேண்டும். முற்றுப்புள்ளிக்குப் பின் அரை அங்குல நீளமும், முக்கால் புள்ளி, அரைப்புள்ளி, வியப்புக்குறி, வினைக்குறி முதலியவற்றிற்குப் பின் அரை அங்குல நீளமும், காற்புள்ளிக்குப் பின் கால் அங்குல நீளமும் இடைவெளி விட்டு எழுதுவது சிறந்த முறையாகும். இவ்வாறு இடைவெளி விட்டெழுதுவது வாக்கியங்களின் பொருள் எளிதில் அறிந்து கொள்வதற்குச் சாதகமாயிருக்கும். இடைவெளியின்றிச் சேர்த்தெழுதினால், கற்போர் வாக்கியங்களின் கருத்துக்களை உள்ளவாறு அறிந்து கொள்ள முடியாமல் இடர்ப்படுவர்.

XIV சொற்களை இடம் விட்டெழுதுதலும் சேர்த்தெழுதுதலும்

வாக்கியத்திலுள்ள சொற்களையும் தனித்தனியே பிரித்தெழுதுவது சிறந்த முறையாகும். அவசியமற்ற கடின சந்திகளைப் புகுத்தி வார்த்தைகளை உருத்தெரியாமல் இணைத்து எழுதினால் மாணவர்களும், பொதுமக்களும் வாசிக்க முடியாமல் திணறுவர். கடின சந்திகள் செய்யுள்களுக்கே பெரிதும் பயன்படுவன. உரைநடையில் அவை பேரிடர் விளைப்பனவாகும்.

மேலும் அடைமொழிகளை அவ்வவற்றிற்கு உரிய சொற்களோடு சேர்த்து எழுத வேண்டுமேயன்றிப் பொருள் தொடர்பற்ற சொற்களோடு சேர்ப்பது தவறு. "வறியார்க்கொன்று ஈவதேயீகை"—இதில், "ஏழையைக் கொன்று" எனப் பொருள் கூற இடமேற்படுவதால், இதுபோன்ற சந்தேகத்திற்கிடமான சந்திகளையும் பிரித்து எழுதுவதே சிறந்த முறையாகும்.

(உ-ம்) "இரா மன்பா டத்தைப்ப டிக்கும்பொழுதவன் தங்கையும்கூ டவிருந் தாள்."

இந்த வாக்கியத்தில் வார்த்தைகள் சேர்க்கப்பட்டு இருக்கின்ற முறை பொருளை எளிதில் உணர்ந்துகொள்ளத் தக்கதாக இல்லை.

"இராமன் பாடத்தைப் படிக்கும் பொழுது அவனுடைய தங்கையும் கூடவிருந்தாள்."

இவ்வாறு பிரித்தெழுதினால் பொருள் எளிதில் விளங்கும். எனவே ஒன்றையொன்று தழுவி நிற்கும் சொற்களை இணைத்தும், பிற சொற்களை இடை விட்டும் எழுதுதல் வேண்டும்.

எழுத்துக்களைச் சேர்த்துக் கூட்டெழுத்தாக எழுதுவதும் தவறு. வரிக்கு முதலில் மெய்யெழுத்து வருமாறு எழுதுதல் கூடாது. வரி முடிவில் வரும் வார்த்தையை முறையின்றிப் பிரித்தெழுதுவதும் தவறு. உறுப்பிலக்கண முறைப்படி பிரிப்பதே சிறந்த வழியாகும். பெரும்பாலும் சொற்களைப் பிரிக்காமல் எழுவது நலம். வரியின் இறுதியில் இடமில்லாவிடின், அடுத்த வரியில் முழு வார்த்தையாகத் தொடங்கி எழுதுவது சிறந்த முறையாகும்.

(சிறப்பு)

I எழுத்து

(1) ஐகார ஔகார மகர ஆய்தக் குறுக்கங்கள்

ஐகாரக் குறுக்கம்

ஐகாரம், ஒரு மொழியில் முதல், இடை, கடை என்னும் மூன்றிடங்களிலும் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவினின்றும் குறைந்து ஒலிக்கும். தன்னைக் குறிக்குமிடத்திலும், அளபெடையிலும் குறுகாது

(உ-ம்) ஐப்பசி, மடையன், தாமரை.

ஔகாரக் குறுக்கம்

ஔகாரம், தன்னைக் குறிக்குமிடத்திலும், அளபெடுக்குமிடத்திலும் குறுகாது. சொல்லின் முதலில் வரும்பொழுதெல்லாம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவினின்றும் குறைந்து ஒலிக்கும்.

(உ-ம்) ஔவை, மௌவி.

(சூ-ம்) தற்சுட் டளபொழி ஐம்மூ வழியும்
நையும்; ஔவும் முதல் அற் றாகும்.

மகரக் குறுக்கம்

ண், ன் என்னும் மெய்யெழுத்துக்களுக்குப் பின் வருகின்ற மகரமெய், குறுகி ஒலிக்கும்.

(உ-ம்) மருண்ம் (மருளும்), போன்ம் (போலும்.)

வகரத்திற்கு முன்னல் வருகின்ற மகரமெய், தன் அளவில் குறுகி ஒலிக்கும்.

(உ-ம்) தரும்வளவன்.

(சூ-ம்) ண, ன முன்னும், வஃகான் மிசையுமக் குறுகும்.

ஆய்தக் குறுக்கம்

தனிக்குறிலைச் சார்ந்த லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சியில் வருமொழியின் முதலில் தகரம் வந்தால் லகர ளகரங்கள், ஆய்த

வெழுத்தாக மாறும். அவ்வாறு மாறுபட்ட ஆய்தவெழுத்து அளவில் குறுகி யொலிக்கும்.

(உ-ம்) அல் + திணை = அஃறிணை
முள் + தீது = முஃடீது

(சூ-ம்) ல, ள, ஈற் றியைபினும் ஆய்தம் அஃகும்.

(2) பிறப்பு—எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

உயிரெழுத்துக்களில் அ, ஆ இரண்டும் வாயைத் திறக்கும் முயற்சியால் பிறக்கும். இ, ஈ, எ, ஏ, ஐ என்ற இவ்வைந்தும் வாயைத் திறத்தலுடன் மேல்வாய்ப்பல்லை நாவின் அடியோரம் பொருந்தச் செய்யும் முயற்சியால் பிறக்கும். உ, ஊ, ஒ, ஓ, ஔ என்ற இவ்வைந்தும் உதடுகளைக் குவித்தலால் பிறக்கும்.

மெய்யெழுத்துக்களில் க, ங என்பன நாக்கின் அடி மேல்வாயடியையும், ச, ஞ என்பன நாக்கின் நடு மேல்வாய் நடுவையும், ட, ண என்பன நாக்கின் நுனி மேல்வாய் நுனியையும் பொருந்தப் பிறக்கும். மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கு நுனி பொருந்தவே த, ந என்பன பிறக்கும். மேலுதடும், கீழுதடும் சேரவே ப, ம என்பன பிறக்கும். நாக்கின் அடி மேல்வாய் அடியைப் பொருந்த ய பிறக்கும். மேல் வாயை நாக்கு நுனி தடவ ர, ழ என்பன பிறக்கும். மேல்வாய்ப் பல்லடியை நாவோரமானது தடித்து நெருங்கவே லகரமும், மேல் வாயைநாவோரமானது தடித்துத் தடவ ளகரமும் பிறக்கும். மேல் வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்த வகரம் பிறக்கும். பல எழுத்துக்களுக்கு முயற்சிப் பிறப்பு ஒன்றாகச் சொல்லப்பட்டன வாயினும் உயர்த்தியும், தாழ்த்தியும் கூறுதலாலும் ஒன்றற்கொன்று வேறு பாடு தோன்றும்.

(3) மெய்ம்மயக்கம்

சொல்லின் இடையில் மெய்யெழுத்துக்களோடு மெய்யெழுத்துக்கள் ஒத்து நிற்பதைக் கூறுவது மெய்ம்மயக்கமாகும். தனி மெய்யை அடுத்துவரும் மெய்யைப்பற்றிக் கூறுவதில்தான் சில வரையறைகள் உண்டு. உயிர்மெய்களை அடுத்துவரும் மெய்களையோ, உயிர் மெய்களையோபற்றிய வரையறை யொன்றும் இல்லை. இம் மெய்ம் மயக்கம் உடனிலை மயக்கம், வேற்றுநிலை மயக்கம் என இருவகைப் படும்.

உடனிலை மெய்ம்மயக்கம்

ரகாரமும், ழகாரமும் ஒழிந்த பதினாறு மெய்களும் தம்மொடு தாம் கூடி நிற்கும் கூட்டத்திற்கு **உடனிலை மெய்ம்மயக்கம்** என்று பெயர். ரகாரமும், ழகாரமும் அவ்வாறு இரட்டித்து நில்லா.

(உ-ம்) பக்கம், அங்ஙனம், அச்சம், அஞ்ஞானம், பட்டம், திண்ணம், அத்தன், வெந்நீர், அப்பம், அம்மா, வெய்யர், நல்லன், தெவ்வர், பள்ளம், வெற்றி, மன்னன்.

வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

க, ச, த, ப என்ற இந்நான்குமல்லாத பதினான்கு மெய்களும் பிறமெய்களோடு கூடும் கூட்டத்திற்கு **வேற்றுநிலை மெய்ம்மயக்கம்** என்று பெயர்.

(சூ-ம்) க ச த ப வொழித்தவீ ரேழன் கூட்டம்
மெய்ம்மயக்(கு) உடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபான் மயக்கு மொழியிடை
மேவும் உயிர்மெய்ம் மயக்கள வின்றே.

வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்புவிதி

ங் என்ற மெய்யுடன் ககரவுயிர்மெய் சேரும். வ் என்ற மெய்யுடன் யகர வுயிர்மெய் சேரும்.

(உ-ம்) தங்கம், தெவ்யாது.

(சூ-ம்) ஙம்முன் கவ்வாம் வம்முன் யவ்வே.

ஞ், ந் என்ற மெய்களுடன் அவற்றின் இனமாகிய சகரமும் தகரமும் சேர்வதன்றி யகரமும் சேரும்.

(உ-ம்) பஞ்சு, உரிஞ்யாது.
பந்து, பொருந்யாது.

(சூ-ம்) ஞநமுன் தம்மினம் யகரமொ டாகும்.

ட், ற் என்ற மெய்களுடன் க, ச, ப என்ற மூன்று மெய்களும் மயங்கும்.

(உ-ம்) வெட்கம், வெட்சி, திட்பம்.
கற்க, பயிற்சி, வெற்பு.

(சூ-ம்) டறமுன் க, ச, ப மெய்யுடன் மயங்கும்.

ண், ன் என்ற மெய்களுடன் அவற்றின் இனமாகிய டகாரமும் றகாரமும் க, ஞ, ப, ம, ய, வ என்ற மெய்களுடன் மயங்கும்.

(உ-ம்) வண்டு, வெண்கலம், விண்ஞாயிறு, பண்பு,
வெண்மணல், மண்யாது, கண்வலி,
நன்றி, புன்கண், புன்செய், புன்ஞமலி, அன்பு,
நன்மை, பொன்யாது, பொன்வலிது.

(சூ-ம்) ணனமுன் இனம் க, ச, ஞ, ப, ம, ய வவ்வரும்.

ம் என்ற மெய்யுடன் ப, ய, வ என்ற மெய்கள் மயங்கும்.

(உ-ம்) கம்பர், அறம்யாது, கலம்வலிது.

(சூ-ம்) மம்முன் ப, ய, வ, மயங்கு மேன்ப.

ய், ர், ழ் என்னும் மெய்களின் முன்னர்க் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங என்ற பத்து மெய்களும் மயங்கும். இவற்றுள் யகரத்துடன் யகரம் மயங்குதல் உடனிலை மயக்கமாகும்.

(உ-ம்) பெய்க, காய்சினம், செய்தான், தாய்காடு, செய்பு,
பாய்மா, ஆய்வர், செய்யாது, வேய்ஞான்றது, வேய்ங்குழல்
சேர்க, சீர்சால், அவர்தாம், நீர்நிலை, மார்பு, நேர்மை,
பார்வை. நீர்யார், சேர்ஞாயிறு ஆர்ங்கோடு.
வாழ்க, வீழ்சுடர், தாழ்தல், வாழ்நாள், வாழ்பவர், பாழ் மனம், வீழ்யாது, வாழ்வர், புகழ்ஞாயிறு, பாழ்ங் கிணறு.

(சூ-ம்) ய, ர, ழ முன்னர் மொழிமுதன் மெய்வரும்.

ல், ள் என்ற மெய்களுடன் க, ச, ப, வ, ய என்ற மெய்கள் மயங்கும்.

(உ-ம்) வெல்க, வல்சி, சொல்ப, செல்வர், நூல்யாது
கொள்க, நாள்சிறிது, நாள்பார், கள்வர், வாள்யாது

(சூ-ம்) லளமுன் கசப வயவொன் றும்மே.

குறிப்பு:— க, ச, த, ப இந்நான்கும் உடனிலை மயக்கத்திற்கு மட்டும் வரும். ர, ழ இரண்டும் வேற்றுநிலை மயக்கத்திற்கே வரும். இவையொழிந்த பன்னிரண்டு மெய்களும் உடனிலை மயக்கத்திற்கும், வேற்றுநிலை மயக்கத்திற்கும் வரும். எழுத்துக்கள் தம் பெயரைக் கூறவருமிடத்து இம்முறை மாறியும் வரும்.

பயிற்சி வினாக்கள்

1. ஐகாரம் எப்பொழுது தன் மாத்திரையில் குறுகும்?
2. ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்களை விளக்குக.

3. அ, உ, எ, ஒ, க, ஞ, ட, ந, ப, வ, ர, ள இவ்வெழுத்துக்களுக்கு முயற்சிப் பிறப்பைக் கூறுக.
4. மெய்ம்மயக்கம் என்றால் என்ன?
5. உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இவற்றை விளக்குக.
6. உடனிலை மயக்கத்திற்கும், வேற்றுநிலை மயக்கத்திற்கும் மட்டும் வரும் மெய்யெழுத்துக்கள் யாவை?
7. இருவகை மயக்கத்திலும் வருவன யாவை?
8. ங, ம, ண, ள இவற்றுடன் மயங்கும் மெய்கள் யாவை?

II சொல்

(1) ஓரெழுத்தொருமொழி

ஓரெழுத்தாயினும் பொருளைத் தருமாயின் அது சொல்லாம். அவ்வாறு வரும் ஓரெழுத்தொருமொழிகள், உயிரெழுத்துக்களில் ஆறும், மகர வருக்கத்தில் ஆறும், தகர, பகர, நகர வருக்கங்களில் ஐயைந்தும், ககர, வகர, சகர வருக்கங்களில் நன்னான்கும், யகர வருக்கத்தில் ஒன்றும், ஆக நாற்பது நெட்டெழுத்துக்களும், நொ, து என்ற இரண்டு குற்றெழுத்துக்களும் ஆக நாற்பத்திரண்டாம்.

(உ-ம்) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ — உயிர்
மா மீ மூ மே மை மோ — ம
தா தீ தூ தே தை — த
பா பூ பே பை போ — ப
நா நீ நே நை நோ — ந
கா கூ கை கோ — க
வா வீ வை வௌ — வ
சா சீ சே சோ — ச
யா — ய
நொ து — குறில்

ஆ—பசு, ஊ—இறைச்சி, ஏ—அம்பு, ஓ—மதகு நீர் தாங்கும் பலகை, பே—நுரை, நே—அன்பு, சோ—மதில், நொ—துன்பப்படு, து—உண்.

(சூ-ம்) உயிர்மவி லாறும் தபநவி லைந்தும்
கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில்நொது ஆங்குறில் இரண்டோ(டு)
ஓரெழுத் தியல்பதம் ஆறேழ் சிறப்பின.

(2) இலக்கணை

இலக்கணை என்பது ஒரு பொருளின் தன்மையை மற்றொரு பொருட்குத் தந்துரைப்பது. இது குறிப்பாற் பொருள் தருவது. குறித்த பொருளுக்கு மாறான பொருளைத் தருவதும் இலக்கணையின் பாற்படும். அது எதிர்மறை இலக்கணை எனப்படும்.

(உ-ம்) பாயிருள் பருகிப் பகல் கான்று எழுதரும் பல்கதிர்ப் [பரிதி.

பருகுதலும் கானுதலுமாகிய சொற்கள் இருளைப் போக்குதலும், பகலைத் தருதலுமாகிய செயல்களையுடைய பரிதிக்குக் கூறப்படுவது இலக்கணை.

செவி கைப்பச் சொற் பொறுக்கும்.

வாயின் சுவையாகிய 'கைப்ப' என்பது செவி கேட்க முடியாத என்ற பொருளில் கூறப்படுவது இலக்கணை.

நிரம்பிய என்ற பொருளைத் தரும் 'நிரப்பு' என்னும் சொல் வறுமையை உயர்த்துவது எதிர்மறை யிலக்கணை.

பின்னின்-றிழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை.

இங்குச் சான்றோர் என்பது தீயரை உணர்த்துதலால்
எதிர்மறை இலக்கணை.

(3) பெயர்ச்சொல்

(i) விளிவேற்றுமையில் அமையும் விகாரங்கள்

ஐகார ஈற்று உயர்திணைப் பெயர்களும், அஃறிணைப் பெயர்களும் விளியேற்கும்பொழுது ஆய் எனத் திரியும். ஐகார வீற்றுப் பொதுப் பெயர் ஆய் என்றும், ஆ என்றும் திரியும்.

(உ-ம்) விடலை—விடலாய்!—உயர்திணைப் பெயர்
நாரை—நாராய்!—அஃறிணைப் பெயர்.
அன்னை — அன்னாய்! — அன்னா!—பொதுப் பெயர்.

(சூ-ம்) ஐயிறு பொதுப் பெயர்க்கு ஆயும் ஆவும்
உருபாம் அல்லவற்றுயும் ஆகும்.

'அன்னை' என்ற பொதுப் பெயர் 'அன்னே!' என ஐகாரம் ஏகாரமாகத் திரிதலுமுண்டு.

னகரவீற்று உயர்திணைப் பெயர், விளியேற்கையில் அளபெடுத்தும், இறுதிகெட்டும், அயல்நீண்டும், அயல்நீண்டு ஓகாரம் மிகுந்தும், இறுதிகெட்டும், ஓகாரம் மிக்கும், இறுதி னகரம் யகரமாகத் திரிந்தும், அவ்வாறு திரிந்து, அயலெழுத்தும் திரிந்து ஏ மிகுந்தும், இறுதிகெட்டு அயலிலுள்ள அகாரம் ஏகாரமாகியும் வரும்.

(உ-ம்) கூடலூர்க் கிழார்—கூடலூர்க்கிழா அர்!—அளபாயிற்று.
புலவன் —புலவ!—ஈறு கெட்டது.
பெருமன் —பெருமான்!—ஈற்றயல் நீண்டது.
மன்னன் —மன்னா! ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது.
ஐயன் —ஐயாவோ! ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு ஓ மிக்கது.
திரையன் —திரையவோ! ஈறுகெட்டு ஓகாரம் மிக்கது.
வாயிலான் —வாயிலாய்!—இறுதி யவ்வாயிற்று.
வாயிலான் —வாயிலோயே! இறுதி யவ்வாய் ஈற்றயல் திரிந்து ஏமிகுந்தது.
ஐயன் —ஐயே!—ஈறுகெட்டு அயலில் அகாரம் ஏகாரமாயிற்று.

(சூ-ம்) ஒருசார் னவ்வீற் றுயர்திணைப் பெயர்க்கண்
அளபீ றழிவயல் நீட்சி யதனோ
டீறு போத லவற்றோ டோவுறல்
ஈறழிந் தோவுற லிறுதியவ் வாதல்
அதனோ டயல்திரிந் தேயுறல் ஈறழிந்
தயல்ஏ யாதலும் விளியுருபாகும்.

ளகாரவீற்றுயர்திணைப் பெயர் விளியேற்கும்பொழுது அளபெடுத்தும், இறுதி கெட்டும், அயல்நீண்டும், இறுதி யகரமாய்த் திரிந்தும், ஈற்றயல் அகரம் ஏகாரமாய்த் திரிந்தும் வரும்.

(உ-ம்) வேள் — வேஎள்! — அளபெடுத்தது.
எல்லாள் — எல்லா! — ஈறு கெட்டது.
மக்கள் — மக்காள்! — ஈற்றயல் நீண்டது.
குழையாள் — குழையாய்! — இறுதியவ்வாயிற்று.
அடிகள் — அடிகேள்! — ஈற்றயல் அகரம் ஏயாயிற்று.

(சூ-ம்) ளஃகா னுயர் பேயர்க் களபீ றழிவயல்
நீட்சி யிறுதி யவ்வோற் றுதல்
அயலி லகரமே யாதலும் விளித்தனு.

ரகாரவீற்று உயர்திணைப் பெயர் விளியேற்கும் போது அளபெடுத்தும், ஈற்றயல் அகரம் இகரமாகவும், ஈகாரமாகவும் திரிந்தும், ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகியும், அவ்வாறு திரிந்தத னோடு ஏகாரம் மிக்கும், இறுதி மிக்கு அயலிலுள்ள யாக்கெட்டு அதனையடுத்துள்ள குறில் நீண்டும், இறுதியில் ஈர் சேர்ந்தும் வரும்.

(உ-ம்) சிறூர் — சிறூ அர்! — அளபெடுத்தது.
தெவ்வர் — தெவ்விர்! — ஈற்றயல் அகரம் இகர மாயிற்று.
நாய்கர் — நாய்கீர்! — ஈற்றயல் அகரம் ஈகார மாயிற்று.
சான்றோர் — சான்றீர்! — ஈற்றயல் ஆகாரம் ஈகார மாயிற்று.
கணியார் — கணியீரே! — ஈற்றயல் ஆகாரம் ஈகார மாய் ஏகாரம் மிக்கது.
நம்பியார் — நம்பீரே! — ஈற்றில் ஏகாரம் மிக்கு அயல் யாக்கெட்டு அதன் பின் இகரம் ஈகாரமாயிற்று.

(சூ-ம்) ரவ்வீற் றுயர்பெயர்க் களபெழ லீற்றயல்
அகரம் இ, ஈ யாதல் ஆண்டை ஆ
ஈயாத லதனோ டேயுற லீற்றஎ
மிக்கயல் யாக்கெட் டதனயல் நீடல்
ஈற்றி னீருறல் இவையுமீண் டுருபே.

லகாரஈற்று உயர்திணைப் பெயர் விளியேற்கும் பொழுது அளபெடுத்தும், அயல் நீண்டும் வரும். யகாரவீற்று உயர்திணைப் பெயர் ஈற்றில் அளபெடுத்து வரும்.

(உ-ம்) மால்— மாஅல்! — அளபெடுத்தது.
தோன்றல்—தோன்றால்! — அயல் நீண்டது.
சேய்—சேஎய்! — அளபெடுத்தது.

(சூ-ம்) லகாரவீற் றுயர்பெயர்க் களபயல் நீட்சியும்
யகார வீற்றிற்கு அளபுமாம் உருபே.

னகரவீற்று அஃறிணைப் பெயரும், பொதுப் பெயரும் விளியேற்று வருகையில் ஈறு கெட்டும் அதனோடு அயல் நீண்டும் வரும்.

அஃறிணைப் பெயர்

(உ-ம்) அலவன் — அலவ! அலவா! — ஈறு கெடலும், ஈற்றயல் நீடலும்.

பொதுப் பெயர்

சாத்தன்—சாத்த, சாத்தா! ஈறுகெடலும் ஈற்றயல் நீடலும்.

(சூ-ம்) னவ்வீற் றுயர்திணை யல்லிரு பெயர்க்கண்
இறுதி யழிவத னோடயல் நீட்சி.

லகர ளகரவீற்று அஃறிணைப் பெயர்களும், பொதுப் பெயர்களும் ஈற்றயல் நீண்டு வரும்.

(உ-ம்) முயல் — முயால்! } அஃறிணைப் பெயர்கள்.
கிளிகள் — கிளிகாள்! }
பிள்ளை — பிள்ளைகாள்! — பொதுப் பெயர்.

(சூ-ம்) லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்
ஈற்றயல் நீட்சியும் உருபா கும்மே.

(ii) ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள்

அன், ஆன், மன், மான், இ, ஐ, ன், ள், அல், ய் என்பன உயர்திணை யாண்பாற் பெயர்களின் விகுதிகளாம்.

(உ-ம்) அரசன், ஒதுவான், வடமன், கோமான், வில்லி, விடலை, கோன், வேள், அண்ணல், சேய்.

அள், ஆள், ள், இ, ஐ, ய் முதலியன உயர்திணைப் பெண்பாற் பெயர்களின் விகுதிகளாம்.

(உ-ம்) அவள், ஆதிரையாள், மகள், செல்வி, பின்னை, தாய்.

அர், ஆர், மார், ர், கள், இர் முதலியன உயர்திணைப் பலர்பாற் பெயர்களின் விகுதிகளாகவரும்.

(உ-ம்) அவர், பெரியார், குருமார், நாதர், கோக்கள், மகளிர்.

து, ன், அல், ழ், இ முதலியன அஃறிணை யொன்றன்பாற் பெயர்களுக்குரிய விகுதிகளாம்.

(உ-ம்) அது, மான், வளையல், தமிழ், அலரி.

அ, வை, கள் முதலியன அஃறிணைப் பலவின்பாற் பெயர்களுக்குரிய விகுதிகளாம்.

(உ-ம்) கரிய, அவை, யானைகள்.

4. வினைச் சொல்

(i) ஐம்பால் வினைமுற்று

அன், ஆன் என்ற விகுதிகளையுடையன ஆண்பால் வினைமுற்றுக்களாம்.

(உ-ம்) வந்தனன், வந்தான்.
குழையன், குழையான்.

அள், ஆள் என்ற விகுதிகளையுடையன பெண்பால் வினைமுற்றுக்களாம்.

(உ-ம்) வந்தனள், வந்தாள்.
குழையள், குழையாள்.

அர், ஆர், ப, மார் என்ற விகுதிகளையுடையன பலர்பால் வினைமுற்றுக்களாம்.

(உ-ம்) வந்தனர், வந்தார், வருப, சென்மார்.
குழையர், குழையார் — —

து, று, டு என்ற விகுதிகளையுடையன ஒன்றன்பால் வினைமுற்றுக்களாம்.

(உ-ம்) வந்தது, போயிற்று.
குழையது, அற்று, பொருட்டு.

அ, ஆ, என்ற விகுதிகளையுடையன பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

(உ-ம்) நடந்தன, நடவா.
கரியன.

(ii) சினைவினை முதல்வினை

சினையின் வினை சினையோடு சேர்தலேயன்றி முதலோடும் சேர்ந்து முடியும்.

(உ-ம்) கால் ஒடிந்து வீழ்ந்தான்.
முகம் கவிழ்ந்து சென்றான்.

(சூ-ம்) சினைவினை சினையோடும் முதலோடும் செறியும்.

(iii) ஆக்கவினை

ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள், விரிந்தாயி னும், தொக்காயினும் வரும் ஆக்கச் சொல்லின்றி வாரா.

(உ-ம்) சாத்தன் நல்லனாயினான் — விரிந்தது.
சாத்தன் நல்லன் — தொக்கது.
கல்வியாற் பெரியனாயினான் — விரிந்தது.
கல்வியிற் பெரியன் — தொக்கது.

(சூ-ம்) ஆக்கவினைக் குறிப்(பு) ஆக்கமின் றியலா.

(5) இடைச் சொல்

அந்தில், ஆங்கு, மா முன்னிலையசைச் சொற்கள்

அந்தில், ஆங்கு என்னும் இவ்விரண்டிடைச் சொல்லும் அசை நிலைப் பொருளிலும், இடப்பொருளிலும் வரும்.

(உ-ம்) அந்திற் கழலினன் கச்சினன் — அசைநிலை.
அந்திற் கொழுநற்காணிய — இடம்.
ஆங்கத் திறனல்ல யாம் கழற— அசைநிலை.
ஆங்காங்காயினும் ஆக — இடம்.

(சூ-ம்) அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே.

மா என்னும் இடைச்சொல் வியங்கோளிடத்து வரும் அசைச் சொல்லாம்.

(உ-ம்) உண்கமா கொற்கையோனே.

(சூ-ம்) மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்பன முன்னிலை யிடத்து வரும் அசைச்சொற்களாம்.

(உ-ம்) கேண்மியா! — மியா
காணிக — இக
மொழிமோ! — மோ
சென்மதி! — மதி
சொல்லிய ரத்தை! — அத்தை
நீயொன்று பாடித்தை! — இத்தை
காணிய வாழிய! — வாழிய

தவிர்ந்தீக மாள! — மாள.
சென்றீ பெரும! — ஈ.
செலவயர்ந் தியாழ!— யாழ.

(சூ-ம்) மியாயிக மோமதி யத்தை யித்தை
வாழிய மாளவீ யாழமுன் னிலையசை.

பயிற்சி வினாக்கள்

1. ஓரெழுத்தொரு மொழிகள் எத்தனை?
2. இலக்கணை என்றால் என்ன?
3. ன், ள், ல் இவ் வீற்றுப் பெயர்கள் விளிவேற்றுமையில் அடையும் விகாரங்கள் யாவை?
4. ஐம்பால் பெயர்களுக்குமுரிய விகுதிகள் யாவை?
5. சினை வினை எவ்வாறு வரும்?
6. ஆக்கவினை எவ்வாறு வரும்?
7. அந்தில், ஆங்கு, என்ற இடைச் சொற்கள் என்ன பொருளில் வரும்?
8. முன்னிலை யசைச் சொற்கள் யாவை?

III பொது

இடைப் பிறவரல்

வேற்றுமை யுருபுகளும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும், வினைக்கும் இடையே பிற சொற்கள் வருதலுமுண்டு. அவற்றிற்கு இடைப் பிறவரல் என்று பெயர்.

(உ-ம்) அறத்தை (அழகு பெறச்) செய்தான்.
வந்தான் (படித்த) பையன்.
வந்த (பாண்டிய நாட்டு) மன்னன்.
வந்து (பள்ளிக்கூடம்) போனான்.

(சூ-ம்) உருபு முற்றீ ரெச்சம் கோளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமாம் ஏற்பன.

வினாவகை

வினாக்கள் அறிவினா, அறியாமைவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என அறுவகைப்படும்.

(உ-ம்) ஆசிரியர் மாணவனை நோக்கி 'இப்பாடலுக்குப் பொருள் என்ன?' என்பது அறிவினா.
மாணவன் அப்படிக் கேட்பது அறியாவினா.
'குற்றியோ மனிதனோ?' என்பது ஐயவினா.
'வணிகரே பயறு உளதோ?' என்பது கொளல்வினா.
'தம்பிக்குப் புத்தகம் வேண்டுமா?' என்பது கொடைவினா.
'தம்பி! கடைக்குப் போனாயா?' என்பது ஏவல்வினா.

(சூ-ம்) அறிவறி யாமை ஐயுறல் கோளல் கோடை
ஏவல் தரும்வினா வாறு மிழுக்கார்.

விடை வகை

விடைகள் சுட்டு, எதிர்மறை, நேர், ஏவல், வினாதல், உற்ற துரைத்தல், உறுவது கூறல், இனமொழி என எட்டு வகைப் படும்.

(உ-ம்) 'தில்லைக்கு வழியாது' எனின் 'இது' என்பது சுட்டு விடை.
'நீ இது செய்வாயோ' என்றபோது 'செய்யேன்' என்பது எதிர்மறை விடை
அவ்வாறு கேட்பதற்குச் 'செய்வேன்' என்பது நேர்விடை
அவ்வாறு கேட்பதற்கு 'நீ செய்' என்பது ஏவல்விடை.
அவ்வாறு கேட்பதற்கு 'செய்வேனோ' என்பது வினாவிடை.
அவ்வாறு கேட்பதற்கு 'உடம்பு நொந்தது' என்பது உற்றதுரைத்தல் விடை.
அவ்வாறு கேட்பதற்கு 'உடம்பு நோம்' என்பது உறுவது கூறல் விடை.
அவ்வாறு கேட்பதற்கு 'மற்றையது செய்வேன்' என்பது இனமொழி விடை.

(சூ-ம்) சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமேண் ணிறையு ளிறுதி
நிலவிய ஐந்துமப் பொருண்மையி னேர்ப:

அடைமொழி

அடைமொழிகள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களாகவும் வரும். அவை இன முள்ளவைகளாகவும் இனமில்லாதவைகளாகவும் வழங்கும்.

	இனமுள்ளன	இனமில்லன	
(உ-ம்)	நெய்க் குடம்	உப்பளம்	— பொருள்
	குள நெல்	ஊர் மன்று	— இடம்
	கார்த்திகை விளக்கு	நாள் அரும்பு	— காலம்
	பூ மரம்	இலை மரம்	— சினை
	செந்தாமரை	செஞ்ஞாயிறு	— குணம்
	ஆடுபாம்பு	தோய்தயிர்	— தொழில்

உப்பில்லா அளமும், ஊரில்லா மன்றும், நாளில்லா அரும்பும், இலையில்லா மரமும், செம்மையில்லா ஞாயிறும், தோய்தலில்லாத் தயிரும் இல்லையாதலால் இனமில்லா அடைகளாயின.

(சூ-ம்) பொருள் முதலாறும் அடைசேர் மொழியினம்
உள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும்.

ஓரடையும், ஒருசினையும், ஒருமுதலும் ஒன்றையொன்று விசேடித்து வருதலும், ஈரடை முதலோடு சேர்ந்து வருதலும் வழக்கு நடையாகும். இரண்டடை சினையை விசேடித்து வருத லும், வரம்பு கடந்து வருதலும் செய்யுள் நடையாம்.

வழக்கு

(உ-ம்)

வேற்கை முருகன், செங்கால் நாரை — அடைசினை முதல்.
பனைச்சிறு கிணறு, சிறுகருங் காக்கை — ஈரடை முதல்.

செய்யுள்

சிறுபைந்தூவி, கருநெடுங்கண் — ஈரடைசினையை விசேடித்தது.
பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை — வரம்பு கடந்தது.

பொருள் கோள்

செய்யுளில் பொருள் கொள்ளும் முறை பொருள்கோள் எனப்படும். அது யாற்று நீர், மொழிமாற்று, நிரனிறை, விற் பூட்டு, தாப்பிசை, அளை மறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறி மாற்று என எட்டு வகைப்படும்.

யாற்று நீர்ப் பொருள் கோள்

நதியின் நீரொழுக்குப்போல அடிதோறும் சிறந்த பொருள் படிப்படியாக ஒழுங்காக வருவது **யாற்று நீர்ப் பொருள் கோள்.**

(உ-ம்) சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

இதில் 'சொல்' என்னும் எழுவாய் முறையே இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் எச்சங்களைக் கொண்டு 'காய்த்த' என்னும் பயனிலை கொண்டு முடிந்துள்ளது.

மொழிமாற்றுப் பொருள் கோள்

எழுவாய்களுக்குப் பொருந்தும் பயனிலைகளைப் பொருந்தா ததுபோல் மாற்றியமைப்பது **மொழிமாற்றுப் பொருள் கோளாம்.**

(உ-ம்) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

சுரை மிதப்ப, அம்மி ஆழ,
யானைக்கு நிலை, முயற்கு நீத்து என்று கூட்டிப்
பொருளுரைத்துக் கொள்ள வேண்டும்.

நிரனிறைப் பொருள் கோள்

பெயரும் வினையுமாகிய சொற்களையும் வேறு வேறு வரிசை யாக நிறுத்தி முறையாகவோ, எதிராகவோ சேர்த்துப் பொருள் காண்பது **நிரனிறைப் பொருள் கோளாம்.**

(உ-ம்) காதுசேர் தாழ்குழைபாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய — நீதியால்
மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றுரை ஏற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்.

கா - து - சேர் - தாழ் - குழை - ஆய் என்பவற்றுடன் மண் - அமிர்தம் - மங்கையர்தோள் - மாற்றுரை - ஏற்றார்க்கு - நுண்ணிய வாய பொருள் என்பன சேர்தலால் முறை நிரனிறையாயிற்று.

களிறுங் கந்தும் போல நளிகடல்
கூம்பும் கலனும் தோன்றும்—இது எதிர் நிரனிறை.

பூட்டுவிற் பொருள் கோள்

செய்யுள் முதலிலும் இறுதியிலும் நிற்கும் மொழிகள் பொருள் நோக்கால் ஒன்றுபடுவது **பூட்டுவிற் பொருள் கோளாம்.**

(உ-ம்) திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

'கதவு திறந்திடுமின்' எனச் சேர்வது காண்க.

தாப்பிசைப் பொருள் கோள்

நடுவில் நிற்கும் சொல் முதலிலும் இறுதியிலும் சென்று சேர்வது **தாப்பிசைப் பொருள் கோளாம்.** (தாம்பு = ஊசல்) ஊசல் போல் முன்னும் பின்னும் செல்வது.

(உ-ம்) உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

'ஊன், என்பது முன்னுள்ள 'உண்ணாமை' என்பதனோடும் பின்னுள்ள 'உண்ண' என்பதனோடும் சென்று சேர்கின்றது.

அளைமறிபாப்புப் பொருள் கோள்

இறுதியில் நின்ற சொல் இடையிலும் முதலிலும் சென்று சேர்வது **அளைமறிபாப்புப் பொருள்கோளாம்.** புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்பு போல்வதால் அளைமறிபாப்பு எனப்பட்டது. (அளை = புற்று, மறிதல் = மடங்குதல்)

(உம்) தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித்
தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்
சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே
முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி
முயலா தாரே.

இதனுள், வானெய்து நெறி முன்னி முபலாதார், மூழ்ந்த பிணி நலிய முன் செய்த வினையென்றே முனிவார், சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார். தாழ்ந்தவுணர்வினராய்த் தளர்வார் எனத் தலைகீழாய் இடையிலும் முதலிலும் சென்று கூடுதல் காண்க.

கொண்டுகூட்டுப் பொருள் கோள்

செய்யுளடிகள் பலவற்றிலும் நோக்கப்படுதலையுடைய சொற்களை ஏற்ற இடத்துக்குக் கொண்டு சேர்ப்பது **கொண்டு கூட்டுப் பொருள் கோளாம்.**

(உ-ம்) தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.

இதனுள், 'வங்கத்துச் சென்றார்வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடையாளது மாமேனிமேல் தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட கோழி வெண்முட்டை யுடைத்தன்ன பசலை தணிவாம்' எனக் கூட்டுக.

அடிமறிமாற்றுப் பொருள் கோள்

பொருளுக்கு ஏற்குமிடத்து எடுத்துக் கூட்டுவதும், எந்த அடியையும் முதல், நடு, இறுதி என்ற எவ்விடத்துக் கூட்டினாலும் பொருள் மாறாத இயல்புடையதும் **அடிமறிமாற்றுப் பொருள் கோளாம்.**

(உ-ம்) அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்
விலைப் பாலிற் கொண்டூன் மிசைதலும் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலும் குற்றம்
கொலைப்பாலும் குற்றமே யாம்,

இதனுள் ஈற்றடியொழித்து ஏனை மூன்றடியில் எதனையும் எங்குச் சேர்த்தாலும் பொருள் மாறாமை காண்க.

(சூ-ம்) யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே

பயிற்சி வினாக்கள்

1. இடைப் பிறவரல் உதாரணம் தருக.
2. வினாக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. விடைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. அடைமொழிகள் எவ்வாறு வரும்? அவற்றின் வகை யாவை?
5. பொருள்கோள் என்றால் என்ன?
6. நிரனிறை, கொண்டுகூட்டு, அடிமறிமாற்று—இவற்றை உதாரணம் கூறி விளக்குக.

IV புணர்ச்சி

(1) மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி

லகர ளகர வீற்றுத் தொழிற் பெயர்கள் வருமொழி முதலில் வல்லினம் வரின் அல்வழியில் இயல்பாதலும் உண்டு.

(உ-ம்) நடத்தல் + கடிது = நடத்தல் கடிது.
கற்றல் + பெரிது = கற்றல் பெரிது.

யகர ரகர ழகர வீற்றுச் சொற்கள் வல்லினம் வரின் அல்வழியில் இயல்பாகவும் வரும்.

(உ-ம்) வேய் + குறிது = வேய்குறிது.
வேர் + குறிது = வேர்குறிது.
யாழ் + பெரிது = யாழ்பெரிது.
பேய் + பூதம் = பேய்பூதம்.
நீர் + கனல் = நீர்கனல்.
இகழ் + புகழ் = இகழ்புகழ்.

மரம் என்ற பொருளில் வராத 'எகின்' என்னும் சொல் வேற்றுமையில் வல்லினம் வர இயல்பாம்.

(உ-ம்) எகின் + கால் = எகின்கால்.
எகின் + புறம் = எகின்புறம்.

'குயின்' 'ஊன்' என்னும் சொற்கள் வேற்றுமையில் வல்லினம் வரின் இயல்பாம்.

(உ-ம்) குயின் + கடுமை = குயின் கடுமை.
ஊன் + சிறுமை = ஊன்சிறுமை

ணகர னகர வீற்றுச் சொற்கள் வருமொழியோடு புணரும் பொழுது அல்வழியில் இயல்பாம்.

(உ-ம்) மண் + கடிது = மண் கடிது.
பொன் + கடிது = பொன் கடிது.
மண் + மாண்டது = மண் மாண்டது.
பொன் + மாண்டது = பொன் மாண்டது.
மண் + வலிது = மண் வலிது.
பொன் + வலிது = பொன் வலிது.

இருதிணைப் பொதுப் பெயர்களுக்கும், உயர்திணைப் பெயர்களுக்கும் இறுதியிலுள்ள மெய்யெழுத்துக்கள் வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் இயல்பாகும்.

(உ-ம்) ஆண் + சிறந்தவன் = ஆண் சிறந்தவன்.
பெண் + பெருமை = பெண் பெருமை.
தாய் + கை = தாய் கை.
வேலன் + பெரியன் = வேலன் பெரியன்.
முருகன் + கோவில் = முருகன் கோவில்.

யகர ரகர வீற்று உயர்திணைப் பெயர்ச் சொற்களின் முன் வருமொழி முதலில் வரும் வல்லினம் அல்வழியிலும் வேற்றுமையிலும் இயல்பாகவும் புணரும்.

(உ-ம்) சேய் + பெரியன் = சேய் பெரியன்.
அவர் + பெரியார் = அவர் பெரியார்.

யகர, ரகர வீற்று முன்னிலை வினைகளின் முன்னும் யகர, ரகர, ழகர வீற்று ஏவல் வினைகளின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்)

உண்டாய் + கொற்றா = உண்டாய் கொற்றா } முன்னிலை
உண்டீர் + கொற்றா = உண்டீர் கொற்றா } வினை.

ஆய் + கொற்றா = ஆய்கொற்றா }
சேர் + சாத்தா = சேர் சாத்தா } ஏவல் வினை.
வாழ் + கொற்றா = வாழ் கொற்றா }

(2) வினா, சுட்டுக்களின் புணர்ச்சி

எகர வினா முன்னும் அ, இ, உ என்ற மூன்று சுட்டின் முன்னும் உயிரும் யகரமும் வரின் இடையில் வகரம் தோன்றும். பிற மெய்கள் வரின் வந்த மெய்கள் மிகும்.

(உ-ம்) எ + அணி = எவ்வணி.
எ + யானை = எவ்யானை.
அ + அணி = அவ்வணி.
அ + யானை = அவ்யானை.
இ + அணி = இவ்வணி.
இ + யானை = இவ்யானை.
உ + அணி = உவ்வணி.
உ + யானை = உவ்யானை.
எ + திசை = எத்திசை.
எ + மலை = எம்மலை.
எ + வழி = எவ்வழி.
அ + திசை = அத்திசை.
அ + மலை = அம்மலை.
அ + வழி = அவ்வழி.
இ + திசை = இத்திசை.
இ + மலை = இம்மலை.
இ + வழி = இவ்வழி.
உ + பக்கம் = உப்பக்கம்.
உ + மலை = உம்மலை.
உ + வழி = உவ்வழி.

ஆ, ஏ, ஓ, யா என்ற வினாவெழுத்துக்களின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

(உ-ம்) நம்பியா + கொண்டான் = நம்பியா கொண்டான் ?
அவனே + கொண்டான் = அவனே கொண்டான் ?
அவனோ + சென்றான் = அவனோ சென்றான் ?
யா + பெரியன = யாபெரியன?

அவ், இவ், உவ் என்னும் அஃறிணைச் சுட்டுப் பெயர்களீற்று வகரமெய் வருமொழி முதலில் மூவினமும்வர வல்லினத்தின் முன் ஆய்தமாகவும், மெல்லினத்தின் முன் மெல்லினமாகவும், இடையினத்தின் முன் இயல்பாகவும் வரும்.

அவ் + கடிய = அஃகடிய.
இவ் + கடிய = இஃகடிய.
உவ் + கடிய = உஃகடிய.
அவ் + ஞானம் = அஞ்ஞானம்.
இவ் + ஞானம் = இஞ்ஞானம்.
உவ் + ஞானம் = உஞ்ஞானம்.
அவ் + யாவை = அவ்யாவை?
இவ் + யாவை = இவ்யாவை?
உவ் + யாவை = உவ்யாவை?

(சூ-ம்) சுட்டு வகரம்மூ வினமுற முறையே
ஆய்தமும் மென்மையும் இயல்பு மாகும்.

(3) செய்யுளுக் கேற்ற சிறப்பு விதிகள் சில

சுட்டெழுத்துக்கள் செய்யுளில் நீண்டு வருமாயின் வருமொழி முதலில் உயிர் வரும்பொழுது இடையில் யகரம் தோன்றும்.

அ + இடை = ஆயிடை.

குற்றெழுத்தை யடுத்துவரும் ஆகாரம் அகரமாதலும், அதனோடு உகரச் சாரியை ஏற்றலும், இயல்பாதலும் உண்டு.

(உ-ம்) நிலா = நிலவிரி கானல்.
மருவின்என் செய்யுமோ நிலவு.
நிலாவணங்கு வெண்மணல் மேல்நின்று.

(சூ-ம்) குறியதன் கிழாக் குறுகலு மதனோடு
உகர மேற்றலும் இயல்புமாம் தூக்கின்.

'அன்றி' 'இன்றி' என்ற வினையெச்சங்களின் இகரம் செய்யுளில் உகரமாய் வரினும் வல்லினத்தோடு புணரின் இயல்பாம்.

(உ-ம்) வாளன்று பிடியா வன்கணுடைவர்.
விண்ணின்று பொய்ப்பின்.

(சூ-ம்) அன்றி யின்றியென் வினையெஞ் சிகரம்
தொடர்பினுள் உகர மாய்வரின் இயல்பே.

'அது' என்னும் சொல்லின் முன்வரும் 'அன்று' என்னும் சொல் செய்யுளில் 'ஆன்று' எனவரும்.

அது + அன்று = அதான்று.

(சூ-ம்) அதுமுன் வருமன்(று) ஆன்றும் தூக்கின்.

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி

இரண்டாம் வேற்றுமைச் சொற்கள், வருமொழியோடு புணரும் போது, பொதுவிதிக்கு மாறுபட்டிருப்பதும் உண்டு.

இயல்பாயிருக்க வேண்டிய இடத்தில் விகாரப்பட்டும், விகாரப் பட வேண்டிய இடத்தில் இயல்பாகவும் நிற்பதுண்டு.

(உ-ம்) நின் + காணும் உள்ளத்தன், — நிற்காணும் உள்ளத்தன்.

'நின்னீறியல்பாம்' — என்ற விதிக்கு மாருக விகாரப்பட்டது.

மண் + சுமந்த படலம் — மண்சுமந்த படலம். ('ண, ன வல்லினம் வரட்டறவும்' என்ற விதிக்கு மாருக இயல்பாயிற்று.

இரண்டாம் வேற்றுமை உயர்திணைப் பெயர்ச் சொல், வருமொழியோடு புணரும் போது, சில விடங்களில் ஐ உருபு வெளிப் படையாகவும், சில விடங்களில் மறைந்தும் நிற்பதுண்டு.

(உ-ம்) அரசனை வணங்கினான் } ஐ யுருபு விரிந்தது.
தம்பியை அழைத்தான் }

நான்முகற் றொழுது } ,, மறைந்தது.
மகற் பெற்றான் }

இரண்டாம் வேற்றுமைப் பொதுப் பெயர், வருமொழியோடு புணரும்போது, சில விடங்களில் விரிந்தும், சில விடங்களில் மறைந் தும் நிற்பதுண்டு.

(உ-ம்) கொற்றனைக் கொணர்ந்தான் — ஐயுருபு விரிந்தது.
ஆண்சு பெற்றாள் — ,, மறைந்தது.

இனி, வேறு சில மாறுபாடுகளும் நிகழ்வதுண்டு.

(உ-ம்) மாடு கொண்டான் } விதிப்படி ட, ற ஒற்று இரட்டா
பயறு தின்றான் } மல் இயல்பாயின.

வருமொழி வினைச்சொல்லாக விருந்தால் பெரும்பாலும், விகாரத்தில் விகாரமாகியே வரும்.

(உ-ம்) பூத்தொடுத்தான், கோக்கறந்தான், வடுப்பெற்றான்.

(சூ-ம்) இயல்பின் விகாரமும், விகாரத் தியல்பும்,
உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்,
விரவுப் பெயரின் விரிந்தும் நின்றும்,
அல்லன பிறவும் ஆகும்ஐ யுருபே,

பயிற்சி வினாக்கள்

1. இயல்பாகப் புணரும் மெய்யீறுகள் யாவை ?
2. எகரவினா முன்னும் மூன்று சுட்டின்முன் உயிரும் யகரமும் எவ்வாறு புணரும் ?
3. எ, ஏ, ஆ, யா இவ்வினாவெழுத்துக்களின் முன் வல்லினம் எவ்வாறு புணரும் ?
4. அ + உலகு, எ + யாடு, இ + நாடு, அ + புறம்
   எ + பக்கம், எ + நாள், இ + உயிர், எ + உயிர்
   இவற்றைச் சேர்த்தெழுதுக.
5. செய்யுளில் சுட்டெழுத்து எவ்வாறு ஆகும் ?
6. நிலா, இரா, கனா இச் சொற்கள் செய்யுளில் எவ்வாறு வரும் ?
7. அன்றி, இன்றி என்ற வினையெச்சங்கள் செய்யுளில் எவ்வாறாகும் ?
8. அது + அன்று — எவ்வாறு புணரும் ?
9. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியிலுள்ள வேறுபாடுகள் யாவை ?

V யாப்பு

(1) நேரொன்றாசிரியத்தளை

ஈரசைச் சீர்களில் மாச்சீருக்குப் பின்னால் நேரசை வருவது நேரொன்றாசிரியத்தளை எனப்படும்.

(உ-ம்) "நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!"

1. நாராய்! + நாராய்!
   நேர் நேர் + நேர் நேர்! } தேமாவிற்குப் பின் நேரசை.
   தே மா + நேர்

2. செங் கால் + நா ராய்
   நேர் நேர் + நேர் நேர் } ,,
   தே மா + நேர்

3. பவ ளக் + கூர் வாய்
   நிரை நேர் + நேர் நேர் } புளி மாவிற்குப் பின் நேரசை.
   புளி மா + நேர்.

2. நிரையொன் றாசிரியத்தளை

ஈரசைச் சீர்களில் விளச் சீருக்குப் பின்னால் நிரையசை வருவது **நிரையொன் றாசிரியத்தளை** எனப்படும்.

(உ-ம்)

1.	பழம் படு	+ பனை யின்	கருவிளத்திற்குப்பின் நிரையசை.
	நிரை நிரை	+ நிரை நேர்	
	கரு விளம்	+ நிரை	
2.	நீ யுநின்	+ மனை வியும்	கூவிளத்திற்குப்பின் நிரை யசை
	நேர் நிரை	+ நிரை நிரை	
	கூ விளம்	+ நிரை	

(3) இயற்சீர் வெண்டளை

ஈரசைச் சீர்களில் மாச்சீருக்குப் பின் நிரை யசையும், விளச் சீருக்குப் பின் நேரசையும் இயற்சீர் வெண்டளை எனப்படும்.

(மாமுன் நிரை, விளமுன் நேர்.)

(உ-ம்)

ஆ தி	+ பக வன்	தேமாவிற்குப் பின் நிரையசை (மாமுன் நிரை.)
நேர் நேர்	+ நிரை நேர்	
தே மா	+ நிரை	
நன் றி	+ மறப் பது	,,
நேர் நேர்	+ நிரை நிரை	
தே மா	+ நிரை	
அக ர	+ முத ல	புளிமாவிற்குப் பின் நிரையசை (மாமுன் நிரை)
நிரை நேர்	+ நிரை நேர்	
புளி மா	+ நிரை	
மறப் பது	+ நன் றன் று	கருவிளத்திற்குப் பின் நேரசை (விளமுன் நேர்)
நிரை நிரை	+ நேர் நேர் நேர்	
கருவிளம்	+ நேர்	
பொரு வரோ	+ தக் கோர்	,,
நிரை நிரை	+ நேர் நேர்	
கருவிளம்	+ நேர்	
தங் குறை	+ தீர் வுள் ளார்	கூவிளத்திற்குப் பின் நேர் (விளமுன் நேர்)
நேர் நிரை	+ நேர் நேர் நேர்	
கூ விளம்	+ நேர்	

(4) வெண்சீர்வெண்டளை

காய்ச்சீருக்குப் பின் நேரசை வருவது **வெண்சீர் வெண்டளை** எனப்படும்.

(காய் முன் நேர்)

(உ-ம்) வெஞ்சிலையே கோடுவன.

(1)	வெஞ் சிலை யே	+	கோ டுவ ன	காய்க்குப் பின் நேர் காய் முன் நேர்
	நேர் நிரை நேர்	+	நேர் நிரை நேர்	
	கூ விளங் காய்	+	நேர்	

(2) 'துப்பார்க்குத் துப்பாய'

துப் பார்க் குத்	+	துப் பா ய	"
நேர் நேர் நேர்	+	நேர் நேர் நேர்	
தே மாங் காய்	+	நேர்	

(3) 'திருமலை நா டன்வரையில்'

திரு மலை நா	+	டன் வரை யில்	"
நிரை நிரை நேர்	+	நேர் நிரை நேர்	
கரு விளங் காய்	+	நேர்	

(5) கலித்தளை

காய்ச்சீருக்குப் பின், நிரையசை வருவது கலித்தளையாகும்.

(6) ஒன்றிய வஞ்சித்தளை

கனிச்சீருக்குப் பின், நிரையசை வருவது ஒன்றிய வஞ்சித்தளையாகும்.

(7) ஒன்றா வஞ்சித்தளை

கனிச் சீருக்குப் பின், நேரசை வருவது ஒன்றா வஞ்சித்தளையாகும்.

(8) வெண்பாத்தளை

வெண்சீர் வெண்டளையும் (காய் முன் நேர்), இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்பாவிற்கு உரிய தளைகளாம்.

i. இயற்சீர் வெண்டளை

(உ-ம்) " அருவினை யென்ப உளவோ கருவியால்
காலமறிந்து செயின்"

அரு—வினை + யென்—ப + உள —வோ + கரு —வியால்
நிரை—நிரை + நேர் — நேர் + நிரை—நேர் + நிரை—நிரை
கரு—விளம் + தே — மா + புளி — மா + கரு —விளம்.

கா — ல + மறிந் — து + செயின்
நேர் — நேர் + நிரை — நேர் + நிரை.
தே — மா + புளி — மா + மலர்.

(இதில் மாமுன் நிரை, விளமுன் நேர் என்ற இயற்சீர் வெண்டளை மட்டும் வந்துள்ளது.)

ii. வெண்சீர் வெண்டளை

(உ-ம்) "வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன."
வெஞ்-சிலை-யே + கோ-டுவ-ன + மென்-குழ-லே + சோ-ருவ-ன.
நேர் நிரை நேர் + நேர் நிரை நேர் + நேர் நிரை நேர் + நேர் நிரை நேர்.
கூ விளங் காய் + கூ விளங் காய் + கூ விளங் காய் + கூவிளங்காய்.

(இதில், காய் முன் நேர் என்ற வெண்சீர் வெண்டளை மட்டும் வந்துள்ளது.)

வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் கலந்து வருதலும் உண்டு,

(உ-ம்) "கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

1. கண் — ணுடை — யர் + என் — பவர்
நேர் — நிரை — நேர் + நேர் — நிரை
கூ — விளங் — காய் + நேர்
} காய் முன் நேர். வெண்சீர் வெண்டளை.

2. என் — பவர் + கற் + றோர்
நேர் — நிரை + நேர் + நேர்
கூ விளம் + நேர்
} விளமுன் நேர் இயற்சீர் வெண்டளை.

3. கற் — றோர் + முகத் — திரண் — டு
நேர் — நேர் + நிரை — நிரை — நேர்
தே மா + நிரை
} மாமுன் நிரை இயற் சீர் வெண்டளை

4. முகத் — திரண் — டு + புண் — ணுடை — யர்
நிரை — நிரை + நேர் + நேர் — நிரை — நேர்
கரு விளங் காய் + நேர்
} காய் முன் நேர் வெண்சீர் வெண்டளை

5. புண் — ணுடை — யர் + கல் — லா
நேர் — நிரை — நேர் + நேர் — நேர்
கூ — விளங் காய் + நேர்
} காய்முன் நேர் வெண்சீர் வெண்டளை

6. கல் — லா + தவர் }
நேர் — நேர் + நிரை } மாமுன் நிரை
தே மா + நிரை } இயற்சீர் வெண்டளை
மலர் }

(மலர் என்னும் வாய்பாடு கொண்டு முடிந்தது.)

(2) எதுகை மோனை வகைகள்

i எதுகை

அடிதோறும் முதலெழுத்து அளவால் ஒத்துநிற்க இரண்டாம் எழுத்து முதலிய சில எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுக்கும் எதுகையே யன்றி, அடி எதுகை, வருக்க எதுகை, நெடில் எதுகை, இனவெதுகை முதலிய சில வகைகளும் உண்டு.

அடியெதுகை

ஓரடிக்குள்ளே சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகை.

(உ-ம்) மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல்.

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

வருக்க வெதுகை

ஓரே வருக்கத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் இரண்டாம் எழுத்தாக வரத் தொடுப்பது வருக்க எதுகை.

(உ-ம்) வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று.

நெடிலெதுகை

நெட்டெழுத்தை மட்டும் இரண்டெழுத்தாகக் கொள்வது நெடிலெதுகை.

(உ-ம்) ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூ கூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்.

இனவெதுகை

வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற இனவெழுத்துக்களை இரண்டாமெழுத்தாகக் கொள்வது இனவெதுகை.

(உ-ம்) தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

இது வல்லின வெதுகை.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

இது மெல்லின வெதுகை.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

இது இடையின வெதுகை.

ii மோனை

மோனைத் தொடை: இணைமோனை, பொழிப்புமோனை, ஒரூஉமோனை, கூழைமோனை, மேற்கதுவாய்மோனை, கீழ்க்கது வாய் மோனை, முற்றுமோனை எனப் பல வகைப்படும்.

இணைமோனை

(உ-ம்) நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

பொழிப்பு மோனை

முதற்சீரும், மூன்றாம்சீரும் முதலெழுத் தொன்றிவரத் தொடுப்பது பொழிப்பு மோனை.

(உ-ம்) கோளப்பட் டேமென்றெண்ணிக் கோள்ளாத செய்
துளக்கற்ற காட்சி யவர். [யார்

ஒரூஉ மோனை

நடுவிரு சீர்க்கண்ணும் இன்றி முதல் சீர்க்கண்ணும், இறுதிச் சீர்க்கண்ணும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ மோனை.

(உ-ம்) கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது.

மேற்கதுவாய்மோனை

இரண்டாம் சீர்க்கண் இன்றி ஏனைய மூன்று சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனை.

(உ-ம்) உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

கீழ்க்கதுவாய் மோனை

மூன்றும் சீர்க்கண் இன்றி ஏனைய மூன்று சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனை.

(உ-ம்) கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

கூழைமோனை

இறுதிச் சீர்க்கண் இன்றி ஏனைய மூன்று சீர்களிலும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழைமோனை.

(உ-ம்) காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள.

முற்றுமோனை

எல்லாச் சீர்க்கண்ணும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது முற்றுமோனை.

(உ-ம்) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மேற்கூறிய வகைகளேயன்றி அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுக்கும் அடிமோனை எனப்படுவதும் உண்டு.

(உ-ம்) அணிமல ரசோகின் தளிர்நலம் கவற்றி
அரிக்குரற் கிண்கிணி யரற்றும் சீறடி.

3 கட்டளைக் கலித்துறை தாழிசைகளின் இலக்கணம்

கட்டளைக் கலித்துறை

இது நான்கு நெடிலடிகளைப் பெற்று வரும். ஒவ்வொரு அடியின் முதற்சீர்கள் நான்கும், வெண்பாவைப்போல் வெண்டளை

பிழையாமல் நிற்கும். கடைசிச் சீர்கள் மட்டும் தளைபிறழும். ஒவ்வொரு அடியின் கடைசிச் சீரும் விளங்காய்ச் சீராகவிருக்கும். நேரசையில் தொடங்கினால் அடியொன்றிற்கு மெய்யெழுத்தை நீக்கிப் பதினாறு எழுத்துக்களும், நிரையசையில் தொடங்கினால் பதினேழு எழுத்துக்களும் இருக்கும். இவ்வாறு அமைந்திருப்பது **கட்டளைக்கலித்துறை** எனப்படும்.

(உ-ம்)

ஆனிட பக்கொடிச் சோறு சலனென்றும் அன்பர்மலர்
தானிட முத்தி தரும்பெரு மானென்றும் சம்புவென்றும்
கானிட வேடன்முன் ஊனிட உண்டது கண்டுமொரு
மானிட மானவ னைத்தேவர் செய்வதென் வந்தனையே.

திருமிகுந் தோரைச் செயலிழந் தோரையும் சேரவினைத்
திருவிலங் காத்திறை செய்யுமெங் கோமான் எழில்பரவும்
திருமுக வாபுரி வாழ்நாக நாதன் சிலம்படையீர்
திருமுடிக் காரிகை மானளிக் காவிடிற் சீரலவே.

தாழிசைகளின் இலக்கணம்

தாழிசை என்பது பாவினங்களில் ஒன்று. அது வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்ற நால்வகைப்பாவிலும் வரும். ஆகவே வெண்டாழிசை, ஆசிரியத்தாழிசை, கலித்தாழிசை, வஞ்சித்தாழிசை என நால்வகைப்படும்.

வெண்டாழிசை

மூன்றடியாய் ஈற்றடி வெண்பாவேபோல் முச்சீரடியாய் முடிவதும், சிந்தியல் வெண்பா ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவதும் வெண்டாழிசைகளாம்.

(உ-ம்) நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்

இது மூன்றடி ஆசிரியத் தளையான் வந்த வெண்டாழிசை.

அன்னாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுரம் போல நலம் கவர்ந்து
துன்னான் துறந்து விடல்.

ஏடி அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுரம் போல நலம் கவர்ந்து
நீடார் துறந்து விடல்.

பாவாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுரம் போல நலம் கவர்ந்து
காவான் துறந்து விடல்.

இவை சிந்தியல் வெண்பா. ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த வெண்டாழிசை.

ஆசிரியத்தாழிசை

மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவது ஆசிரியத் தாழிசை. இது தனித்தும், ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியும் வரும்.

(உ-ம்) வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் நிரைகழல் தொழுதனம்.

இது தனியே வந்த ஆசிரியத்தாழிசை.

கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.

கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

இவை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

கலித்தாழிசை

இரண்டடியும், பலவடியும் வந்து, ஈற்றடி மிக்கு அல்லாத அடி தம்முள் ஒத்தும், ஒவ்வாதும் வருவது கலித்தாழிசை. இதுவும் தனித்தும், ஒரு பொருள் மேல் பல அடுக்கியும் வரும்.

(உ-ம்) வாள்வரி வேங்கை வழங்கும் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி லெழால்வாழி வெண்டிங்காள்!
கேள்வரும் போழ்தி லெழாய்க் குறுகியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்!

இஃது ஈற்றடி மிக்கு ஏனையடிகள் மூன்றும் ஒத்துத் தனித்து வந்த கலித்தாழிசை.

கொய்தினை காத்தும் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்
ஆய்தினை காத்தும் அருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்
மென்தினை காத்தும் மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடி வாரனீ ஐய நலம்வேண்டின்

இவ்வ இரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த கலித்தாழிசை.

வஞ்சித் தாழிசை

இரு சீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருள்மேல் அடுக்கி வருவன வஞ்சித் தாழிசையாம்.

(உ-ம்) மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின் மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனே காண்.
பேடையை யிரும்போத்துத்
தோகையான் வெயின் மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
யோடுமென் மனனே காண்.
இரும்பிடியை இகல் வேழம்
பெருங்கையான் வெயின் மறைக்கும்
அருஞ்சுர மறந்தார்க்கே
விரும்புமென் மனனே காண்.

பாவினங்களின் பொது இலக்கணம்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நால் வகைப் பாக்களுக்கும் துறை, தாழிசை, விருத்தம் என்ற மூவினம் உண்டு. எனவே வெண்டுறை, வெண்டாழிசை, வெளிவிருத்தம், ஆசிரியத்துறை, ஆசிரியத்தாழிசை, ஆசிரிய விருத்தம், கலித் துறை, கலித்தாழிசை, கலி விருத்தம், வஞ்சித்துறை, வஞ்சித் தாழிசை, வஞ்சி விருத்தம் எனப் பாவினம் பன்னிரண்டாகும்.

பயிற்சி வினாக்கள்

1. காமர் கயல்புரளக்காவிமுகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம்போலும் தகைமைத்தேசாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு.

எல்லார்க்கும் நன்றாம் பணிதலவருள்ளும்
செல்வர்க்கேசெல்வந்தகைத்து.

இவற்றைச் சீர்பிரித்துத் தளை கூறுக.

2. எதுகையின் வகைகள் யாவை?
3. அடியெதுகைக்கு உதாரணம் தருக.
4. மோனையின் வகைகள் யாவை?
5. பின்வரும் மோனைவகைகளைக் கூறுக.
'தீயவை தீய பயத்தலால் தீயவை'
'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு'
'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்'
'வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய'
'எப்பொழுதும் எங்கும் எவர்க்குமே எவ்விதத்தும்'
6. கட்டளைக் கலித்துறையின் இலக்கணமென்ன?
7. வெண்டாழிசை, ஆசிரியத்தாழிசை இவை எவ்வாறு வரும்.
8. பாவினங்களாவன யாவை?

VI அணி

பிறிதுமொழிதல்

உபமேயத்தைக் கூறுமல் உபமானத்தை மாத்திரம் கூறி, அதனுல் உபமேயத்தைப் பெறவைத்தல் பிறிது மொழிதல் என்னும் அணியாம். இதனை ஒட்டணி என்றும், உள்ளுறையுவமம் என்றும் கூறுவர்.

(உ-ம்) நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறந் தூக்கின்.
உயிர்க்கிறுதி யாகி விடும்.

பகைமேற் செல்லும் அரசன் தன்னுல் செல்லலாம் அளவும் சென்று நில்லாது மனவெழுச்சியால் மேலும் செல்லுமாயின் அவ்வெழுச்சி வினை முடிதற்குக் காரணமாகாது, அவனு யிரையே முடித்தற்குக் காரணமாகும்; என்னும் பொருள் தோன்ற நின்றது.

கருத்துடையடைமொழியணி

கருத்தை விளக்கும் அடைமொழிகளைக் கொண்டுவருவது **கருத்துடையடைமொழியணி**யாகும்.

(உ-ம்) என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவாய் என்றான் தோடையில்தேன் தும்பிக்கே
ஊட்டுவான் எல்லாம் உரைத்து.

"தொடையில் தேன்தும்பிக்கே ஊட்டுவான்" என்று நளனை விசேடித்துக் கூறியது, அவன் தான்விரும்பிச் சென்ற தமயந்தியிடம் தன்னலம் மறந்தவனுய் இந்திரன் வேண்டுகோட்படிப் 'பொன்னுலகம் காக்கும் புரவலனை மென்மாலை சூட்டுவாய்' என்று கூறிய அவன் குணச் சிறப்பை விளக்குவதாயுள்ளது.

பயிற்சி வினாக்கள்

1. பிறிது மொழிதல் அணி என்றால் என்ன ?
2. பிறிது மொழிதலுக்குரிய பிறபெயர்கள் யாவை ?
3. பிறிது மொழிதல் அணியை ஒரு உதாரணம் காட்டி விளக்குக.
4. கருத்துடையடைமொழி என்றால் என்ன ?
5. பின்வரும் செய்யுட்களிலுள்ள அணிகள் யாவை ?

i. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயு மோடா நிலத்து.

ii. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

iii. பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை ஐயுற்று—மந்தி
தெளியா திருக்கும் திருநாடா வுன்னை
ஒளியாது காட்டுன் உரு.

6. உவமை, எடுத்துக் காட்டுவமை இவற்றை விளக்குக.
7. உருவக வணி என்றால் என்ன ?
8. தற்குறிப் பேற்ற அணி என்றால் என்ன ?
9. உயர்வு நவிற்சியணிக்கு உதாரணம் தருக.
10. பின்வருவனவற்றுள் உவமை உருவகம், இவையெனக் கூறுக.

கள்ளரக்கன் மாண்டான் வறுமைப் பேய் தொலைந்தது.
மதி போன்ற முகம் வாடியது. பகை வாரணங்களைவெல்லக்கும்,

சிங்கமாயினன். கார் நிகர் வண்கை.
மயில் போன்ற சாயலாள். தேனின் இனிய சொல்லாள்.
பொறையில் புவி யொப்பான் அருளில் அன்னை போல்வான்.

VII பொருளிலக்கணம்

(1) அகப்பொருள் முதல், கரு, உரிப்பொருள் இவை எனல்

முதற் பொருள்

முதற் பொருள்; நிலமும், பொழுதும் என இருவகைப்படும்.

நிலம்

நிலம்; குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐவகைப்படும்.

மலையும், மலைசார்ந்த இடமும் **குறிஞ்சி.** சுரமும், சுரம்சார்ந்த இடமும் **பாலை.** காடும், காடுசார்ந்த இடமும் **முல்லை.** வயலும், வயல் சார்ந்த இடமும் **மருதம்.** கடலும், கடல் சார்ந்த இடமும் **நெய்தல்.**

பொழுது

பொழுது; பெரும் பொழுது, சிறு பொழுது என இருவகைப் படும்.

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற ஆறும் பெரும் பொழுதுகளாம். ஒரு ஆண்டின் காலப்பிரிவு களாதலின் இவை பெரும் பொழுதாயின. மாலை, யாமம், வைகறை, எற்படுகாலை நண்பகல் எனச் சிறுபொழுது ஐந்து வகைப்படும். இவை ஒரு நாளின் காலப் பிரிவுகளாதலின் சிறு பொழுதுகளாயின. கூதிர் காலமும், முன்பனிக் காலமும், யாமமும் குறிஞ்சிக்குரிய பொழுதுகளாம். வேனிற் காலமும், பின்பனிக்காலமும், நண்பகலும் பாலைக்குரிய பொழுதுகளாம். கார்காலமும், மாலைக்காலமும் முல்லைக் குரியன. வைகறைப் பொழுது மருதத்திற்குரியது. எற்பாடு நெய் தலுக்குரிய காலமாகும். மருதம், நெய்தல் என்ற இரண்டிற்கும் பெரும் பொழுதாறும் உரியன.

கருப்பொருள்

ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந் தோர், பறவை, விலங்கு, ஊர், நீர், மரம், பூ, உணவு, பறை, யாழ், பண், தொழில் என்ற இப்பதினான்கும் கருப்பொருள்களாம்.

கருப் பொருள்கள்

குறிஞ்சி	பாலை	முல்லை	மருதம்	நெய்தல்
முருகன்.	துர்க்கை.	திருமால்.	இந்திரன்.	வருணன்.
வெற்பன், சிலம்பன், கொடிச்சி	விடலை, எயினர், எயிற்றியர்	தோன்றல், மனைவி, கிழத்தி	ஊரன், மகிழ்நன், கிழத்தி	சேர்ப்பன், புலம்பன், பரத்தி
குறவர், குறத்தியர்	மறவர், மறத்தியர்	இடையர் இடைச்சியர்	உழவர், உழத்தியர்	நுளையர், நுளைச்சியர்
கிளி, மயில்	புறா, பருந்து	காட்டுக் கோழி	அன்னம், நாரை	கடற் காக்கை
கரடி, யானை	செந்நாய்	மான், முயல்	எருமை, நீர் நாய்	சுறாமீன்
சிறுகுடி	குறும்பு	பாடி	பேரூர்	பாக்கம், பட்டினம்
அருவி நீர், சுனை நீர்	நீரில்லாக் கிணறு	குறுஞ் சுனைநீர்	ஆறு, கிணறு	உவர்நீர்க் கேணி
குறிஞ்சி, காந்தள்	குரா, மரா	குல்லை, முல்லை	தாமரை, குவளை	நெய்தற்பூ, தாழம்பூ
சந்தனம், தேக்கு	உழிஞை, பாலை	கொன்றை, காயா	காஞ்சி, மருதம்	கண்டல், ஞாழல்
மலைநெல், தினை	பறித்த பொருள்	வரகு, சாமை	செந்நெல் அரிசி	மீன், உப்பு
தொண்டகம்	துடி	ஏறுகோட் பறை	கிணை, மணமுழவு	மீன்கோட் பறை
குறிஞ்சியாழ்	பாலையாழ்	முல்லையாழ்	மருதயாழ்	விளரியாழ்
குறிஞ்சிப் பண்	பஞ்சுரம்	சாதாரி	மருதப்பண்	செவ்வழிப் பண்
வெறியாட்டு, தினைகாத்தல், தேனெடுத்தல்	போர் செய்தல், பகற்சூறை யாடுதல்	சாமை, வரகு விதைத்தல், குழலூதல், ஏறுதழுவல்	விழாச் செய்தல், நெல்லரிதல், புதுநீராடல்	மீன்பிடித்தல் உப்புண்டாக்கல், கடலாடல்

உரிப்பொருள்

சேர்தலும், சேர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்குரிய இயற்கை. பிரிதலும், பிரிதல் நிமித்தமும் பாலைக்கு உரிப்பொருள். இருத்தலும், இருத்தல் நிமித்தமும் முல்லைக்கு உரிப்பொருள். ஊடலும், ஊடல் நிமித்தமும் மருதத்திற்கு உரிப்பொருள். இரங்கலும், இரங்கல் நிமித்தமும் நெய்தலுக்கு உரிப்பொருள்.

(2) புறப்பொருள் திணைகள்

புறப்பொருள்; வெட்சித்திணை, வஞ்சித்திணை, உழிஞைத் திணை, தும்பைத்திணை, வாகைத்திணை, காஞ்சித்திணை, பாடாண் திணை என எழுவகையாகப் பிரிக்கப்படும். இவற்றுடன் கரந்தைத் திணை, நொச்சித்திணை என்ற இரண்டையும் சேர்த்து ஒன்பது வகையாக வுரைப்பதும் உண்டு.

வெட்சி: பகைவருடைய பசுக்களைக் கவர்தலும், பகைவரால் கவரப்பட்ட பசுக்களை மீட்டலுமாம். கவரப்பட்ட பசுக்களை மீட்டல் கரந்தைத்திணை என்று தனித்தும் கூறப்படும்.

வஞ்சி: பகைவர்மேற் படையெடுத்துச் செல்லுதல்.

உழிஞை: பகைவருடைய கோட்டையைச் சூழ்ந்து முற்றுகையிடுதலும், முற்றுகையிடப்பட்ட நகரைக் காத்துக்கொள்ளுதலுமாம். பின்னுள்ளதைத் தனியே நொச்சித்திணை என்றும் கூறுவர்.

தும்பை: பகைவரோடு போர் புரிவது.

வாகை: பகைவரை வெல்லுதல். அவரவர் தத்தம் இயல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது.

காஞ்சி: படையெடுத்து வந்த பகைவரை எதிர்த்துச் சென்று, தன்னைக் காத்து நிற்றல். வீடுபேறு நிமித்தமாகப் பலவகை நிலையாமையைச் சான்றோர் கூறுவது என்றும் கொள்ளுதல்.

பாடாண்: ஒருவனுடைய கீர்த்தி, வலிமை, கொடை முதலியவற்றைப் பற்றிக் கூறுவது.

பயிற்சி வினாக்கள்

1. முதற்பொருளாவன யாவை?
2. ஐவகை நிலங்களுக்கும் உரிய பொழுதுகள் யாவை?
3. ஐவகை நிலத்திற்கும் உரிப்பொருள் யாவை?
4. புறப்பொருள் திணைகள் யாவை?
5. உழிஞை, பாடாண் இத்திணைப் பொருள்களைக் கூறுக.

உரைநடையாக்கம்

மாணவர்களே! கட்டுரையியல் பற்றிப் பல விஷயங்களைச் சென்ற வகுப்புக்களிற் படித்துப் பயிற்சியும் பெற்றிருப்பீர்கள். உரைநடையாக்கத்தில் கட்டுரைகளைப் பல பகுதிகளாகப் பிரித்தல், தொடர்புபட அமைத்தல், குன்றக்கூறல், மிகைபடக்கூறல்; கூறியதுகூறல் முதலிய குற்றங்களின்றி வரைதல், பத்தியமைத்தல், விளக்கமாக எழுதுதல், விஷயப் பொருத்தமும், அளவும் அறிதல், கருத்துக்களின் முக்கியத்திற் கேற்றவாறு இடம் தருதல், தெளிவான எளிய நடையினைக் கையாளுதல், சந்திப்பிழை முதலிய இலக்கண வழுக்களும், எழுத்துப் பிழைகளும், சொற்பிழைகளும் இன்றி எழுதுதல், ர, ற — ல, ள, ழ — ந, ன, ண இவற்றின் பேதமுணர்ந்து எழுதுதல், மொழிப் பயிற்சியில் கூறப்பட்டுள்ளவற்றைக் கருத்துடன் பின்பற்றுதல், நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாக அமைத்தல், பிறமொழிச் சொற்களையும், திரிசொற்களையும் வீணாகப் பயன்படுத்தாது இன்றியமையாத இடங்களில் மட்டும் விரவிவரத் தூய தமிழில் எழுதுதல், மேற்கோள்களையும், பழமொழிகளையும், பொருத்தமாக அமைத்தல், புத்தகங்களையும், பத்திரிகைகளையும் படித்துச் சிந்தனை செய்து எழுதுதல், ஆனால் பேச்சு வழக்கின்படியே எழுதாமல் நல்ல அழகான முறையில் எழுதுதல், நிறுத்தி எழுதுதல், இடம்விட்டு எழுதுதல் முதலியன நீங்கள் முக்கியமாகக் கருத்தில்கொள்ள வேண்டுவனவாகும்.

முற்கூறிய விதிகளைப் பின்பற்றி வருணனை, விளக்கம், சிந்தனை, கதை, வரலாறு, சமூகம், பொருளியல், கல்வியறிவியல், இளைஞர் இயக்கங்களும், ஆக்கவேலைகளும், நூல்களைப் படித்துக் குறிப்புக்களைத் தயாரித்தலும், கட்டுரை வரைதலும், குறிப்பு விளக்கக் கட்டுரை, செய்தி எழுதும் முறை, கடிதங்கள், உரையாடல், மதிப்புரை, இலக்கியப் பாராட்டுரை, தீர்மானங்களைத் தயாரித்தல், வரவேற்புரை, பிரிவுபசாரம், வேண்டுகோள் முதலிய பலவகையான கட்டுரைகளைப் படித்தும், எழுதியும் பயின்றிருப்பீர்கள். இவ்வாண்டும் அப்பலவகைக் கட்டுரைகளிற் பயிற்சி பெறுவதுடன் சில புதிய கட்டுரை வகைகளையும் நீங்கள் எழுதவேண்டும்.

1. ஐந்தாம் பாரம் கட்டுரை வகை

i. உரையாடல்

தேர்வுகள் வேண்டுமா வேண்டாமா?

முத்து:—மணி! இன்று பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அதனால் என் உள்ளம் மிகவும் குழப்பமடைந்திருக் கிறது.

மணி:—நான் இன்னும் பத்திரிகை படிக்கவில்லை. அப்படிப் பட்ட செய்தி என்ன?

முத்து:—சென்ற வருடம் நம்முடன் படித்தானே நீலன்; நினைவிருக்கிறதா?

மணி:—நினைவில்லாமல் என்ன! அவன் இவ்வாண்டு சென்னையி லுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பதாக வருடத் தொடக்கத்தில் ஒரு கடிதம் எழுதியிருந்தான். நானும் அவனுக்கு விடை எழுதினேன். அதன் பிறகு அவனிடமிருந்து கடிதமே வரவில்லை.

முத்து:—அவன் இவ்வாண்டும் பரீட்சையில் தேர்ச்சி பெறாத தால் கடலில் விழுந்து விட்டானாம்.

மணி:—அடபாவமே! நன்றாகப் படித்துக் கொண்டுதான் இருப்பான். துரதிர்ஷ்டம் பரீட்சையில் தேறவில்லை. அதற்காக இப்படியா செய்யவேண்டும்? பிறகு என்னவாயிற்று?

முத்து:—நல்லவேளை அருகில் இருந்தவர்கள் உதவியால் உயிர் தப்பினான். இதெல்லாம் பரீட்சைக் கொடுமையின் விளைவு.

மணி:—பரீட்சையின் கொடுமையா?

முத்து:—ஆம். இந்தப் பரீட்சை முறை ஒழிந்தால்தான் நல்லது.

மணி:— பரீட்சை முறை ஒழியவேண்டும்? நல்ல யோசனை! பரீட்சை இல்லையானால் தகுதியை எப்படி யறிவது?

முத்து.—தகுதிக்குப் பயிற்சி காரணமே யொழியப் பரீட்சை யாகாது.

மணி:—சொல்வதை எளிதாகச் சொல்லிவிட்டாய். பயிற்சி யின் அளவை எப்படி யறிவது?

முத்து :— பயிற்சியின் அளவை அறிவதற்குப் பயிற்சியே சரியான அளவுகோல் என்று உனக்குத் தோன்றவில்லையா?

மணி :— ஒரு துறையில் ஒருவன் அடைந்துள்ள தேர்ச்சியை மதிப்பிடுவதற்குப் பரீட்சையிலும் சிறந்த முறை வேறு ஏதேனும் உண்டா? அம்முறை இல்லையாயின் தகுதியுடையோரை எப்படியறிவது? ஏதோ ஒன்றிரண்டு குறைகளைக் கண்டு அதை முற்றும் பழிப்பது அறிவுடைமை யாகுமா? பரீட்சை யில்லையானால் பட்டங்களும், பட்டங்கள் இல்லையானால் பதவிகளும் எப்படிக் கொடுப்பது. அவசரத்தாலோ, ஆத்திரத்தாலோ, ஒன்றைக் கொள்ளுவதோ, தள்ளுவதோ கூடாது.

முத்து :— நீ கடைசியில் சொன்னயே அது முற்றும் உண்மை. வருடம் முழுவதும் ஒருவன் நன்ருகப் படிக்கிறன். ஆனல் அவன் பரீட்சையில் தேருது போய் விடுகிறன். அதனல் அவன் வருடம் முழுவதும் படித்த படிப்பெல்லாம் பயனற்றதா?

மணி :— அவன் படித்திருக்கிறன். ஆனல் தகுதிக்கேற்ற பயிற்சி பெறவில்லை என்பதுதான் அதன் முடிவு.

முத்து :— எல்லாப் பரீட்சையிலும் முதல் வகுப்பில் தேறிப் பட்டம் பெற்றவர்கள் யாவரும் வாழ்க்கையில் தகுதியுடன் விளங்குகின்றனர் என்று கூறுகின்ருயா?

மணி :— பட்டம் பெற்றவர்களில் சிலர்— என் பலரும்— வாழ்க்கைத் துறைகளில் போதிய தகுதி பெருமல் இருப்பது உண்மையே. பட்டம் பெருதவர்களிற் பலர் மிகச் சிறந்து விளங்குவதும் கண் கூடாகக் காண்பதே. எனினும் பொது விதியாகக் கொள்வதற்குப் பரீட்சையால் ஏற்படும் தகுதியே பொருத்தமாகும். அது இல்லையாயின் இதை இதனல் இவன் முடிப்பான் என்று ஆராய்வது எப்படி?

முத்து :— ஓராண்டு முழுவதும் ஒருவன் படித்து வருகையில் அப்பொழுது அவன் தகுதியை ஆராய முடியாத ஆசிரியர் பரீட்சையால் மட்டும் முடிவுகட்டுவது பொருந்துமா? மேலும் பரீட்சை முறையில் சில குறைகள் இருப்பனவாக நீயே ஒப்புக் கொள்ளுகின்ருய். நானே அம்முறை முற்றுமே குறைபாடுடையது எனக் கூறுகிறேன். பையன் வகுப்பில் சிறந்து விளங்குவான். பரீட்சை எழுதுகையில் ஏதேனும் காரணத்தால் எழுதத் தவறிவிடுவான். அவன் பரீட்சையால் தகுதியற்றவனுகி விடுவான். இது நியாயமா? மேலும் விடைத்தாள்களைப் பரிசீலிக்கும் ஆசிரியர்கள் ஒரு முகமாக மதிப்பிடுவதில்லை. ஒரு ஆசிரியர் ஒரு விடைத்தாளுக்கு முப்பது

மதிப்பு எண்களும், மற்றொருவர் எண்பது மதிப்பு எண்களும் கொடுப்பதுண்டு. இதிலிருந்து, பரீட்சையால் தகுதியை மதிப்பிடுவது எவ்வளவு கேலிக்கூத்து என்பதை யோசித்துப்பார்.

மணி:—நீ சொல்லும் குறைகள் இருப்பதும் உண்மைதான். ஆனால், குறை கூறிக்கொண்டிருப்பதால் மட்டும் பயன் என்ன? பரீட்சைகளை நீக்கிவிட்டால் தகுதியை நிதானிப்பதற்கு வேறுவழி ஏதாயினும் இருந்தால் சொல்.

முத்து:— எவ்விதமான பயிற்சியிலும் அதனைச் சரிவரக் கண்காணித்து வரவேண்டும். அவ்வப்பொழுது மாணவன் அடைந்துவரும் முன்னேற்றங்களை அட்டவணையிற் குறித்துவர வேண்டும். பயிற்சிகளை ஒரு மாணவன் ஓர் ஆண்டிற்குள் முடிக்கும் ஆற்றலுடையவனாக இருப்பான். அவனை அவ்வாண்டின் முடிவில் மேல் வகுப்பிற்கு அனுப்பிவிடலாம். ஓர் ஆண்டிற்குள் பயிற்சிகளை முடிக்காத மாணவன் அடுத்த ஆண்டில் தொடர்ந்து பயிற்சிகளைச் செய்து முடித்தபின் மேல் வகுப்பிற்கு மாற்றப்படலாம். இம்முறை கையாளப்படுமாயின், இந்த வீணான பரீட்சைகளால் விளையும் தொல்லைகள்நீங்கிவிடும்.

மணி:—நீ சொல்வதும் பொருத்தமாகத்தான் தோன்றுகிறது. இருப்பினும், அறிஞர்கள் முடிவு கட்டவேண்டிய விஷயம் என்றே கருதுகிறேன்.

பயிற்சி

கீழ் வருவனவற்றைப்பற்றிய இருவகைக் கருத்துக்களையும் உரையாடலாக வரைக:

1. குடியாட்சியும், முடியாட்சியும்.
2. படக்காட்சியால் நன்மையா தீமையா?
3. விஞ்ஞான வளர்ச்சி நல்லதா கெட்டதா?
4. இயந்திரப் பெருக்கத்தால் நன்மையா தீமையா?

(ii) ஒரு சொற்பொழிவைப் பற்றிய மதிப்புரை

அண்மையில் அருளாளர் என்ற தமிழ்ப் புலவர் 'திருவள்ளுவரும், திருக்குறளும்' என்பது பற்றிச் செய்த சொற்பொழிவினைக் கேட்டேன். சொற்பொழிவு மிகவும் நன்றாக இருந்தது; அறிவிற்கு விருந்தாயும், உள்ளத்திற்கு உணர்ச்சி யூட்டுவதாயும் அமைந்திருந்தது. சொற்பொழிவாளர் சிறந்த சொல்வன்மை யுடையவர்; தூய தமிழில் எல்லோர்க்கும் விளங்கும்படியான எளிய நடையில் தட்டுத் தடங்கலின்றிப் பேசினார். அவரது தமிழ்ப் பயிற்சியின் 'சிறப்பு' பாராட்டுதற் குரியது.

தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் வரலாற்றைத் தெய்வீக நிகழ்ச்சிகளுடன் எடுத்துக் கூறியது கேட்பவர் வள்ளுவர் மீதும், அவரியற்றிய நூலின் மீதும் நம்பிக்கைகொண்டு போற்றுமாறு செய்யத் தூண்டியது. பின்னர், நூலின் சிறப்புக்கள் பலவற்றையும் விளக்கமாகக் கூறி, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்ற முப்பெரும் பிரிவுகளிலும் உள்ள கருத்துக்களின் தொடர்புகளையும், சிறப்புக்களையும் பல குறட்பாக்களைக் கொண்டு விளக்கிப் பேசியது மிகவும் அருமையாயிருந்தது. உலகப் பொது நூலாகவும், ஒழுக்க நூலாகவும் விளங்கும் அதன் தனிப்பெருஞ் சிறப்புக் கேட்போர் உள்ளத்தில் நன்கு பதிந்தது. இவ்விடத்தில் பொதுமக்கள் நன்கு உணர்ந்து மகிழும்படியாகச் சில உதாரணக் கதைகளைச் சொற்பொழிவாளர் கூறியிருந்தால் மிகவும் நன்றாயிருந்திருக்கும். ஆனால் குறித்த நேரத்திற்குள் சொற்பொழிவை முடிப்பதற்காக அதனை விட்டுவிட்டார் என்றே கருதுகின்றேன்.

அதன்மேல் குறட்பாக்களைப் பிற நூலாசிரியர்கள் எவ்வெவ் வகையில் மேற்கோளாகக் கையாண்டிருக்கின்றனர் என்பது பற்றிப் பல மேற்கோள்களை எடுத்துக் கூறிச் சொற்பொழிவாற்றினர். இது மிகுந்த ஆராய்ச்சித் திறமுடையதாயிருந்தது. சில இடங்களில் பொதுமக்களால் பின்பற்றக் கூடாத அளவில் காணப்பட்டாலும் அறிவிற்கு விருந்தாக அமைந்திருந்தது.

முடிவில் குறட்பாக்களை மக்கள் படித்து உணர்வதால் சமுதாயமே சிறந்து விளங்கும் எனக் கூறி, 'ஒவ்வொருவரும் திருக்குறளைப் பொருளுடன் படித்துணரவேண்டும்' என்று அவர் வேண்டிக்கொண்டது தகுந்த பயனையளித்தது. பலர் அவ்விடத்திலேயே திருகுறட் பிரதிகளை விலைக்கு வாங்கினர். இச்சொற்பொழிவு ஒரே நாளில் முடியப்பெறுமல் பல நாட்கள் தொடர்ந்து நடைபெறுவதாக அமைந்திருக்குமாயின், மிகச் சிறந்த பயன் அளிக்கும் என்பது என் நம்பிக்கையாகும்.

பயிற்சி

பின் வருவனவற்றைப் பற்றி மதிப்புரை வரைக:

1. ஒரு நாடகக் காட்சி.
2. கலைக்காட்சி.
3. நூல் நிலையத்தில் எடுத்துப் படித்த ஒரு புத்தகம்.
4. வீரத் தமிழர்.
5. எங்கள் தமிழ்ப்பாட நூல்.

iii. இலக்கியப் பாராட்டுக் கட்டுரை.

சங்கரன் எழுதிய கட்டுரை

நான் படிக்கும் 'சுதந்திரத் தமிழ் வாசகம்' என்னும் புத்தகத்தின் செய்யுட் பகுதியில் முற்கால, இடைக்கால, இக்கால இலக்கிய வகைகளைச் சேர்ந்த பல நூல்களினின்றும் பலவகைச் சுவையும் அமைந்த பாக்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. செய்யுட் பகுதியானது வாழ்த்துப் பகுதி, அறவுரைப் பகுதி, கதைப் பகுதி, பல்சுவைப்பகுதி எனப் பாகுபாடு செய்யப்பட்டிருப்பதே அதன் விரிந்த தன்மையைக் காட்டுகிறது. கதைப் பகுதியில் பல நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நளவெண்பாவும் ஒன்று.

நளவெண்பாவை இயற்றிய ஆசிரியர் புகழேந்திப் புலவர் எனப்படுவார். இவரது இயற்பெயர் மறைந்து புகழ்ப்பெயரே பெயராக நிலைபெற்ற தன்மையே இவரது சிறப்பைக் காட்டுகிறது. மேலும் 'வெண்பாவிற் புகழேந்தி' என்றும் பாராட்டப் பெற்றவர் இவர். இந்நூலின் மூன்று காண்டங்களில் முதலாவதாகிய சுயம்வர காண்டத்திலிருந்து சில செய்யுட்கள் பாடமாக அமைந்துள்ளன.

நிடதநாட்டுச் சிறப்பும், நளமகாராஜன் செங்கோன்மையும், நளன் சோலைக்குச் செல்வதும், அங்கு அன்னத்தைப் பார்ப்பதும், அதைப் பிடிக்கச் செல்வதும், அன்னம் வருந்துவதும், நளன் அதை விட்டதும், அது அவனிடம் தமயந்தியின் அழகைச் சொல்லிவிட்டு நளன் பெருமையைத் தமயந்தியிடம் கூறுவதற்கு வான்வழியே பறந்து செல்வதுமாகிய நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

இந்நிகழ்ச்சிகளைக் கூறும் முறையில் அமைந்துள்ள பாக்கள் கற்பனைத் திறமும், பொருட்செறிவும் உடையனவாக விளங்குகின்றன. அன்னம் தன்னை அரசன் பற்றியதற்கு வருந்துவதையும், அரசன் அதனைத் தேற்றுவதையும் கூறும் பகுதி மிகவும் அழகாக அமைந்துள்ளது.

செய்யுள் நடை மிகவும் இனிமையும், எளிமையும் வாய்ந்தது. தட்டுத் தடங்கலின்றி ஓடும் நதியைப்போல் பாக்களின் நடை செல்கின்றது. இந்நூலாசிரியர் 'வெண்பா யாப்பில் நிகரற்ற புலவர்' எனப் பாராட்டப்படுவது மிகவும் பொருத்தமே.

iv. தீர்மானங்களைத் தயாரித்தல்

தீர்மானங்களைத் தயாரித்தல், ஜனநாயக நாட்டில் மக்கள் தங்கள் விருப்பங்களை அடைதற்கு ஒன்றுகூடி, ஆலோசனை செய்து முடிவாகவுள்ள வேண்டுகோளை அரசியலாருக்கோ, பொது மக்களின் பிரதிநிதியாகவுள்ள தலைவர்களுக்கோ அனுப்புவதாகும். அம்முறையில் மாணவர்களும் கல்விப் பயிற்சியில் தங்களுக்கு நன்மையாகத் தோன்றும் சில கருத்துக்களைப் பள்ளித் தலைமையாசிரியருக்குத் தீர்மானங்களாக அனுப்பலாம்.

பெரிய மகாநாடுகளில் தீர்மானங்களை நிறைவேற்றுவதை நேரிலோ, அன்றிப் பத்திரிகைகளிலோ நீங்கள் பார்த்திருக்கலாம். அவ்விதமே பலவகைப்பட்ட கழகங்களும் தத்தமக்கேற்ற முறையில் தீர்மானங்களைச் செய்து, குறிப்பிட்ட அதிகாரிகளுக்கும், அரசாங்கத்திற்கும் அனுப்பிவருகின்றன. மாணவர்கள் எதிர்காலப் பிரஜைகள் ஆதலின், அவர்கள் தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் பயிற்சி பெறுவது மிகவும் நல்லது. இங்குச் சில தீர்மானங்கள் மாதிரிக்காகக் கொடுக்கப்படுகின்றன.

பள்ளி மாணவர் கழகத் தீர்மானங்கள்

தலைமையாசிரியர்கட்கு
உயர்நிலைப்பள்ளி,
திருநெல்வேலி.

அன்புமிக்க தலைமையாசிரியரவர்களே!

நமது பள்ளி மாணவர் கழகம், மாணவர் கல்விப் பயிற்சியின் நலன் கருதிச் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. தாங்கள் அன்பு கூர்ந்து, அவற்றைச் செயல்முறையில் நடைபெறுமாறு செய்யவேண்டுமென்று பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தீர்மானங்கள்

1. தமிழரின் தனிப் பெருவிழாவாகிய பொங்கல் விழாவையும், திருவள்ளுவர், கம்பர், பாரதியார் போன்ற புலவர் பெருமக்கள் விழாக்களையும் தக்க முறையில் நமது பள்ளியின் ஆதரவில் நடத்த வேண்டுமென்று இக்கழகம் தீர்மானிக்கிறது.

2. மாணவர்க்கு வேண்டிய பென்சில், பேனா, காகிதம் முதலியவற்றை விலைக்கு வாங்கிக் கொள்வதற்கு மாணவர் ஐக்கிய வாணிப நிலையம் ஒன்று நிறுவுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கலாசாலை அதிகாரிகளை இக்கழகம் வேண்டிக் கொள்கிறது.

V. வரவேற்புரை

சென்னை மகாண முதலமைச்சர்

உயர்திரு பி. எஸ். குமாரசாமிராஜா அவர்களுக்கு

மதுரை நகரமாந்தர் வாசித்தளித்த

வரவேற்பு இதழ்

பாரதத் தாயின் சீரிய புதல்வரே வருக!

வருக! வருக! தங்கள் வரவு நல்வரவாகுக! சேவையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டு பொதுநலப் பணியை இதமுறப் புரிந்து, நாட்டின் விடுதலை நலம்பெறக் கண்ட சுதந்திர வீரத் தியாக மூர்த்தியே வருக!

பல்லாண்டுகள் இடையறாது பண்ணிய பணியால் திண்ணிய உடலும், நுண்ணிய அறிவும், கண்ணிய உளமும் பெற்ற புண்ணிய மூர்த்தியே! தங்களை முதலமைச்சராகப் பெற்றமைக்கு மகிழ்ந்து வரவேற்கின்றோம்.

நிலைகலங்காத தலைவரே வருக!!

கூட்டுறவுக் கழகம், இராமநாதபுரம் கோட்டக் கழகம் போன்ற பல கழகங்களின் தலைவராகப் பல ஆண்டுகள் செம்மையுறப் பணி புரிந்து, நன்மைவழி பல வகுத்த அறிவும், ஆற்றலும் பெற்ற அமைச்சர் தலைவரே வருக! இம்மாநகரத்தை யடுத்துள்ள சிற்றூர்கள் சிலவற்றில் சரியான போக்குவரவுக்குரிய பாதைகளும், சுகாதார வசதிகளும், மருத்துவச் சாலைகளும், கல்விச்சாலைகளும் இல்லாதிருக்கின்றன. இக்குறைகள் நீங்கவும், மின்சார வசதிகளால் வேளாண்மை ஓங்கவும் ஆவன செய்துதருமாறு, தங்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

எல்லோர்க்கும் நலம் செய்யும் நல்லோய் வாழ்க!!!

தங்களை முதலமைச்சராகப் பெற்ற நம் மாகாணம் கல்வி, செல்வம், கைத்தொழில் முதலிய பலவிதத் துறைகளிலும் முன்னேற்றமடைந்து மக்கள் ஒன்றுபட்டு வாழ வழிவகுத்து நிறைவேற்றும் தாங்கள் மேலும் சிறந்து வாழ்க!

மதுரை,
10—12—49.

தங்கள்பால்
அன்பும், நம்பிக்கையும் உள்ள
நகரமாந்தர்.

ஆறும் பாரக் கட்டுரைப் பகுதி

I. நாடகம்

சிரம் பரிசளித்த செம்மல்

காட்சி I.

காலம் —மாலை

இடம் —முதிர மலைச்சாரல்

பாத்திரங்கள் —குமணன், வழிப்போக்கன், சாத்தனார்

குமணன் :— (தனிமையில்) மனம் நிம்மதியற்றிருக்கின்றது. ஏன்? அரசுரிமையை என் தம்பிக்கு நானே விரும்பிக் கொடுத்தேன். அப்படியிருக்க, ஏன் இந்தக் கவலை? நான், தன தானியங்களை இழந்ததற்கு வருந்தவில்லை; மாடமாளிகை இல்லாமைக்கு வருந்தவில்லை; சுற்றத்தாரைப் பிரிந்து வந்ததற்கு வருந்தவில்லை. பின் ஏன் இந்தக் கலக்கம்? (சிந்திக்கிறான்) — அருங்கலை பயின்று அழகுறக் கவிபாடும் கவிஞர்கள் என்னை நாடிவந்து ஏமாற்ற முறுவார்களே?—ஆம்—அந்த நினைப்புத்தான் என்னை வருத்துகிறது போலும்!—என் தம்பி இளங்குமணன் என்னைப் போன்றவனல்லன்; அற்பர் உறவால் அறிவிழந்து உழல்கின்றான் அவன்; கல்வியறிவில்லா மூடன்; கலையுணர்ச்சியற்ற கசடன்; புலவோர்க்கு அளியாப் புன்மையன்; இரக்கமற்ற இழிஞன்! (ஒருவன் வருகிறான்)

வந்தவன் :— (படபடப்புடன்) வணக்கம்! வணக்கம்! வள்ளால்...(தயக்கம்.)

குமணன் :— நண்பரே! ஏன் இவ்வளவு தயக்கம்? உற்றதென்ன? உரைக்கலாமே!

வந்தவன் :— இந்த அநியாயத்தை எவ்வாறு சொல்வேன்? அரசே! எதிர்பாராத செய்தி!

குமணன் :— அதனால் தான் இவ்வளவு தயக்கம்? ஆத்திரப்படவேண்டாம். அமைதியாகக் கூறும்.

வந்தவன் :— எப்படிக் கூறுவேன்! நாவெழவில்லையே! தங்கள் தம்பி...

குமணன் :— தம்பிக்கு என்ன? விரைவில் சொல்லுவீர். அவனுக்கு ஏதும் தீங்கு நேர்ந்து விட்டதா?

வந்தவன் :— அப்படியொன்றும் இல்லை, ஐயனே! தங்கள் உள்ளத்துயர்வும், அன்பின் பெருக்கும் என் சொல்வேன்!

குமணன் :— என்னைப் புகழ்வதிருக்கட்டும். உமது விஷயத்தைச் சொல்லும்.

வந்தவன் :— அரசே! தங்கள் தம்பி தங்களைக் காட்டிற்கு ஓட்டியதுமன்றித் தங்கள் தலையை துணித்து வருபவர்க்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாகவும் பறை சாற்றியுள்ளான். இந்தக் கொடுமைக்கு என்ன செய்வது?

குமணன் :— அப்படியா! ஒன்றுக்கும் உதவாத, எலும்பும், தோலும் நிறைந்த என் தலைக்கு இவ்வளவு பெருமை கொடுத்திருக்கிறான் என் தம்பி? மண்ணோடு மண்ணாக மக்கிப் போகக்கூடிய எனது உடலும் பிறர்க்கு உபயோகப்படுவதென்றால், அது கிடைத்தற்கரிய பாக்கியமன்றோ?

வந்தவன் :— அரசே! பொறுமைக்கும் ஒரு எல்லை வேண்டும். அன்றியும்........(புலவர் பெருந்தலைச் சாத்தனார் வருகிறார்.)

சாத்தனார் :— வாழ்க! வாழ்க! மன்னவ! வளர்க நும் பெருமை!

குமணன் :— வணக்கம். வண்டமிழ்ப் புலவீர்! வருக! இங்கு அமர்க! (புலவர் உட்காருகிறார்) தம் போன்ற பேரறிஞரைத் தக்கவாறு வரவேற்கும் வசதியற்றவனா யிருக்கிறேன்; வருந்தற்க. தமது வருகையால் எனது உள்ளங் குளிர்ந்தது.

சாத்தனார் :—இயற்கை வசதிகளிருக்கும் போது, செயற்கைப் பொருள்களுக்குச் சிறப்பில்லை. மயில்கள் நடனமாடி யழைக்கின்றன; குயில்கள் இன்னிசைபாடி வரவேற்கின்றன; மலர்கள் இன்முகங் காட்டுகின்றன. அரும்புகள் பனிநீர் தெளிக்கின்றன. செடிகள் சாமரம் வீசுகின்றன. இத்தகைய வரவேற்பு, எவர்க்குக் கிடைக்கும்? எங்குக்கிடைக்கும்?——வள்ளால், நாம், தம்மைக் காணவிரும்பி அரண்மனையடைந்தோம்; அங்குக் கண்டிலம். பின்னர்த் தாம் வனம் போந்த செய்தி யறிந்து, பலவிடங்களிலுந் தேடியலைந்து, எதிர் பாராத விதமாக இங்குக் கண்டோம். களிபேருவகை கொண்டோம்.

குமணன் :— என்னை நாடி வந்த தாங்கள் இவ்வளவு சிரமப்பட நேர்ந்தது பற்றி வருந்துகிறேன். மன்னிப்பீராக. புலவீர்! அரண்மனையில் இளங்குமணன் முதலாக அனைவரும் சுகமே யிருக்கின்றனரா?

சாத்தனார் :— அனைவரும் சுகமே!......தமது இளவல்,........ அவன் பெயர்.....

குமணன் :— இளங்குமணன்.

சாத்தனார்:— இளங்குமணன் —— அல்லன் —— அமணனென்று அழைப்பது பொருந்தும். அவன் தனது துன்மந்திரிகளோடு சேர்ந்து, புரியுங் கொடுமைகள் ஒன்றிரண்டல்ல. நகர மாந்தரனைவரும் கண்ணீருங் கம்பலையுமாகக் காட்சியளிக்கின்றனர்; மதியில்லாவானம் போல், பொலிவிழந்துள்ளது தமது நகரம்.

குமணன்:— எல்லாம் இறைவன் செயல். பேரறிவுடையீர்! தாம் என்னை நாடிவந்த......

சாத்தனார்:— காரணந்தானே தாம் விரும்புவது? அரசே! "கொடிது கொடிது! வறுமை கொடிது!" என்னும் மெய்மொழி தமக்குத் தெரிந்ததே. (பாடுகிறார்)

விருத்தம்

அடுப்பது நெருப்பைக் கண்டும் அனேகநாள் ஆன நாங்கள்
உடுப்பது மின்றி வீட்டில் உணவிற்கும் வருந்து கின்றோம்
தொடுப்பது பசிநோய் அந்தத் தொல்லையாம் வறுமை நீங்கக்
கொடுப்பவர் நீரே யாவீர் கொடைமிகு வள்ள லேறே.

குமணன்:— ஐயோ! அருங்கலைச் செல்வம் படைத்த தாங்கள் பெரும்பொருட் செல்வமின்றி வருந்தினீர்கள். என்ன கொடுமையிது! புலவரே! நான் அரசனாக வாழ்ந்த காலத்தில் தாங்கள் வந்திருக்கலாகாதா? இந்த நாள்—நான் அரசிழந்து இருக்கையிழந்து—சரியான ஊணுறக்கமின்றி—ஏற்பார்க்கு ஏதும் கொடுக்க வழியின்றி மனம் நொந்த நாள்—வந்தீர்களே. (சற்றுச் சிந்தித்து) ஆம், அதுவே சரி. புலவரே! எனக்காக ஒன்று செய்யுங்கள். உங்களை வெறுங்கையுடன் அனுப்ப மனம் வரவில்லை. என் தம்பி என் தலையைக் கொண்டு வருபவர்க்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாகப் பறைசாற்றியுள்ளானும். ஒன்றுக்கும் பயன்படாத இவ்வுடம்பு தங்கள் வறுமையை நீக்கப் பயன்படுமாயின், இதனினும் நான் பெறக்கூடிய பேறு யாது? ஆகவே தாங்கள் என் தலையைக் கொண்டுபோய்த் தம்பியிடம் கொடுத்து வறுமையை போக்கிக் கொள்ள வேண்டுகின்றேன். இதோ என் தலையை எடுத்துச் செல்லும். (வாளை உருவுகிறான்.)

சாத்தனார்:— பொறும்! பொறும்! (நெருங்கி வாளைப் பிடித்துக்கொள்கிறார்.) இவ்வுலகத்தில், உம்மைப்போன்ற உயர் குணம் படைத்த உத்தமர் வேறு ஒருவருமிரார். ஐயனே! உமக்குப்பின் யாம் வாழவோ! உமது உயிரினும் பெரிதோ எமது வறுமை. புண்ணியத்தைக் கொடுத்தான் கன்னன். தன்னையே கொடுத்தான் சிபி— முற்காலத்தில். அதுவும் கொடுத்த வாக்கை நிறைவேற்ற—சிரம்

பரிசளிக்கத் துணிந்த செம்மலே! உமது கொடைத் திறம் எமது வறுமையைப் போக்கிவிட்டது. ஆனால்! — மன்னவ! உமது சிரம் எமக்குரியதாய்விட்டது. அதனைப் பத்திரமாகக் காத்து வைத்திருக்க வேண்டும். எமது சொத்திற்கு அழிவு நேராதவண்ணம் அதனைக் காத்திடும். வேண்டும்பொழுது வந்து பெற்றுக்கொள்வோம். யாம் சென்று வருகின்றோம். வாழ்க! (புலவர் செல்கிறார். குமணன் கவலையுடனிருக்கின்றான்.)

காட்சி 2.

காலம் —நண்பகல்.

இடம் — அரண்மனை.

பாத்திரங்கள்—இளங்குமணன், அமைச்சர் முதலாயினோர்.

(பெருந்தலைச் சாத்தனார் பொய்த்தலையொன்றைக் கையில் கொண்டுவருகிறார்.)

சாத்தனார்:— அரசே! குமணவள்ளலின் தலையைக் கொண்டு வந்தோம். நீர் பறைசாற்றியபடி ஆயிரம் பொன் கொடும். (தலையைக் காட்டுகிறார்)

இளங்குமணன்:— (தலையை வாங்கிப் பார்க்கிறான். உடம்பு நடுங்குகிறது). நான் காண்பது உண்மையா? இது—ஆம்!— அரசன் தலைதான்! — அரசன் — கும—ணன். கு—ம—ணன் — என்னுடன் பிறந்த சகோதரன்! — அண்ணன்! — உடம்பு நடுங்குகிறதே! இரத்தம் துடிக்கிறது; இரண்டும் — — ஒரே இரத்தம்! — அண்ணா! அண்ணா! யாவன் உம்மைக் கொன்றனன்! இந்தச் சண்டாளனை — (வாளை உருவி வீசுகிறான். சாத்தனார் ஒதுங்க, வாள் தூணில் மோதுகிறது) (தயக்கம்) — சண்டாளன்! கொலைஞன் — யாவன்? (யோசிக்கிறான்.)

சாத்தனார்:— (முன்வந்து) நீர்தான்! பணந்தருவதாகப் பறைசாற்றினீர். பாவத்தைக் கருதாமல் கொன்றோம். குமணன் ஒருவனைக் கொன்றால், வறுமைப் பிணியால் மரணப்படுக்கையிலுள்ள எமது குடும்பத்தார் பலர் மடிவதைத் தடுக்கலாம். உறவினர் பலரைக் காக்க, உறவல்லாத ஒருவனைக் கொன்றோம். அதுவும் பொருளைக் கருதி. நீர் பெரும் பொருள் தருவதாகப் பறை சாற்றாதிருந்தால், யாமும் குமணனைக் கொன்றிருக்கமாட்டோம். எனவே, கொலைக்கு மூல காரணம் — ?

இளங்குமணன்:— நான், — நானே காரணன்! ஆம்! நானே கொலைகாரன்! தமையனைக் கொன்ற சண்டாளன்! அண்ணனைக்

கொன்ற அசடன்! கெட்டேன்! கெட்டேன்! கெடுக என்னுயிர் என்று, (குத்துவாளைத் தன் மார்பிற்பாய்ச்சத் துணிந்து, ஓங்குகிறான். சாத்தனார் அவன் கையைப் பிடித்துக்கொள்கிறார்.)

சாத்தனார் :— மன்னா, பொறும்! அவசரப்படாதீர். யாம் புலவர்! வாக்குவன்மையுடையோம்! எமது வாக்கால் இறந்தார் பிழைத்தலுங் கூடும். நீர் பறைசாற்றியபடி தலைக்கு விலையாக முதலில் ஓராயிரம் பொன் கொடும். பின்னர் உமது சகோதரரை உயிர்பெற்றெழச் செய்வோம். அதற்குப் பரிசாக என்ன கொடுப்பீர்?

இளங்குமணன் :— அருந்தமிழ்ப் புலவீர்! எனது அண்ணனை உயிருடன் காணப்பெற்றால் ஆயிரங்கோடிப் பொன் தருவேன்; அல்லது—நீர் எதை வேண்டினும் கொடுப்பேன்.

சாத்தனார் :— உண்மைதானே!

இளங்குமணன் :— உண்மை! முக்காலும் உண்மை! பைந்தமிழ்ப் பாவல! அறிவீனத்தால் நான் செய்த பிழை பொறுத்து, எனது ஆருயிர்த் தமையனை உயிர்ப்பித்தருளும். நான் அவரது பாதங்களில் பன்முறை வணங்கி மன்னிப்புக் கேட்பேன். அண்ணன் இரக்கமுள்ளவர்; அன்பு மிக்கவர்; என்னை உள்ளன்போடு நேசிப்பவர்; நிச்சயமாக மன்னிப்பார். புலவர் பெரும என்று, (புலவர் கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சுகிறான்.)

சாத்தனார் :— புரவல! பொறுமையோடிரும். இப்பொழுதே சென்று குமணவள்ளலை அழைத்து வருவேன். விடைகொடும். (புலவர் செல்கிறார்.)

2. மாணவர் பள்ளியாட்சிமன்ற நிகழ்ச்சி

எங்கள் உயர்நிலைப்பள்ளி மாணவர் பள்ளியாட்சி மன்றம் 15—10—49 ஆம் நாள் மாலை நான்கு மணிக்குக் கூடியது. அங்கத்தினர்களும், அமைச்சர்களும் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்திருந்தனர். அங்கத்தினரல்லாத மாணவர்களும், ஆசிரியர்களும் பார்வையாளராக வந்தமர்ந்திருந்தனர்.

மன்றத்தின் காவலன் சபாநாயகர் வருகையை அறிவிக்கச் சபாநாயகர் சபைக்குள் வரும்பொழுது எல்லோரும் எழுந்து நின்று வரவேற்றனர். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது.

முதலில், அமைச்சர்கள் 'மாணவர் நீதிமன்றம்', 'மாணவர் பொருளகம்', 'மாணவர் ஐக்கிய வாணிப நிலையம்', 'நூல் நிலையம்', 'மன்ற விதிகள் அமைப்புக்குழு' முதலியவற்றைப் பற்றிய மசோதாக்களை கொணர்ந்து நிறைவேற்றினர்.

இரண்டாவதாக அங்கத்தினர், மாணவர் முன்னேற்றம்பற்றி அமைச்சர்களைக் கேட்ட வினாக்களுக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தக்க விடையளித்தனர். வினாக்களும், விடைகளும் சில சமயங்களில் நகைச்சுவை யுடையனவாக இருந்தன.

மூன்றாவதாக அங்கத்தினர்களிற் சிலர் சில தீர்மானங்களைக் கொணர்ந்து, அவைபற்றிப்பேசிப் பிரேரேபணை செய்தனர். இரண்டு தீர்மானங்கள் அமைச்சர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேறின. மூன்று தோல்வியுற்றன.

முடிவில் கூட்ட ஒத்திவைப்புப் பிரேரேபணையை ஒருவர் கொண்டுவர, அது நிறைவேறவே கூட்டம் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுத் தேசீய கீதத்துடன் முடிவுற்றது.

இங்ஙனம்
கண்ணப்பன்,
செயலாளர்.

---

3. மாணவர் மன்றத்தின் ஆண்டறிக்கை

இராஜா சேதுபதி போர்டு உயர்தரக் கலாசாலை
மாணவர் மன்ற ஆண்டறிக்கை
1947—48

22—6—47ல் நடந்த மாணவர் மன்றப் பொதுக்கூட்டத்தில், அங்குச்சாமி தலைவராகவும், கணேசன் உதவித் தலைவராகவும், இராமேசுவரன் செயலாளராகவும், தங்கத்துரை நிதிக் காப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றுமுதல் அவர்கள் மாணவர் மன்ற நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டனர், பதின்மர் செயற் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்ற ஆண்டில் முப்பத்திரண்டு சாதாரணக் கூட்டங்களும் ஆறு விசேடக் கூட்டங்களும் நிகழ்வுற்றன. அவற்றுள் இருபத்தொரு விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவுகளும், ஏழு விஷயங்களைப்பற்றி விவாதமும், நான்கு நாடகங்களும் நடைபெற்றன. கம்பர் விழா, திருவள்ளுவர் திருநாள், மகாத்மா பிறந்த நாள், இரவீந்திரநாத் தாகூர் நினைவுநாள் ஆகிய நான்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. மாணவர் போட்டி விளையாட்டும், சொற்பொழிவுப் போட்டியும், மாறுவேடப் போட்டியும், மாணவியர் இசைப் போட்டியும், விளையாட்டுப் போட்டியும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாற்றப்பட்டுச் சென்ற நான்கு ஆசிரியர்களுக்குப் பிரிவுபசார மளிக்கப்பட்டது. குற்றாலத்திற்கும், பொன்மலை இரயில்வேத் தொழிற்சாலைக்கும் மாணவர் உல்லாசப் பிரயாணஞ் சென்று வந்தனர். இந் நகரத்திற்கு வந்த கல்வி மந்திரியவர்களும், கல்வியிலாகாத் தலைமை யதிகாரியவர்களும் மன்றத்தின் சார்பில் வரவேற்கப்பட்டனர். இவ்வூரில் வழக்கமாக நடைபெற்றுவரும் பங்குனித் திருவிழாவிலும், சித்திரைத் திருவிழாவிலும் நமது சாரணப்படை பேருதவி புரிந்தது.

வரவு செலவு விபரம்

வரவு

சென்ற ஆண்டுக் கையிருப்பு	...	ரூ.	256—0—0
நன்கொடை வரவு	...	ரூ.	1475—4—0
சந்தா வரவு	...	ரூ.	586-12—0
நாடக வரவு	...	ரூ.	2397-13—0
சில்லறை வரவு	...	ரூ.	38—2—0
மொத்த வரவு		ரூ.	**4753-15—0**

செலவு

நூல் நிலையத்திற்குப் புத்தகம் வாங்கிய வகையில்		ரூ.	1500— 0—0
கலாசாலைக்கு வானொலிப் பெட்டி	,,	ரூ.	750— 0—0
நாடகச் செலவு	,,	ரூ.	158— 8—0
பரிசுப் பொருள்கள்	,,	ரூ.	787—11—0
பத்திரிகைகள்	,,	ரூ.	361—12—0
உபசாரச் செலவு	,,	ரூ.	29— 5—0
உல்லாசப் பிரயாணச் செலவு	,,	ரூ.	126— 0—0
அச்சுக்கூலி	,,	ரூ.	52— 6—0
தபாற் செலவு	,,	ரூ.	12— 7—6
ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்த வகையில்		ரூ.	161— 4—0
மொத்தச் செலவு		ரூ.	**3939 — 5—6**
செலவு போக நாளது தேதியில் கையிருப்பு		ரூ.	**814 —9—6**

பழம்புத்துடி. } அங்குச்சாமி, **தலைவர்,** இராசேசுவரன், **செயலாளர்,**

4. வானொலிச் சொற்பொழிவு

சாத்துக்கவிகள்

நவீன சாதனங்கள் தோன்றப் பெறாத பழங்காலத்தில் நூலாசிரியர்கள் தாம் எழுதிய நூலை மக்களிடம் பரப்ப வெகுபாடுபட வேண்டியிருந்தது. அவர்கள் புலவர்களையும், அரசர்களையும், வள்ளல்களையும் நாடிச் சென்று, தாம் இயற்றிய நூல்களைப் படித்துக் காட்டவேண்டும். அவர்கள் ஒருங்கு கூடிய பேரவையில் அவர்கள் ஒப்புக்கொள்ளுமாறு, நூலைப் படித்துப் பொருள் கூறுவதற்கு அரங்கேற்றம் என்று பெயர்.

அரங்கேற்றம் என்றால் சாமானியமா? நூலை அரங்கேற்றுகையில் ஆங்குள்ள புலவர்கள் கூறும் தடைகளுக்கெல்லாம் தக்க விடை கூறவேண்டும். ஆகவே, இக்கால மதிப்புரைகளிலும், விமர்சனங்களிலும் காணப்படும் குணதோஷ ஆராய்ச்சி மிகவும் கண்டிப்பான முறையில் நடைபெறும். அரங்கேற்றம் நூலாசிரியர்க்குக் கடினமான பரீட்சையாகும். இப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களே புலவர்களாக ஒப்புக்கொள்ளப்படுவர். அதன் பின்னரே அவர்களியற்றிய நூல் பொதுமக்களிடைப் பரவும்.

இம் முறையில் தொல்காப்பியம் என்னும் ஒல்காப் புகழ் படைத்த இலக்கண நூல் நெடுமாறன் அவைக்களத்து அரங்கேறியதாகக் கூறப்படுகிறது. சங்கப் புலவர்கள் கூடிய பேரவையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தை அரங்கேற்றுதற்குப் பட்ட சிரமம் கொஞ்சமன்று என்று கன்னபரம்பரைக் கதை கூறுகிறது. 'சீவக சிந்தாமணி அரங்கேற்றம் நிகழ்கையில் அதிலுள்ள காமச் சுவை கண்டு ஐயுற்ற சைனத் துறவிகள் உள்ளம் தெளியுமாறு 'நரி விருத்தம்' என்ற நூலைப் பேரின்பமாகப் பாடினார் திருத்தக்கத் தேவர்' என்ற வரலாறு ஒன்றுண்டு. சேக்கிழார் பெரியபுராணம் பாடி, அநபாயன் அவைக்களத்தே அரங்கேற்றினார் என்று, கூறப்படுகிறது. செய்யுள் நூல்களேயன்றி, உரை நூல்களும் அரங்கேறின என்பதற்கு இறையனார் களவியலுரை அரங்கேற்றம் பற்றிக் கூறப்படும் வரலாறு சிறந்த உதாரணமாகும். இவ்வாறு அரங்கேற்ற நிகழ்ச்சிகள் பண்டு தொட்டு நம் காட்டிலிருந்ததற்குப் பல சான்றுகள் உள்ளன.

அரங்கேற்றம் நிகழ்கையில் புலவர்கள் வேண்டுமென்றே நூலிற் குறை கூறுதலும் உண்டு எனத் தெரியவருகிறது. புகழேந்தியார் நளவெண்பாவைப் பாடிக் குலோத்துங்கன் அவைக்களத்தே படிக்

கேற்றுகையில், அவர்மீது அழுக்காறு கொண்ட ஒட்டக்கூத்தர் அடிக்கடி பல குறைகளைக் கூறிவந்தார் என்று, விநோத ரசமஞ்சரி கூறுகிறது.

இத்தகைய நிகழ்ச்சியொன்று தொல்காப்பிய அரங்கேற்றம் பற்றியும் கூறப்படுகின்றது. இதனைக் கூறியவர் புகழ்பெற்ற உரையாசிரியராகிய நச்சினார்க்கினியராதலின் நாமும் அவ்வாறே கூறுவோம். தொல்காப்பியர் மேல் ஏதோ காரணத்தாற் சினம் கொண்ட அகத்தியர் தமது பிற மாணவரை நோக்கி, 'நீர் தொல்காப்பியன் இயற்றிய நூலைக் கேட்டலாகாது' எனக் கட்டளையிட்டார். தொல்காப்பியரோ தம் நூலைக் கேட்கும்படி நண்பரான அதங்கோட்டாசானை வேண்டினர். அதங்கோட்டாசான் என் செய்வார். ஒருபுறம் குருவின் ஆணை. மறுபுறம் நண்பர் வேண்டுகோள். ஒன்றற்கொன்று மாறுபட்ட இரண்டையும் ஒருங்கே நிறைவேற்ற முனைந்தார். எப்படி? நண்பர் வேண்டுகோட்படி நூலைக்கேட்பது; குருவின் ஆணைக்காக அதைக் குறைகூறிக் கழித்துவிடுவது எனத் தீர்மானித்தார். ஆனால், அவர் எழுப்பிய தடைகளுக்கெல்லாம் எளிதில் விடை கூறி வெற்றிகொண்டார் தொல்காப்பியர். இத்தகைய நிகழ்ச்சிகள் இன்னும் பலவுள.

அரங்கேறியபின் புலவர்கள் நூலுக்குப் பாராட்டுரை வழங்குவர். அப்பாராட்டுரைகளே சிறப்புப்பாயிரம் என்றும், சாத்துக்கவி என்றும் கூறப்படும். பெரும் புலவர்களால் சாத்துக்கவிகள் பெற்ற பெருமையால் நூல்கள் மக்களால் போற்றப்படும். அவற்றின் ஆசிரியர்களும் புகழடைவர்.

சிறப்புப்பாயிரம் நூலையும், ஆசிரியரையும் பாராட்டுவதோடமையாது பிற்காலத்தார்க்குச் சிறந்த சரித்திரச்சான்று பகர்வதாகவும் அமைந்திருக்கும். ஆகவே அது ஒவ்வொரு நூலுக்கும் இன்றியமையாச் சிறப்பினை அடைவிக்கின்றது. 'ஆயிர முகத்தான் அகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே' என்றபடி நூலுக்கின்றியமையாத பாயிரத்தில் ஒருவகையாகவுள்ள சிறப்புப்பாயிரம், பாராட்டாக அமைவதுடன் வேறு சில வுண்மைகளையும் கூறுவதாயமையும். அது ஆக்கியோன் பெயர், நூல் தோன்றிய வழி, நூல் வழங்கும் எல்லை, நூலின் பெயர், யாப்பு, நூல் கூறும் பொருள், நூலைக் கேட்டற்குரியோர், நூற்பயன், நூலியற்றிய காலம், அரங்கேறிய இடம், நூல் இயற்றிய காரணம் என்ற பதினொரு விஷயங்களையும் விளக்குவதாக அமையும். சாத்துக்கவிகள் வெறும் பாராட்டுரைகளாகக் காணப்படினும் ஊன்றி நோக்குவோர்க்கு அவையும் சிறப்புப்பாயிரமாக விளங்கும். மேலும் அவை கற்பனைத்திறனும், கவிதைப் பண்பும் உடையனவாகத் திகழும்.

வடவேங் கடம்தென் குமரி யாயிடைத்
தமிழ்கூறும் நல்லுல கத்து
வழக்கும் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரித்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

இதன் கண் வடவேங்கடம் தென்குமரி யென்பது நூல் வழங்கும் எல்லையாகவும், அக்காலத்துத் தமிழ் வழங்கும் எல்லையாகவும் அமைந்திருப்பதுடன் இக்காலத்தார்க்கும் தமிழ் நாட்டெல்லைக்குச் சிறந்த ஆதாரமாயுமுள்ளது. எழுத்தும், சொல்லும், பொருளும் நூல் கூறும் பொருளாம். 'முந்துநூல்கண்டு முறைப்பட எண்ணி' என்பது நூலியற்றிய வழியும், காரணமும் கூறுகின்றது. 'நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து' என்பது, அரங்கேறிய இடம் கூறுகின்றது. நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் நூலைக் கேட்ட புலவன். "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பதால் ஆக்கியோன் பெயரும, அவன் சிறப்பும் தெரிகின்றன. இற்றையத் தமிழ் நாட்டெல்லைக்கும், தமிழன் வரலாற்றுக்கும் இச் சிறப்புப்பாயிரம் சிறந்த ஆதாரமாக விளங்குகின்றது. இம்முறையைப் பின் பற்றியே பல இலக்கண இலக்கிய நூல்களுக்கும் சிறப்புப் பாயிரங்கள் எழுந்தன.

திருக்குறளுக்குச் சங்கப் புலவர் பலரும் சாத்துக்கவிகள் பாடியுள்ளனா. அப்பாடல்களை ஒருங்கு தொகுத்துத் திருவள்ளுவமாலை என வழங்கலாயினர். அப்பாடல்கள் நூலையும், நூலாசிரியரையும் சிறப்பித்துக் கூறும் வகை அறிந்து இன்புறத்தக்கன.

இக்காலத்தில், ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களின் முன்னுரைகளை மட்டும் படித்தாலே ஒருவன் தமிழறிஞனாகி விடலாம் என்று கூறுவதுண்டு. முன்னுரைகட்கே இச் சிறப்பிருக்குமாயின், நூல்களுளவெல்லாம் தமை சிறந்ததும், தான் தோன்றியமொழி செல்லாத்

தேயங்களினும் சென்று புகழொளி பரப்பியதும், உலகப் பொது நூலுமான திருக்குறளைப் பற்றி, நத்தத்தனார் அவ்வாறு கருதியதில் வியப்பென்ன? அவர் இதனைப் படித்தபின் 'போய் ஒருத்தர் வாய்க்கேட்க நூல் உளவோ' என்று வியந்தார். 'தமிழ்ப் புலவனுக் கேட்க வீற்றிருக்கலாம' என்று கருதினார். 'ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும்' என அதன் எண்ணிக்கையைக் கூறி மகிழ்ந் தார். அவர் கருதியது பாட்டாயிற்று.

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவன்
ஆய்க்கேட்க வீற்றிருக்க லாம்."

மதுரைத் தமிழ் நாகனார் என்னும் புலவர், 'எல்லாப் பொரு ளும் இதன் பாலுள' என்று எண்ணினார். பிறகு அதனையே எதிர் மறை முகத்தால் 'இதன் கண் இல்லாத எப்பொருளும் இல்லை' எனக் கருதினார். ஆகவே 'சொல்லாற் பரந்த பிறபாக்களால் என்ன பயன்? வள்ளுவர் சுரந்த பாவே வையகத்திற்குத் துணை' என்று முடிவு கட் டினார். அவர் கருத்தும், முடிவும் பின்வரும் பாட்டாக வெளிவந்தன.

"எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்கண்
இல்லாத எப்பொருளும் இல்லைபால்—சொல்லால்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துளே."

இடைக்காடனார் என்றொரு புலவர் மிகவும் சுருக்கமாக,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" —என்று பாடினார்.

கடுகுக்குள் ஏழுகடல் அடங்குதல்போல் குறுகியவடிவுள்ள பாவில் விரிந்த பொருள் அடங்குதல் கண்டுணர்ந்து, மகிழ்ந்து அவ்வாறு பாராட்டினார். அப்பொழுது அருகில் நின்ற ஔவையார் அச் சிறப்பும் திருக்குறளுக்குச் சரியாகாது என்று கருதி,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" ——எனப் பாராட்டினார்.

அணுவைச் சிதைத்து அழிவுக்கு வழிகாட்டிவிட்டு, ஆக்கமுறை யில் அதனைப் பயன்படுத்த வழி தேடித் திரியும் இன்றைய உலகிற்கு ஔவையார் நெடுநாளைக்கு முன்பே நல்வழிகாட்ட முனைந்தது

போல் இருக்கிறதல்லவா? உலகம் ஆக்கம் பெற அவர் கூறிய வழி திருக்குறளே யாகும்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் சாத்துக்கவி பெற்றது ஒரு பெருங்கதை. அவர் சீரங்கத்திலுள்ள புலவர்களிடம் சென்றார்; தாம் இயற்றிய ராமாயணத்திற்குச் சாத்துக்கவி வேண்டினார். புலவர்கள் தில்லை மூவாயிரவரிடம் முதலில் சாத்துக்கவி பெற்று வாரும் என்று கூறிவிட்டனர். உடனே கம்பர் சிதம்பரம் சென்றார்; மூவாயிரவரையும் ஒருங்கு காண்பது எப்படி? என்று, பலநாள் அலைந்தார். முடிவில் ஒரு நாள் வழி தானாக ஏற்பட்டது. மூவாயிரவருள் ஒருவர் வீட்டுக் குழந்தை பாம்பு தீண்டி யிறந்தது. எல்லோரும் கூடியிருந்தனர். கம்பர் இதுதான் சமயமென்று அங்கே சென்றார். இவரைக் கண்டதும் இவர் வருகையின் காரணத்தை யறிந்த ஒருவர், 'சாத்துக்கவி கேட்க நல்ல சமயம் தேடிவந்தீர்' என் றிகழ்வாகக் கூறினார். மற்றொருவர், 'இவரது கவிதை இறந்த குழந்தையை எழுப்பித் தருமா?' எனக் கேட்டார். உடனே கம்பர் கலைமகளைத் தியானித்து நாகபாசப் படலத்தில் சில செய்யுட்களைப் பாடினார். குழந்தை உடனே உயிர்பெற்றெழுந்தது. மூவாயிரவரும் மகிழ்ச்சியுற்றனர். அந்நிலையிலும் அவர்கள் தென்னாட்டுப் பெருங் கவிஞராக யாங்கள் கருதும் அம்பிகாபதியிடம் சாத்துக்கவி பெற்று வந்தால், தாங்களும் சாத்துக்கவியளிப்பதாகக் கூறினர். அதனைக் கேட்டதும் கம்பர் அடைந்த வியப்புக்கும், மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. தம்மினும் தம் மைந்தர் புகழ் பரவியிருப்பது கண்டு, களித்தார். உடனே மீண்டு சென்று, தம் மைந்தரிடமே சாத்துக்கவி வேண்டினார். அம்பிகாபதியும்,

சம்பன் றோடன் னுமைசெவி சாத்துபூங்
கொம்பன் றோடன் கொழுநனி ராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை பாச்செயும்
கம்ப நாடன் கழல்தலை யிற்கொள்வாம்.

என்று பாடியளித்தார். இதில் ராமாயணக் கதை வரலாறும், அதனைத் தமிழிற்பாடிய ஆசிரியர் பெயரும், அவர்பால் சாத்துக்கவி செய்த ஆசிரியர்க்குள்ள மரியாதையும் விளங்குதல் காண்க. இதனைப் பெற்றபின் கம்பர் தில்லை மூவாயிரவரிடமும், சீரங்கத்தாரிடமும் சாத்துக்கவிகள் பெற்றார் என்பர். மகன் என்பது மாணவனையும் குறிக்கும். மகனிடம் சாத்துக்கவிபெறும் வழக்கம் உண்டென்பது, பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் தம் புதல்வராகிய வரந்தருவாரிடம் சாத்துக்கவி பெற்றிருப்பதாலும் தெரிய வருகிறது. இவ்வாறு நூலின் புகழ் விளங்குவதோடு சரித ஆதாரங்களாகவும் நின்று நிலவும் சாத்துக்கவிகள் இன்னும் பலவுள.

5. துணை விதிகள் வகுத்தல்

(இ. சே. போ. உ. க. — மாணவர் மன்றம்)

விதி 12. — மாணவர்கள் அரசியலில் கலந்துகொள்ளுதல் கூடாது.

துணை விதிகள் 1. சொல்வன்மை படைத்த அரசியற் பெருந் தலைவர்களை அழைத்து, அரசியல் அல்லாத மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றும் படி செய்யலாம்.

2. தலைமையாசிரியருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னரே, மேற்கூறிய தலைவர்களை அழைக்கலாம்.

3. அரசியல் தலைவர்கள் சொற்பொழிவாற்றுங் கூட்டங்களுக்குக் கலாசாலைத் தலைமையாசிரியரே தலைமைவகிக்க வேண்டும். அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட வேறு ஆசிரியரொருவர் தலைமை வகிக்கலாம்.

6. தேர்தல் அறிக்கை

ஐயன்மீர்!

நான் மதுரைநகர் வாசி; இருபது ஆண்டுகளாக நியாயவாதத் தொழில் புரிந்து வருபவன்; போதுமான வருமானமுள்ளவன்; காங்ரஸ் கட்சியைச் சேர்ந்தவன்; சுதந்திரப் போரில் ஈடுபட்டுப் பன்முறை சிறைவாசம் புரிந்தவன்; பொதுநலப் பிரியன்; சென்ற ஒன்பது ஆண்டுகளாகப் பொதுநலங் கருதி, மதுரைநகர பரிபாலன சபையில் உறுப்பினனாக இருந்தவன். போக்குவரவு மிகுதியாயுள்ள தெருக்களில் நடந்து செல்வோர்க்கு மோட்டார் முதலிய வண்டிகளால் அடிக்கடி பேராபத்துக்கள் விளைந்தமையின், அவற்றைப் போக்கி நகர மாந்தர்க்கு அபாயம் நேரிடாத முறையில், நகரப் பெருந் தெருக்களின் இருபுறங்களிலும் மேடைகள் போடவேண்டுமென்ற பிரேரபணையை முதன் முதல் நகர பரிபாலன சபைக்குக் கொண்டு வந்தவன் நானே.

மேலும் நான் உறுப்பினனாக இருந்த காலத்தில்தான் கோபுரங்களில் பெருவிளக்குகள் போடப்பட்டன. வீடுகள்தோறும் குழாய்க் கக்கூஸ்கள் வைக்கப்பட்டன. ஏழை மக்களின் நன்மைக்காக இலவசப் பிரசவ, மருத்துவச்சாலைகள் பல நகர பரிபாலனச் செலவில் நிறுவப்பட்டன. நான் இதுவரை புரிந்துள்ள பொதுநலச் சேவைகள் பலவும் பொதுமக்கட்கு நன்கு தெரிந்தனவே. அதிக

விளம்பரம் தற்புகழ்ச்சிக் கிடமாகுமென்று அஞ்சி, இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

அடுத்துவரும் சென்னை மாகாணச் சட்டசபைத் தேர்தலில் மதுரைநகரத் தொகுதிக்கு நான் அபேட்சகனாக நிற்கின்றேன். கல்வித் துறையிலும், சுகாதாரத் துறையிலும் நமது மாகாணத்தை வளர்ச்சியுறச் செய்வதும், பாட்டாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழிகாண்பதும் எனது முக்கியமான கொள்கைகளாகும். எனது வாக்குறுதியினின்று சிறிதளவும் பிறழமாட்டேன் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

ஆகையால், என்னை ஆதரித்து, வாக்களிக்குமாறு இத்தொகுதியிலுள்ள வாக்காளர்கள் அனைவரையும் நான் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
பொதுநலப் பணியாற்ற விரும்பும்,
இ. திருஞானசம்பந்தன்,
பி. ஏ., பி. எல்.

மதுரை,
17—3—1949.

7. பழம்பாடப் பயிற்சி

நான்காம் பாரம்

இலக்கணம்

1. எழுத்து

1. எழுத்தென்பது யாது? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. முதலெழுத்துக்கள் யாவை? சார்பெழுத்துக்கள் யாவை?
3. உயிரெழுத்துக்களின் வகை யாவை? மெய்யெழுத்துக்களின் பிரிவுகள் யாவை?
4. சுட்டெழுத்தென்றால் என்ன? அவை யாவை?
5. வினாவெழுத்தென்றால் என்ன? அவை யாவை?
6. இனவெழுத்தென்றால் என்ன? அவை யாவை?
7. உயிர்மெய் எழுத்தென்றால் என்ன? அவை எத்தனை?
8. குற்றியலுகரம் என்றால் என்ன? அதன் வகை யாவை?
9. குற்றியலுகரமாவது யாது?

10. குற்றியலிகரமாவது யாது?

11. ர, ற, ல, ழ, ன, ண-இவை எவ்வாறு பிறக்கின்றன?

12. போலி என்றால் என்ன? மூவிடப் போலிகட்கும் உதாரணம் தருக.

2. சொல்

1. சொல் என்றால் என்ன?

2. பகுபதம், பகாப்பதம்—இவற்றை விளக்குக.

3. சொல்லின் நால்வகை யாவை?

4. இடுகுறிப் பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப் பெயர்—இவற்றை விளக்குக.

5. அறுவகைப் பெயர் யாவை?

6. வினையாலணையும் பெயர் யாவை?

7. ஆகுபெயர் என்றால் என்ன?

8. காடு, வெள்ளை, மலை-இவற்றை இயற்பெயராகவும், ஆகுபெயராகவும் வைத்து வாக்கியங்கள் எழுதுக.

9. திணை, பால், எண், இடம்-இவற்றின் வகைகளை விளக்குக.

10. எவ்வெவ் வேற்றுமைகட்கு உருபு இல்லை? பிற வேற்றுமைகளின் உருபுகளைக் கூறுக.

11. உருபு மயக்கம்—உதாரணம் கூறி விளக்குக.

12. யான், நீ என்பன உருபேற்கும்போது எவ்வாறு மாறுபடும்?

13. வினைச்சொல் என்றால் என்ன?

14. முக்காலங்களுக்கும் உள்ள இடைநிலைகள் யாவை?

15. காலங்காட்டும் விகுதிகள் யாவை?

16. வந்தான், உண்டான், படிப்பேன், பாடுகின்றான்—பகுபத உறுப்புக்கள் கூறுக.

17. வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்—இவற்றை விளக்கி உதாரணம் தருக.

18. ஏவல் வினை, வியங் கோள் வினை—வேறுபாடு கூறுக.

19. உடன்பாடு, எதிர்மறை—இவற்றை விளக்கி, உதாரணம் தருக.

20. நடந்தேன், வந்தன, உண்ட, சென்று, ஓடாது, நில்லா, பணியாத, பார்த்திலன்—உடன்பாட்டை எதிர்மறையாகவும், எதிர்மறையை உடன்பாடாகவும் மாற்றுக.

21. இடைச்சொல் என்றால் என்ன?

22. இடைச்சொற்களாக வருவன யாவை?

23. ஏ, ஓ, மற்று, தான்—இவ்விடைச் சொற்கள் எவ்வெப் பொருளை உணர்த்தும்?

24. உரிச்சொல் என்றால் என்ன?

25. ஒரு பொருள் குறித்த பல வுரிச்சொற்கள் யாவை?

26. 'கடி' என்னும் உரிச்சொல்லின் பல பொருள்கள் யாவை?

27. குறிப்பால் பொருள் தருவன யாவை? வகைக்கு ஒரு உதாரணம் தருக.

28. செய்யுள் விகாரங்கள் யாவை?

3 வழக்கு

1. தகுதி வழக்கென்றால் என்ன? அதன் வகை யாவை? ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.

4 வழு, வழுவமைதி

1. வழுவாவது யாது?

2. வழுவமைதி என்றால் என்ன?

3. திணைபால் வழுவமைதிகள் எவ்வெக்காரணங்களால் வரும்?

4. இடவழுவமைதி எவ்வாறு வரும்? உதாரணம் தருக.

5. சொற்றொடர்

1. சொற்றொடர் என்பது யாது?

2. தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர்—இவற்றை விளக்கி உதாரணம் தருக.

3. பாடம் படித்தான், தின்பண்டம், செந்தமிழ், இராப்பகல்—இவை இன்ன தொடர் எனக் கூறுக.

4. வாழ்நாள், மதிமுகம், சோறுண்டான், மலை ஏறினான், உயிர்மெய், கருங்கடல்-தொகைநிலைகளைத் தொகாநிலைகளாக்குக.

5. நாட்டையாண்டான், கொன்ற களிறு, நீண்ட கழி, நீரைக் குடித்தான், மலர்போன்றகை-இவற்றைத் தொகாநிலைகளாக்குக.

6. புணர்ச்சி

1. புணர்ச்சி என்றால் என்ன?

2. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி இவைகளை உதாரணம் காட்டி விளக்குக.

3. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

4. மட்குடம், மரவேர், வாழைப்பழம், கற்பலகை, அறநெறி, பூச்செடி—மூவகை விகாரங்களையும் காட்டுக.

5. உடம்படு மெய் யென்றால் என்ன ?

6. யகர வுடம்படுமெய் எங்கெங்கு வரும் ?

7. வகர வுடம்படுமெய் எங்கெங்கு வரும் ?

8. சாடாண்டான், அழிவில்லை, நாடியாது, விளைவியாது- புணர்ச்சி இலக்கணம் கூறுக.

9. எண்ணுப் பெயர்கள் எவ்வாறு புணரும் ?

10. உயிரீற்றில் வருமொழியோடு புணரும்பொழுது இயல்பாகப் புணரும் இடங்கள் யாவை ?

11. தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி—இடம் மூன்றையும் விளக்கி உதாரணம் தருக.

7. யாப்பும் அணியும்

1. யாப்பு என்றால் என்ன ? அதன் பயன் என்ன ?

2. நால்வகைப் பாக்களின் பொது இலக்கணத்தை விளக்குக.

3. செய்யுள் உறுப்புக்கள் யாவை ?

4. ஈரசைச்சீர், மூவசைச்சீருக்கு வாய்பாடுகள் யாவை ?

5. அணியிலக்கணம் என்றால் என்ன ?

6. உவமை, உருவகம், எடுத்துக் காட்டுவமை- இவ்வணிகளை விளக்கி உதாரணம் தருக.

7. உவமையணியில் வரும் நான்கு உறுப்புக்கள் யாவை ? விளக்கி உதாரணம் தருக.

8. உவமையணியின் வகைகளை விளக்கி உதாரணம் தருக.

9. உருவகவணியின் வகைகளை விளக்கி உதாரணம் தருக.

8. மொழிப் பயிற்சி

1. வாக்கியம் என்றால் என்ன ?

2. வாக்கியத்திலுள்ள உறுப்புக்கள் யாவை ?

3. அவன் வந்தான், நான் பாடம் படித்தேன்,- இவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளகளைக் கூறுக.

4. தனிவாக்கியம், தொடர்வாக்கியம், கலவைவாக்கியம்- இவற்றை விளக்கி உதாரணம் தருக.

5. மனை பெய்தது, வயறு பசித்தது, கினவு கண்டான், சுவற்றில் எழுதினுன், ஒண்டியாய்ச் சென்ருன்-இவற்றில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்துக.

6. தக்க இடங்களில் ஏற்ற நிறுத்தற் குறிகளை இடுக:

தம்பி வா கண்ணன் வந்தான் கருணை செய்தான் அவர் கூறியது பின்வருமாறு

ஆஹா இந்தக் கட்டிடம் எவ்வளவு உயரம் தம்பி படித்தாயா ஆசிரியர் பாட்டைப்படி என்று சொன்னுர்

ஐந்தாம் பாரம்

1. அளபெடை என்ருல் என்ன?
2. உயிரளபெடை எவ்வாறு வரும்?
3. ஒற்றளபெடை எவ்வாறு வரும்?
4. இடுகுறிப் பெயரென்ருல் என்ன?
5. காரணப் பெயராவது யாது?
6. காரணவிடுகுறிப் பெயரென்ருல் என்ன?
7. ஆகுபெயரின் வகைகள் யாவை?
8. வேற்றுமை என்ருல் என்ன?
9. வேற்றுமை எத்தனை? அவற்றின் உருபும், பொருளும் யாவை?
10. பகுபத வுறுப்புக்கள் யாவை?
11. அவ்வுறுப்புக்கள் பகுபதங்களில் நிற்குமிடம் யாவை?
12. வினைப் பகுபதங்களில் பகுதியும், விகுதியும், இடைநிலையும் உணர்த்துவன யாவை?
13. வினைமுற்றின் வகைகள் யாவை?
14. ஏவல் வினைமுற்று என்ருல் என்ன?
15. வியங்கோள் வினைமுற்று என்ருல் என்ன?
16. ஏவலுக்கும், வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடென்ன?
17. முற்றெச்சம் என்ருல் என்ன?
18. நஞ்சினும் கொடியன, யாவரும் வருக, அறமே வெல்லும், எய்தவருமோ இருநிதியம்—இவற்றில் வரும் இடைச்சொற்களின் பொருள்களைக் கூறுக.
19. ஒரு குணம் தழுவிய உரிச் சொற்கள் யாவை?
20. வழக்கு என்ருல் என்ன?

21. வழக்கு எத்தனை வகைப்படும்?

22. இயல்பு வழக்கின் பிரிவுகள் யாவை?

23. இலக்கணப் போலிக்கும், எழுத்துப் போலிக்கும் வேறுபாடு என்ன?

24. தகுதி வழக்கு என்றால் என்ன?

25. இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி இவற்றை விளக்கி உதாரணம் தருக.

26. மூவகை விகாரங்களையும் உதாரணம் கூறி விளக்குக.

27. குற்றியலுகரத்தின் முன் உயிர் வரின் எவ்வாறு புணரும்?

28. குற்றியலுகரத்தின் முன் யகரம் வரின் எவ்வாறு புணரும்?

29. வன்றொடர்க் குற்றியலுகரம் வல்லினத்தோடு எவ்வாறு புணரும்?

30. பண்புப் பெயர்கள் பிற சொற்களோடு புணரும்பொழுது அடையும் விகாரங்கள் யாவை?

31. செய்யுளுக்குரிய பிற பெயர்கள் யாவை?

32. செய்யுள் உறுப்புக்கள் யாவை?

33. செய்யுள் வகைகள் யாவை?

34. வெண்பாவின் இலக்கணம் என்ன?

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் என்ன?

36. அணியாவது யாது?

37. சிலேடையணியை ஒரு உதாரணம் கூறி விளக்குக.

38. மடக்கணிக்கு உதாரணம் தருக.

39. எவ்வெவ் வெழுத்துக்கள் எவ்வெவ்விடத்தில் பிறக்கும்?

40. உடனிலை மெய்ம்மயக்க மென்றால் என்ன?

41. வேற்றுநிலை மெய்ம்மயக்க மென்றால் என்ன?

42. உடனிலை-வேற்றுநிலை மெய்ம்மயக்கங்களுக்கு மட்டும் வரும் மெய்கள் யாவை?

43. இருவகையிலும் மயங்கும் எழுத்துக்கள் யாவை?

44. விளியேலாப் பெயர்கள் யாவை?

45. விளியேற்குப்போது பெயர்கள் எவ்வாறு மாறும்?

46. ஆகுபெயர்களை விளக்கி உதாரணம் தருக.

47. ஒன்றற்கொன்று மாறுபடும் ஆகுபெயர்கள் யாவை?

48. செய்யுமென் முற்று எவ்வெப் பால்களில் வரும்? எவ்வெப் பால்களில் வராது?

49. பொது வினைகளாக வருவன யாவை?

50. எதிர்காலப் பெயரெச்சம் எவ்வாறு திரியும்?

51. வினையெச்சத் திரிபை உதாரணம் கூறி விளக்குக.

52. தன்மைப் பன்மை வினைமுற்றுக்கு உதாரணம் தருக.

53. முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கு உதாரணம் தருக.

54. மன், சின், தில், அம்ம, மோ, மதி — இவ்விடைச் சொற்கள் எவ்வெப் பொருள்களில் வரும்.

55. கெழு, மல்லல், கூர், கழி, தட, வை - இவ்வுரிச் சொற்கள் உணர்த்தும பொருள்கள் யாவை?

56. தொகைகளில் முன்மொழி, பின்மொழி, பன்மொழி, புற மொழிகளில் பொருள் சிறந்து நிற்கும் தொகைகள் யாவை?

57. மரபு விளக்கி உதாரணம் தருக.

58. காலவழுவமைதி எவ்வெக் காரணங்களால் வரும்?

59. முக்காலத்தினும் உள்ள பொருளை எக்காலத்தால் சொல்ல வேண்டும்?

60. ஒரு பொருட்பன்மொழி என்றால் என்ன?

61. இரட்டைக் கிளவி என்றால் என்ன?

62. அடுக்குத் தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடென்ன?

63. உபலட்சணம் என்றால் என்ன?

64. நீ படித்த ஒரு வெண்பாவைச் சீர்பிரித்து, வாய்பாடு கூறுக.

65. தளை என்றால் என்ன?

66. இயற்சீர் வெண்டளை எவ்வாறு வரும்?

67. வெண்சீர் வெண்டளை என்றால் என்ன?

68. வெண்பாவின் வகைகள் யாவை?

69. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?

70. வேற்றுமையணியை விளக்கி, உதாரணம் தருக.

71. வஞ்சப்புகழ்ச்சி யணிக்கு உதாரணம் தருக.

72. நிரனிறை அணி என்றால் என்ன? உதாரணம் தருக.

73. உவமையணியை உதாரணத்துடன் விளக்குக.

74. உருவகவணி என்றால் என்ன ?

75. அகப்பொருள் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை ?

76. முதற்பொருள் என்றால் என்ன? ஐந்திணைக்குமுரிய முதற்பொருள்கள் யாவை ?

77. கருப்பொருள் எனப்படுவன யாவை ?

78. புறப்பொருள் திணைகள் யாவை ?

79. புறப்பொருள் திணைகளை விளக்குக.

மொழிப்பயிற்சி

1. செய்தி, கட்டளை, வினா, உணர்ச்சி வாக்கியங்களை விளக்கி உதாரணம் தருக.

2. செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றும் வகையை உதாரணத்தின் மூலம் விளக்குக.

3. உடன்பாடு, எதிர்மறை—விளக்கி உதாரணம் தருக.

4. நேர்கூற்று, அயற்கூற்று—விளக்குக.

5. தாய்மொழிப் பற்றுடன் வாழச் சொன்னார் தலைவர். 'இன்று போய் நாளை வா' என்றான் இராமன். இவற்றுள் நேர் கூற்று எது? அயற்கூற்று எது?

6. நான்கு நேர்கூற்று வாக்கியங்கள் எழுதி, அவற்றை அயற் கூற்றாக மாற்றுக.

7. வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துக:

i நகரங்கள் சிறிதாய் இருந்தது.
ii கந்தனால் மரத்தை வளர்க்கப்பட்டது.
iii இதற்கு ரேடியம் எனப்படும்.
iv அவர் தன்னிடம் இருப்பதாகச் சொன்னார்.

8. சொற் பிழைகளைத் திருத்துக:

i சுவற்றில் எழுதினான்.
ii கோர்வையாகச் செய்தான்.
iii வயித்துப் பசி அதிகம்.
iv ஒரு கிணறைக் கண்டேன்.

9. வாக்கியங்களில் சொற்பொருத்தம் எவ்வாறு அமைய வேண்டும்?

10. 'ஐயந்திரிபற', 'கற்பனைமிகுந்த', 'அமிழ்தினும் இனிய,' 'காற்றினும்கடுக' — இத்தொடர்களை வைத்து வாக்கியம் அமைக்க.

11. மரபுத் தொடர்கள் சிலவற்றை வைத்து வாக்கியம் அமைக்க.

12. உவமைகளையும், பழமொழிகளையும் வைத்து வாக்கியம் அமைக்க.

13. நீ யறிந்துள்ள நிறுத்தக் குறிகள் யாவை? அவற்றை வாக்கியங்களில் இட்டுக் காட்டுக.

14. வல்லினம் மிகும் இடங்கள் யாவை? வகைக் கோர் உதாரணம் தருக.

15. வல்லெழுத்துக்கள் மிகா இடங்கள் யாவை? வகைக் கோர் உதாரணம் தருக.

கட்டுரை

நான்காம் பாரம்

1. கட்டுரைகளை எழுதத் தொடங்கு முன் சிந்திக்கவேண்டுவன யாவை?

2. கட்டுரைகளை என்னென்ன பகுதிகளாகப் பிரிக்கலாம்?

3. பொருள் விளக்கத்தில் கவனிக்க வேண்டிய நான்கு அம்சங்கள் யாவை?

4. கட்டுரைகளில் நான்கு வகை யாவை?

5. கதைக்கட்டுரையில் அடங்குவன யாவை? ஒவ்வொரு வகைக்கும் ஒரு கட்டுரை வரைக.

6. வருணனைக் கட்டுரை வகையில் அடங்குவன யாவை? ஒவ்வொரு வகைக்கும் ஒரு கட்டுரை வரைக.

7. ஆராய்ச்சிக்கட்டுரை வகையில் அடங்குவன யாவை? ஒவ்வொரு வகைக்கும் ஒரு கட்டுரை வரைக.

8. கடிதக்கட்டுரை வகையில் அடங்குவன யாவை? ஒவ்வொரு வகையையும் பற்றி ஒரு கடிதம் வரைக.

9. ஒரு தினசரிப் பத்திரிகையிலிருந்து ஒரு நாட் செய்திகளைப் பற்றிய குறிப்பு வரைக.

10. ஊர்ச் செய்தி: ஊரின் இயற்கையமைப்பு - மக்கள் தொகை - தொழில்கள் - சுகாதாரவசதி - குறைபாடுகள் - சீர் திருத்தங்கள் - இத்தலைப்புக்களை வைத்துக் கட்டுரை வரைக.

11. விழாச்செய்தி: திருக்குறட் சிறப்பு - திருவள்ளுவர் பெருமை - நிகழ்ச்சி - சொற்பொழிவுகள் - முடிவுரை.

12. உங்கள் ஊரில் சிறப்பாக நடந்த நிகழ்ச்சி யொன்றைப் பற்றி வரைக.

13. வழிச் செலவு: காரணம் - காலம் - பிரயாணம் செய்த வகை - வழிநடைக் காட்சி - முடிவு.

14. பெண்மக்கள் கடமை: பெண்மக்கள் சிறப்பு - நல் லியல்புகள் - மக்களை நன்முறையில் வளர்த்தல் - கடமைகள் - வீட் டுச் செலவு - சுகாதாரம் - பயன் - முடிவு.

15. ஈகை: ஈகை இன்னதென்பது - ஈகையின் சிறப்பு - ஈகையுடையோர் செயல்களும், உதாரணங்களும் - பயன் - முடிவு.

16. பாரி: பறம்பு - பாரி வீரமும், ஈகையும் - முல்லைக்குத் தேரளித்தது - இதனால் நாம் அறிவது - முடிவு.

17. காந்தியடிகள்: பிறப்பு - குணங்கள் - கல்வி - தொழில் - நாட்டுத்தொண்டு - சுதந்திரப்போர் - முடிவு.

18. சமூக முன்னேற்றம்: சமூகம் என்பது என்ன? - முன் னேற்றமடைவது எப்படி? - எவ்வெவ் வழிகளில் முன்னேற்றமடைய வேண்டும்? - நன்மைகள் - முடிவு.

19. செலவு: பொருட் செலவுக்குக் காரணங்கள் - செலவை வரையறைப்படுததுதல் - பயன் - முடிவு.

20. கல்வி: நால்வகைப்பொருள் - கல்வியின் இன்றியமை யாமை - கல்வி செல்வத்தினும் சிறந்தது - கற்கும் முறை - கற்றற் குரிய நூல்கள் - பயன் - முடிவுரை.

21. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்: சங்கத்தின் தோற்றம் - தோற்றுவித்தவர் நோக்கம் - வேலைகள் - இளைஞர் சங்கத்தின் தோற்றம் - இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தினர் கடமை - நன்மை - முடிவுரை.

22. தமிழ்மொழி: தமிழ்நாடு - முற்காலஎல்லை - இக்கால நிலப்பரப்பு - தமிழ் மொழியின் சிறப்பு - தொன்மை - தனி மொழி.

இலக்கண வரம்பு - நூல்களின் சிறப்பு - இக்கால நிலையும் மக்கள் கடமையும்.

23. மொழியும், அதன் பயனும்: மொழி என்பது என்ன? - மொழியின் தேவை - மொழியின்மையால் வரும் தீது - வளர்ச்சி - பண்பாடு - மொழியின் இன்றியமையாமை - சொற்களின் தோற்றம் - சிறப்பு - பயன்.

24. தமிழகத்துப் பெண்பாலார்: தமிழகம் - தமிழர் - பெண் பாலார் - வீரதாய்மார் - கல்விசைப் புலமை மெல்லியலார் - ஆற்றிய தொண்டு - அரிய குண நலன்கள் - பயன்.

25. கடிதங்கள்: கல்வித்துறைபற்றிய விவாதக் கடிதம் - உதவிக்கு விடைக் கடிதம் - கொண்டாட்டத்திற்குச் செய்ய வேண்டு வனவற்றை வினவி எழுதும் கடிதம் - கூட்ட அறிக்கை - நிகழ்ச்சி நிரல் - பொதுக்கூட்ட அழைப்பிதழ் - ஆண்டுவிழா அழைப்பிதழ் - நிகழ்ச்சிக்குறிப்பு - தீர்மானங்கள் தயாரித்தல்.

ஐந்தாம் பாரம்

1. தமிழ்மொழி: தமிழ் மொழியின் பெருமை:—இனிமை, பழமை, உயர்தனிச் செம்மொழியாக விளங்குதல், இலக்கியப் பெருக்கம், பல வழிமொழிகளைத் தோற்றுவித்தல், இளமை மாறு மலும், வழக்கிறவாமலும இருத்தல்.

பண்டையநிலை: — மூவேந்தர் போற்றியது, சங்கங்கள், புலவர்கள்.

இன்றையநிலை:- தாழ்வு, மொழிப்பற்றுக்குறைவு, அரசியல் புரட்சிகள், பிறமொழியாதிக்கம், நாடு அரசியற் பொருளாதாரத் துறைகளில் அடிமைப்பட்டது.

தமிழ் வளர்ச்சிக்கு நாம் செய்ப வேண்டுவன:— சங்கங்கள், தமிழ்ப் பள்ளிகள், தமிழ் நூல்களை வெளியிடல், தமிழ்ப் புலவரைப் போற்றுதல், தமிழ்க் கட்டாயப் பாடம், முதன் மொழியாக்குதல், பொருளியல், விஞ்ஞானம் முதலிய பல துறைகளிலும் புதுப்பித்து நூல்களை இயற்றுதல்.

முடிவுரை — தாய்மொழிப்பற்றே தாய்நாட்டுப்பற்று.

2. தாகூர்: தாகூர்பிறப்பு - குடும்பப்பெருமை - பெற் றோர் - கல்விப் பயிற்சி - இயற்கையில் விருப்பம் - இமயமலை, கங்கை முதலியவற்றின் அழகில ஈடுபடல் - இங்கிலாந்துப் பிரயாணம் - கவிதை எழுதுதல் - சிறு கதை - பத்திரிகைப் பாராட்டு - நாட கங்கள் - கீதாஞ்சலி - உலகப்புகழ் - நோபல் பரிசு - உலகப் பிர யாணம் - தாய்நாடு திரும்பல் - அரசியலில் ஈடுபடல் - சாந்திநிகே

தனம் - விஸ்வபாரதியமைத்த நோக்கம் - அமைப்பு - துன்பங்கள் இலக்கியச் சிறப்பு குணாதிசயங்கள் - காந்தியடிகளும், தாகூரும் - முடிவுரை.

3. பெண்கல்வி: முன்னுரை - கல்வி இருபாலார்க்கும் பொது என்பது - கல்வியின் இன்றியமையாமை - பெண்களுக்குரிய கல்வி - கற்றறிந்த பெண்மணிகள் - முடிவுரை.

4. கிராம வாழ்க்கை: கிராமம் என்பது யாது? - கிராம வாழ்க்கை - சிறப்புக் காரணம் - பயன் - முடிவுரை.

5. வாசகசாலை, நூல் நிலையங்களின் பயன்: கல்வியின் அவசியம் - தேடல் - கல்வி அறிவு பெறுதற்குத் துணை செய்வன - வாசகசாலையும், நூல் நிலையமும் - பயன் - முடிவுரை.

6. அயல்நாட்டுப் பிரயாணமும் அதன் பயனும்: முன்னுரை - அயல்நாட்டுப் பிரயாணத்தின் சிறப்பு - பயன் - முற்காலமும் இக்காலமும் - முடிவுரை.

7. யுத்தத்தினல் ஏற்படும் நன்மை, தீமைகள்: முன்னுரை - போர்க் காரணம் - போரால் விளையும் நன்மைகள் - தீமைகள் - முடிவுரை.

8. கலாசாலைச் சஞ்சிகையும் அதன் பயனும்: முன்னுரை - சஞ்சிகையின் பயன் - மாணவர் உற்சாகம் - நடத்தும் முறை - முடிவுரை.

9. பொருட்காட்சிச்சாலை: முன்னுரை - தோற்றும் காரணம் - நடத்தும் முறை - அமைப்பு - நன்மைகள் - முடிவுரை.

10. என் வாழ்க்கையின் நோக்கம்: முன்னுரை - குறிக்கோள் - நோக்கங்களில் வேறுபாடு - எனது நோக்கம் - காரணம் - முடிவுரை.

11. தொழிற் கல்வி: முன்னுரை - தொழிற் கல்வி - ஏட்டுக் கல்வி - தொழிற் கல்வியின் சிறப்பு - பயன் - முடிவுரை.

12. அறிவுள்ள அமைச்சன்: பிரதாபன் இயல்பு - முன்கோபம் - அமைச்சன் தைரியசீலன் - சிறைப்படுதல் - சிறைமீட்சிக்குச் செய்த உபாயம் - கணவனுக்கேற்ற மனைவி - அரசன் அமைச்சனை அன்புடன் வரவேற்றல் - முடிவுரை.

13. மானமே உயிர் என மதித்த மன்னவன்: போர்க் கொடுமைகளை நினைத்தல் - காவலர் பேச்சு - சேரமான் உயிர்விட எண்ணுதல் - தாகம் - காவலர் அலட்சியம் - மானத்தால் அரசன் உயிர்விடல்.

14. கேளிக்கைப் பிரயாணம்: முன்னுரை - பிரயாணம் இன்னதென்பது - நோக்கம் - முடிவுரை.

15. கவியும் கவிஞரும்: பாக்களின் வகை - செய்யுளாக இயற்றியதன் காரணம் - கவிதை உயிருள்ள உடல் போன்றது - ஒன்பான் சுவைகள் - கவிதையின் சிறப்பு - கவிதா சக்தி - உத்தமக் கவியின் இயல்பு - கவிதை நூல்கள் - முடிவுரை.

16. சங்கங்கள்: சங்கங்கள் அமைப்பதன் நோக்கம் - தோன்றி மறைவதன் காரணம் - எவ்வாறு அமைக்கவேண்டும்? - சங்கத்தின் வளர்ச்சி - நன்மை - முடிவுரை.

17. இன்சொல்: இன் சொல் எனப்படுவது யாது? - நன்மைகள் - சிறப்பு - இன் சொற் பேசுவது எளிது - முடிவுரை.

18. இயந்திரப் பெருக்கம் நன்மையா, தீமையா? இயந்திரங்களால் ஏற்படும் நன்மைகள் - இயந்திரங்களால் மனிதன் விலங்கியல் படைகிருன் - தீமைகள் - புதுமையில்மயக்கம் - ஏற்றத் தாழ்வுகள் - முடிவுரை.

19. கடவுள் நம்பிக்கை வேண்டுமா, வேண்டாமா? அவனின்றி ஓரணுவும் அசையாது - இயற்கையே உலகம் - அனுமானம் - மரம் எவ்வாறு உண்டாயிற்று? - வித்திலிருந்து மரமா? மரத்திலிருந்து வித்தா? - கடவுள் உண்டு என்று நம்புவதால் உள்ள நன்மை - முடிவுரை.

20. அருங்கலைச் செல்வர் பற்றிய மதிப்புரை: துணைப் பாடநூல் - நூல் கூறும் பொருள் - நோபல் பரிசு பெற்ற ஐந்து விஞ்ஞானிகள் - பிறப்பு - கல்விப் பயிற்சி - சிறப் பியல்பு - புதுமைகாணும் ஊக்கம் - உழைப்பு - முயற்சியில் வெற்றி - உலகத்தார் பாராட்டு - முன்னுரை போன்ற விளக்கம் - வானொலியின் நன்மைகளை நால் வகையாகப் பகுத்த சிறப்பு - முடிவுரை.

21. நான் பார்த்த நாடகம்: நாடகப் பாத்திரங்கள் - கூட்டம் - அமைதி - உரை நடையும், பாட்டும் - மின்சார விளக்குக்களின் அலங்காரம் - மேடை - திரை - நடிப்பு-கலைத்திறம்.

22. இலக்கியப் பாராட்டுக் கட்டுரை: முன்னுரை - நூலும், ஆசிரியரும் - பாக்கள் கூறும் கதைப் பகுதி - பொருட் சிறப்பு - நடைச் சிறப்பு - கற்பனைத் திறம் - முடிவுரை.

23. வரவேற்புரை: தலைப்பு - வரவேற்கும் முறை - பெருமை - செய்த தொண்டுகள் - குணச் சிறப்பு - சிறந்த தலைவர் - வேண்டுகோள் - வாழ்த்து.

24. பிரிவுபசாரம்: தலைப்பு - பெருமை - செய்த நன்மைகள் - குணச்சிறப்பு - வாழ்த்து.

25. கீழ்வரும் பொருள்களைப் பற்றித் தனித்தனி இரண்டு பக்கங்கட்கு மிகாமல் கட்டுரை வரைக:

1. மதுரை, மாமல்லபுரம், மேட்டூரணை, திருவரங்கம்.

2. கல்வி, ஒற்றுமை, பொறுமை, ஆறு, மலை, படக்காட்சி.

3. மாணவரும் தாய்மொழி வளர்ச்சியும், புலமையும் பரிசும், இயற்கைக் காட்சி, கடமையும், உரிமையும்.

4. சமூக முன்னேற்றம், தீண்டாமை யொழிப்பு, நாட்டின் அமைதி, கிராமச் சீர்திருத்தம்.

5. வாணிபம், கைத்தொழில், கூட்டுவாணிபம், கூட்டுறவுப் பண்டகசாலை, கிராமக்கைத் தொழில், செல்வ நிலையங்கள்.

6. கிராமக் கல்வி, முதியோர் கல்வி, கைத்தொழிற் கல்வி, சமூகக் கல்வி, அடிப்படைக் கல்வி.

7. இளைஞர் சங்கம், இலக்கியச் சங்கம், தமிழ்ச் சங்கம், சாரணர் இயக்கம், நூல் நிலையம், வாசகசாலை.

8. நீ செய்த தரைச் செலவு, கடற் செலவு, விமானச் செலவு, கால்நடைச் செலவு.

26. கடிதங்கள் வரைக:

1. கணிதம், வரலாறு, விஞ்ஞானம் இவற்றில் ஒன்றை விருப்பப் பாடமாக எடுத்துக்கொண்டமைக்குரிய விளக்கக் கடிதம்.

2. மாநாடு ஒன்றில் கலந்து தொண்டாற்ற விரும்பும் மாணவர் வரையும் கடிதம்.

3. மாணவர் கழக ஆண்டுவிழா அழைப்பிதழ்.

4. அவசரக் கூட்ட அழைப்பிதழ்.

5. உல்லாசப் பிரயாணத்திற்குப் பெற்றோரிடம் அனுமதி வேண்டல்.

6. கல்வித் திட்டம் சம்பந்தமாகத் தீர்மானங்களை நிறைவேற்றுதல்.

7. விடுமுறைக் கடிதம்.

8. வியாபாரக் கடிதம்.

9. செய்த பிரயாணத்தைப் பற்றி விளக்கி எழுதும் கடிதம்.

10. ஒரு சொற்பொழிவையோ, பாராட்டுக்கூட்ட நிகழ்ச்சிகளையோ விளக்கி நண்பனுக்கு எழுதும் கடிதம்.

27. பலவகைக் கட்டுரைகள்: இராமகிருஷ்ணரும் சமயப் பொது நோக்கமும், புத்தர் அருள் உள்ளம், காந்தியடிகளும் அஹிம்சையும், பாரதியாரின் மொழிப்பற்று, பழந்தமிழர் வீரம், தமிழ் மாதர் கற்பு, வ. உ. சிதம்பரனாரின் நாட்டுப்பற்று, விவேகானந்தர் கருத்து, வள்ளல் ஈகைத் திறம், மணிமேகலை வரலாறு, கண்ணகியின் கற்பு மாண்பு, சேரமான் கணைக்காலிரும்பொறை, இராமாயணக் கதை, பஞ்சதந்திரக் கதைகள், சிறுகதைகள், புத்தர் வரலாறு, மகாத்மா காந்தி, திருவள்ளுவர், கரிகாலன், சிவாஜி, அசோகர், தமிழ்மொழி வரலாறு, தாஜ்மஹால் வரலாறு, சமூகத் தொண்டு, பொதுநலப் பணி, தீண்டாமை யொழிப்பு, சமத்துவம், பெண் கல்வி, சீர்திருத்தங்கள், கூட்டுறவியக்கம், கிராமக் கைத் தொழில்கள், போக்குவரவுச் சாதனங்கள், வாணிபம், பயிர்த் தொழில், பண்டமாற்றும் செலாவணியும், ஆலைத்தொழில், ஆரம்பக் கல்வி, நடுத்தரக்கல்வி, விஸ்வபாரதி, முதியோர் கல்வி, கட்டாயக்கல்வி, கல்வித் துறைகள், தொழிற் கல்வி, ஆதாரக் கல்வி, நற்குடி முறைப் பயிற்சி, உடற்பயிற்சிக் கழகங்கள், தமிழர் நாகரிகம், கம்பர் கவியின்பம், தமிழ் இலக்கியச் சிறப்பு, பண்டைத் தமிழர் அரசியல், திருக்குறளின்பம், தமிழ் மொழியின் மேன்மை, தாய்மொழிப் பயிற்சி.